


# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI | Volume- 3 | Issue:270 | 15-04-2026 | புதன்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

13.04.2026 பங்குனி 30
திங்கள்கிழமை

சூரிய உதயம் 6.05

திதி:
தசமி இரவு 10.28 வரை பிறகு ஏகாதசி

நட்சத்திரம்:
திருவோணம் நண்பகல் 12.33 வரை. பிறகு அவிட்டம்

யோகம் :
அமிர்த / மரணயோகம்.

கரணம்
இன்று காலை 9.28 வரை தைதுலம் பின்பு இரவு 9.58 வரை கரசை பின்பு வணிசை

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று காலை 11.13 வரை மிருகசீரிஷம் பின்பு திருவாதிரை.

நல்ல நேரம்
காலை 7.00 – 8.00.
மாலை 3.00 – 4.00.

இராகு காலம்
மாலை 4.30–6.00 மணி.

எமகண்டம்
நண்பகல் 12.00–1.30 மணி.

குளிகை
காலை 6.00 – 7.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# “தொகுதி வரையறையால் தமிழ்நாடு பாதிக்கப்பட்டால்... இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துவிடுவோம்”

## பிரதமர் மோடிக்கு ஸ்டாலின் இறுதி எச்சரிக்கை

**சென்னை, ஏப்.15:**

“தமிழ்நாட்டை பாதிக்கும்படியோ, வட மாநிலங்களுக்கு அரசியல் வலிமையை கூட்டும்படியோ தொகுதி வரையறை நடந்தால் சும்மா இருக்க மாட்டோம். தமிழ்நாடு தன் எதிர்ப்பை கடுமையாக காட்டும். நீங்கள் இதுவரை பார்க்காத தமிழ்நாட்டை பார்க்க வேண்டியிருக்கும்” என முதல்வர் ஸ்டாலின் மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்தது அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில், “தேர்தல் பிரசாரத்துக்காக, நிற்காமல் ஓடிக் கொண்டே இருந்தாலும், இந்தக் கடமையை தவிர்க்க முடியாது.

நாளை மறுநாள் ஏப்ரல் 16, நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடர் கூடுகிறது. கூடுகிறது என்று சொல்வதைவிட, தமிழ்நாடு - மேற்கு வங்கத் தேர்தலுக்கு இடையில் வலுக்கட்டாயமாகக் கூட்டப்படுகிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

‘Delimitation’ என்ற தொகுதி மறுவரையறை தொடர்பாக அரசியல் சட்டத் திருத்தத்தை இந்தத் தொடரில் ‘புல்-டோஸ்’ செய்யப் போகிறார்கள். முதலில் இருந்தே இது பற்றி நாம் தொடர்ந்து எச்சரித்தோம். மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினோம். தமிழ்நாடு மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும் இருந்து, இதனால் பாதிப்படையவுள்ள மாநில முதலமைச்சர்களையும் - முக்கியக் கட்சித் தலைவர்களையும் சென்னைக்கு அழைத்து, கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டம் நடத்தினோம்.

“மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துங்கள்; அளவாகக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள், குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைபிடியுங்கள்” என ஒன்றிய அரசு சொன்னதையெல்லாம் நாங்கள் கேட்டோம். சொன்னதை ஒழுங்காகச் செய்ததற்காகவே எங்களுக்குத் தண்டனை தருவீர்களா? “தென்மாநிலங்கள் பாதிப்படையாது” என நாடாளுமன்றத்தில் வைத்துப் பிரதமர் அவர்கள் உத்தரவாதம் தர வேண்டும் என்று கேட்டோம். பதில் இல்லை. இதுக்காகப் பல்வேறு கட்சி எம்.பி.க்கள் பிரதமரை நேரில் சந்தித்து முறையிட நேரம் கேட்டோம். அதுவும் கிடைக்கவில்லை.





இப்படி, நாம் சொன்ன எதையும் அவர்கள் காதில் வாங்காமல், திமுக மட்டுமல்ல; எந்தக் கட்சியோடும் - எந்த மாநிலத்தோடும் - எந்த ஆலோசனையும் நடத்தாமல், அவர்கள் இஷ்டத்துக்கு செய்யப் பார்க்கிறார்கள். நேற்று, மரியாதைக்குரிய அம்மையார் சோனியா காந்தி அவர்களும், நாம் கேட்கும் அதே கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள்! பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் உள்ளிட்ட யாருக்குமே பதில் இல்லை!

இப்படி அவசரக அவசரமாக ‘Delimitation’ செய்ய நினைப்பது, பாஜக அரசின் அப்பட்டமான ஜனநாயக விரோதச் செயல்! இன்னும் சொன்னால், மாநில உரிமைகளைப் படுகொலை செய்திருக்கிறார்கள். இந்த ‘Delimitation’-ஐ எப்படி செய்ய போகிறார்கள் என்று தெரியவில்லை. அந்தச் சட்டத் திருத்தம் என்ன என்பது பற்றி, இதுவரை எந்த விளக்கத்தையும் கொடுக்காமல் இருக்கிறார்கள்.

இவர்கள் இப்படி மறைத்து மறைத்துச் செய்கிறார்கள் என்றால், கண்டிப்பாக ஏதோ பெரிய ஆபத்து இருக்கிறது என்று, அனைவருக்குமே அந்தச் சந்தேகம் வலுவடைகிறது. தென்மாநில மக்கள் பெரும் அச்சத்தில் இருக்கிறார்கள். நான் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கும், பிரதமர் மோடிக்கும், இந்த நேரத்தில் முக்கியமாக ஒன்று சொல்லிக் கொள்கிறேன்.

நடக்க இருக்கும் நாடாளுமன்றகூட்டத்தொடரில், எங்கள் எம்.பி.க்கள் கலந்து கொள்வார்கள். தமிழ்நாட்டை பாதிப்பது போன்றோ, வடமாநிலங்களுக்கு அரசியல் வலிமையை மேலும் வாரி வழங்குவது போன்றோ, ஏதாவது நடந்தால், தமிழ்நாட்டில் இருக்கும் நாங்கள் அனைவரும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டோம். தமிழ்நாடே ஸ்தம்பிக்கும். தமிழ்நாடு தனது எதிர்ப்பைக் கடுமையாகக் காட்டும். ஒவ்வொரு குடும்பமும் தெருவில் வந்து உட்காருவோம். தமிழ்நாடு முதலமைச்சராக இருக்கும் என்னுடைய தலைமையிலேயே மிகப்பெரிய போராட்டம் நடத்துவோம்.

“இது தேர்தல் காலம்தானே!” “இவர்கள் கவனம் அதில்தான் இருக்கும்!” “நாம் டெல்லியில் சைலண்டாகத் தமிழ்நாட்டின் தொகுதி மறுவரையறை செய்து விடலாம்” என்று மட்டும் நினைக்கவே நினைக்காதீர்கள்.

சொல்லும் நான் தமிழ்நாட்டு முதலமைச்சர் மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பேரியக்கத்தின் தலைவர். நீங்கள் இதுவரை பார்க்காத தமிழ்நாட்டைப் பார்க்க வேண்டியிருக்கும். 50-கள், 60-களில் பார்த்த பழைய திமுகவை இந்தியா மீண்டும் பார்க்க வேண்டியிருக்கும்.

“என்ன இவன் மிரட்டுகிறான்?” என்று நினைக்காதீர்கள். நான் உங்களை எச்சரிக்கிறேன். நீங்கள் அதை மிரட்டல் என்று நினைத்தாலும் எங்களுக்குக்கவலையில்லை. ஆம், தமிழ்நாட்டில் இருந்து அனுப்பி வைக்கப்படும் எச்சரிக்கை இது. தேர்தல், ஆட்சி அதிகாரம் இது எல்லாம் எங்களுக்கு இரண்டாம் பட்சம்தான். நாங்கள் சுயமரியாதைக்காரர்கள்! எங்களுக்குக் கொள்கைதான் முக்கியம்! மாநில உரிமைகள்தான் முக்கியம். அதுதான், அண்ணாவும் - கலைஞரும் எங்களுக்குக் கொடுத்துவிட்டுச் சென்ற உயிர்க் கொள்கை.

தமிழ்நாட்டுக்குத் தவறிழைத்துவிட்டு, வழக்கம்போல் சும்மா கடந்துசெல்ல நினைத்தால், நடப்பதே வேறு!. சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளில், அவர் மேல் ஆணையாகச் சொல்கிறேன். தமிழ்நாடு பாதிக்கப்பட்டால், இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துவிடுவோம். பிரதமர் மோடியே மீண்டும் சொல்கிறேன்... இது தமிழ்நாட்டில் இருந்து உங்களை நோக்கி விடுக்கப்படும் இறுதி எச்சரிக்கை” என தெரிவித்துள்ளார்..

# மகளிர் இடஒதுக்கீடு: “இனியும் தாமதம் கூடாது”: பிரதமர் மோடி

**புதுடெல்லி, ஏப்.15:**

நாடாளுமன்றம் உள்ளிட்ட மக்கள் மன்றத்தில் மகளிருக்கான இடஒதுக்கீட்டை உறுதி செய்யும் வகையிலான அரசின் முனைப்பை நாடு முழுவதும் உள்ள பெண்கள் பாராட்டி வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது: பல தசாப்தங்களாக நிலுவையில் இருந்து வந்த மகளிர் இடஒதுக்கீட்டை செயல்படுத்த அரசு உறுதியாக உள்ளது. 2029-ல் நடைபெறவுள்ள மக்களவை தேர்தல் மற்றும் அதையடுத்த மாநில சட்டமன்றத் தேர்தல்களில் மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்குவதை உறுதி செய்யும் முடிவை, நாடு முழுவதும் உள்ள பெண்கள் பாராட்டி வருகின்றனர்.

அடுத்த இரண்டு நாட்களில் நாடாளுமன்ற சிறப்புக்கூட்டம் கூடவுள்ளது.



இதில் பெண்களுக்கான இடஒதுக்கீடு சட்டத்தை நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கையைகொண்டுள்ளேன். இது தொடர்பாக அவையில் விவாதிக்க உள்ளோம். வளர்ந்த பாரத கட்டமைப்பு சார்ந்த பங்களிப்புக்கான வாய்ப்பாக இதை பெண்கள் பார்க்கின்றனர்.

நம் தேசத்தின் பெண்கள் பல்வேறு துறைகளில் தங்களது தடத்தை பதித்து வருகின்றனர். இசை, இலக்கியம், கலை, சினிமா, விளையாட்டு, புத்தொழில் என சாதனை படைக்கின்றனர். அது இளம் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு உத்வேகம் அளிக்கிறது. இந்த துறைகளை போலவே மக்கள் மன்றத்திலும் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். இது தொடர்பான கருத்து பல தசாப்தங்களாக விவாதிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது அதை அமல்படுத்தும் சூழல் உருவாகி உள்ளது. மகளிருக்கான இடஒதுக்கீட்டை அமல்படுத்த அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரவு அளிக்க வேண்டும்.

இந்த சட்டத்தை இயற்றுவதில் இனியும் தாமதம் ஏற்பட்டால் அது நம் தேச பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். இந்த சட்டத்தை இயற்ற நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான பெண்களின் ஆசியை வேண்டுகிறேன். நீங்கள் அனைவரும் உங்களது உள்ளூர் எம்.பி-க்களுக்கு வரலாற்று சிறப்புமிக்க இந்த நாடாளுமன்ற கூட்டத்தில் பங்கேற்குமாறு கோர வேண்டும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

# திருப்பூர்: விஜய் கூட்டத்தில் மயங்கி விழுந்த வேட்பாளர்; பெண்கள் 7 பேர் மயக்கம்

**திருப்பூர், ஏப்.15:**

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, அவினாசி, பல்லடம், காங்கேயம், தாராபுரம், உடுமலை, மடத்துக்குளம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளில் த.வெ.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து விஜய் நேற்று மாலை திருப்பூரில் பிரசாரம் செய்கிறார். இதற்காக சென்னையில் இருந்து இன்று விமானம் மூலம் கோவைக்கு வந்த விஜய், பின்னர் அங்கிருந்து கார் மூலம் அவினாசி சென்றார்.

அதன் பிறகு பிற்பகல் 3 மணியளவில் ஆட்டையாம்பாளையம் பிரிவில் இருந்து பிரசார வாகனத்தில் சென்று அவினாசி பழைய பஸ் நிலையம், புதிய பஸ் நிலையம் பகுதியில் ரோடு ஷோ சென்று வேனில் நின்றபடி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்கிறார்.

இந்த நிலையில், விஜய்யின் வருகைக்காக பெருமாநல்லூரில் காத்திருந்த த.வெ.க. வேட்பாளருக்கு மயக்கம் ஏற்பட்டது. அவருக்கு உடனடியாக முதலுதவி சிகிச்சை அளித்து குடிநீர், ஓ.ஆர்.எஸ். வழங்கினர். அவர் தவிர, 7 பெண்கள் உள்பட 9 பேர் அடுத்தடுத்து மயக்கம் அடைந்தனர். நீண்ட நேரம் வெயிலில் காத்திருந்ததால் அவர்களுக்கு மயக்கம் ஏற்பட்டு உள்ளது என கூறப்படுகிறது.






# நிதிஷ் குமார் ராஜினாமா; புதிய முதல்-மந்திரியாக பா.ஜ.க.வின் சாம்ராட் சவுத்ரி தேர்வு

**பாட்னா, ஏப்.15:**

பீகாரில் ஆளும் ஐக்கிய ஜனதா தள கட்சியின் தலைவராக, முதல்-மந்திரி நிதிஷ் குமார் செயல்பட்டு வந்த நிலையில், அவர் மாநிலங்களவை தேர்தலுக்கு போட்டியிட முடிவு செய்து, அதற்காக முதல்-மந்திரி பதவியை ராஜினாமா செய்கிறேன் என கூறினார்.

இதற்கு கட்சிக்குள் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. அவர் பதவி விலக கூடாது என தொண்டர்கள் வலியுறுத்தினர். இந்த நிலையில், எம்.எல்.சி. பதவியை நிதிஷ் குமார் கடந்த மார்ச் 30-ந்தேதி ராஜினாமா செய்துள்ளார். அதற்கு சில நாட்களுக்கு முன்பு, ஐக்கிய ஜனதா தள கட்சியின் தலைவராக நிதிஷ் குமார் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்நிலையில், பீகாரில் புது வருட நாளான இன்று அடுத்தடுத்து திருப்பம் ஏற்பட்டு உள்ளது. பீகார் முதல்-மந்திரி பதவியை நிதிஷ் குமார் ராஜினாமா செய்துள்ளார். இதனால், 21 ஆண்டுகளாக முதல்-மந்திரியாக பதவி வகித்த அவருடைய சகாப்தம் முடிவுக்கு வருகிறது.

அவருடைய ராஜினாமாவை அடுத்து, அவரின் மகனுக்கு துணை முதல்-மந்திரி பதவி வழங்க கூடும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பீகாரின் புதிய முதல்-மந்திரியாக பா.ஜ.க.வின் சாம்ராட் சவுத்ரி தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார்.

# “மகளிருக்கான 33% இடஒதுக்கீட்டை ஸ்டாலினால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை” - பழனிச்சாமி

**திண்டுக்கல், ஏப்.15:**

திண்டுக்கல்லில் பிரச்சாரத்தை முடித்தஅதிமுகபொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி, நேற்றிரவு திண்டுக்கல்லில் உள்ள தனியார் ஹோட்டலில் தங்கினார்.

நேற்று காலை அம்பேத்கர் உருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செய்தார். தொடர்ந்து கட்சி நிர்வாகிகளை சந்தித்த எடப்பாடி பழனிசாமி, மாலையில் தேனி மாவட்டத்தில் பிரச்சாரம் செய்ய புறப்பட்டார்.

அப்போதுசெய்தியாளர்களை சந்தித்த அவரிடம், நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் வேண்டுமென்றே கூட்டப்படுவதாக முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த எடப்பாடி பழனிச்சாமி,



“தோல்வி பயத்தின் வெளிப்பாடு தான் அவர் கூறியுள்ளது. நாடாளுமன்றத்தை கூட்டுவது மத்தியில் உள்ள ஆட்சியாளர்கள். ஐந்து மாநிலத்தில் தான் தேர்தல் நடக்கிறது. மற்ற மாநிலங்களில் தேர்தல் இல்லை. பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு என்பது நீண்டநாள் கோரிக்கை. அந்த கோரிக்கையை நிறைவேற்ற இப்பொழுது அருமையான தருணம். அதை அவரால் (ஸ்டாலினால்) பொறுத்துக்கொள்ள முடியவில்லை. பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத்தில் கிடைப்பது, பெண்கள் பல ஆண்டுகளாக எதிர்பார்த்த ஒன்று. இன்று அது நிறைவேறும் சூழ்நிலை. அதை அவரால் ஜீரணிக்கமுடியவில்லை.

அதனால் அவரது கருத்தை ஊடகம் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். தேர்தல் தோல்வி பயத்தில் அவ்வாறு கூறுகிறார். மத்திய அரசு பெண்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் விதமாக நாடாளுமன்றத்தைக் கூட்டியுள்ளது” என தெரிவித்தார்.




## திருக்குறள் குறள்-590

சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க
செய்யிற்புறப்படுத்தான் ஆகும் மறை



ஒற்றனிடத்தில் செய்யும் சிறப்பைப் பிறர் அறியுமாறு செய்யக்கூடாது, செய்தால் மறைபொருளைத்தானே வெளிப்படுத்தியவன் ஆவான்.

## சிந்திக்க ஒரு நொடி



நட்பென்றால்
நடிப்பு இல்லை
நடிப்பென்றால்
அது நட்பில்லை.

**ஸ்ரீகாந்த்**
திருச்சி

## நம் வாசவி அம்மன் காய்கள், பழங்களால் சிறப்பு அலங்காரம்

**திருவண்ணாமலை ஏப்.15:**



ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் சித்திரை மாதம் பராபவ தமிழ் வருடப்பிறப்பை முன்னிட்டு பாலசுப்பிரமணியன் ஐயர் அவர்களால் உற்சவருக்கும், மூலவருக்கும், அனைத்து தெய்வங்களுக்கும் சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர், பன்னீர், இளநீர், தேன், பஞ்சாமிர்தம், சந்தனம், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், காய்களினால், பழங்களினால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பக்தி பாடல்கள் பாடி, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பிரசாதம், அரிசி, பருப்பு, காய்கள், பழங்கள் நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு நம் வாசவி அம்மன் வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## PRO Mobile APP களப்பயிற்சி ஆய்வு



**திருவண்ணாமலை ஏப்.15:**

திருவண்ணாமலை மாநகராட்சி அரசம்பட்டு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் PRO Mobile APP களப்பயிற்சி செய்யப்படுவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## அம்பேத்கரின் பிறந்த நாளை முன்னிட்டு மலர் மாலை அணிவித்து மரியாதை

**திருப்பத்தூர், ஏப்.15:**



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி, வாணியம்பாடி நகரம் கோணாமேடு பகுதியில் புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருஉருவ சிலைக்கு மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி வேட்பாளர் ஜனாப் SSB.சையது பாருக் வாணியம்பாடி நகர திமுக செயலாளர், நகர மன்ற உறுப்பினர் V.S.சாரதி குமார் BE.,MC மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்வில் கூட்டணி கட்சி நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், நகர மன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA-2,BDA, BLC நிர்வாகிகள், கழக நிர்வாகிகள்,கூட்டணி கட்சி தோழர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ் புத்தாண்டையொட்டி வந்தவாசி பகுதி கோவில்களில் சிறப்பு பூஜைகள்..!

**வந்தவாசி, ஏப் 15:**



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கோவில்களில் தமிழ் வருடப் பிறப்பையொட்டி நேற்று சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. வந்தவாசி ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் மற்றும் ரங்கநாதர் பெருமாள் கோவிலில் மூல மூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. வந்தவாசி பஜனைக் கோவில் தெருவில் உள்ள ஸ்ரீகோதண்டராமர் கோயிலில் மூல மூர்த்திகளுக்கு விசேஷ பூஜைகள் நடைபெற்றன.

வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீ பாண்டுரங்கன் ருக்மாயி திருக்கோயிலில் மூல மூர்த்திகளுக்கு ஆயிரக்கணக்கான பழங்களை கொண்டு அலங்காரம் செய்யப்பட்டு குருவாயூரப்பன் கோலத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

இதைப் போல வந்தவாசி-காஞ்சிபுரம் சாலை வெண்குண்றம் லிங்கம் நகர் பகுதியில் உள்ள ஸ்ரீ வாராஹி அம்மன் பழ அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சி தந்தார். ஸ்ரீ ஹரி சுவாமிகள் மேற்பார்வையில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

**பா.சீனிவாசன் வந்தவாசி.**

## போதமலை மலைவாழ் மக்களுடன் தரையில் அமர்ந்து வாக்கு சேகரித்த மதிவேந்தன்

**இராசிபுரம், ஏப்.15:**



ராசிபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட போத மலை மலைப்பகுதியில், திமுக வேட்பாளர் டாக்டர் மா.மதிவேந்தன் மலைவாழ் மக்களுடன் தரையில் அமர்ந்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து, கடந்த ஐந்து ஆண்டுகளில் செய்யப்பட்ட வளர்ச்சி பணிகளை எடுத்துரைத்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் சட்டமன்றத் தொகுதி, வெண்ணந்தூர் ஒன்றியம், போதமலை மலைப்பகுதிக்குட்பட்ட கீழூர் ஊராட்சியில் திமுக வேட்பாளர் டாக்டர் மா.மதிவேந்தன் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது, மலைவாழ் மக்களுடன் நேரடியாக தரையில் அமர்ந்து கலந்துரையாடிய அவர், கடந்த ஐந்து ஆண்டுகளில் திமுக அரசு மேற்கொண்ட பல்வேறு நலத்திட்டங்களையும், குறிப்பாக போதமலை பகுதிக்கு சாலை வசதி ஏற்படுத்தியதையும் விளக்கினார். இதன் மூலம் மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், மலைப்பகுதிகளில் கூட்டுறவு வங்கி சேவைகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கொண்டுவரப்பட்டதையும் எடுத்துரைத்து, வரவிருக்கும் தேர்தலில் உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் ஆர்.எம். துரைசாமி உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## முத்தாலம்மன் சிறப்பு வழிபாடு

**திருவண்ணாமலை ,ஏப். 15:**



திருவண்ணாமலை மாவட்டம் கீழ்அருணையில் அமைந்திருக்கும் அருள்மிகு முத்தாலம்மன் ஆலயத்தில் பராபவ தமிழ் வருட பிறப்பை முன்னிட்டு பாபு ஐயர் அவர்களால் முத்தாலம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் முத்தாலம்மனை வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சித்திரை மாதம் தமிழ் வருட பிறப்பு சிறப்பு வழிபாடு


**திருவண்ணாமலை ஏப்.15:**



சித்திரை 1ஆம் தேதி தமிழ் வருட பிறப்பை முன்னிட்டு அருள்மிகு பூத நாராயணன் பெருமாளுக்கு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர், இளநீர், பன்னீர், சந்தனம், தேன்,பஞ்சாமிர்தம், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகங்கள், காய் கனிகளால், பழங்களால், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம் நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பூத நாராயணரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும், ஜடாரி வைத்து, துளசி தீர்த்தம், குங்குமம் அனைவருக்கும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## செய்யாறு அருள்மிகு ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் கோயிலில் சிறப்பு தரிசனம்

**செய்யாறு ஏப்.15:**



செய்யாறு அருள்மிகு ஸ்ரீஎதிராஜவல்லி தாயார் சமேத ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் சித்திரை தமிழ் வருட பிறப்பு முன்னிட்டு வெள்ளி குதிரை வாகனத்தில் எழுந்தருளினார். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

## தேர்தல் முறைகேடுகள் பற்றி புகார்



**திருவண்ணாமலை, ஏப். 15:**

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி சட்டமன்றத் தொகுதி தேர்தல் நடத்தும் உதவி தேர்தல் அதிகாரி வந்தவாசி தாசில்தார் மதுசெழியன் அவர்களிடம், எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர், வந்தவாசி சட்டமன்றத் தொகுதி அதிமுக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஜாகீர் உசேன் அவர்கள் நேரில் சந்தித்து, வந்தவாசி தொகுதியில் இன்று நடைபெற்ற மூத்த குடிமகன்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வாக்கு செலுத்திய போது, நடைபெற்ற தேர்தல் முறைகேடுகள் பற்றி உரிய ஆதாரத்துடன் புகார் தெரிவித்தார். அவருடன் நகர செயலாளர் ஹோட்டல் பாஷா நிர்வாகிகள் மேகநாதன் ஹைடெக் பாபு ஆகியோர் உடன் இருந்தனர்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலாஸ்ரீதர் திருவண்ணாமலை

## தேர்தல் கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள் ஆய்வு



**திருவண்ணாமலை, ஏப். 15:**

திருவண்ணாமலைமாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் தேர்தல் பொதுபார்வையாளருக்கான திரு.அபிஷேக் கிருஷ்ணா இ. ஆ. ப. அவர்கள், (செங்கம், கலசப்பாக்கம் ),திரு. ரவிக்குமார் சர்பூர்,இ. ஆ. ப. அவர்கள், (திருவண்ணாமலை, கீழ்பென்னாத்தூர்), திரு சதேந்திர சிங், இ. ஆ. ப. அவர்கள், ( போளூர், ஆரணி), திரு ராமகிருஷ்ணா சித்தூரி, இ. ஆ. ப. அவர்கள், ( செய்யார், வந்தவாசி), ஆகியோர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறையை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சித்திரை மாதம் தமிழ் வருட பிறப்பு பஞ்சாங்கம் வாசிப்பு

**திருவண்ணாமலை, ஏப். 15:**



ஸ்ரீ தொண்டரீஸ்வரர் ஆலயத்தில் சித்திரை மாதம் தமிழ் வருட பிறப்பை முன்னிட்டு தொண்டரீஸ்வரருக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் தொண்டரீஸ்வரரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கபட்டது.

தமிழ் வருட பிறப்பை முன்னிட்டு ஜோதிடர் ஆராய்ச்சியாளர் சங்கத்தின் சார்பாக 14/4 /2026 செவ்வாய்க்கிழமை., காலை 9.30 மணிக்கு மேல் 10:30 மணிக்குள் தொண்டரீஸ்வரர் கோவிலில் ஜோதிடர் சங்கத்தின் தலைவர் ஜெயக்குமார் அவர்கள், தண்டபாணி குருக்கள் அவர்கள் தலைமையில் பஞ்சாங்கம் வாசிக்கப்பட்டது. அனைவரும் அமர்ந்து பஞ்சாங்கம் வாசித்ததை கேட்டனர். வாசித்ததும் அனைவருக்கும் இனிப்புகள், கும்பகோணம் (வடிவேலன் மெட்டல்) சார்பாக பஞ்சாங்கம் இலவசமாக அனைத்து ஜோதிடர்களுக்கும், பக்தர்களுக்கும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## தமிழ் புத்தாண்டு நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு வழிபாடு

**பொள்ளாச்சி, ஏப்.15:**



ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் அம்மன் திருக்கோயிலில் சித்திரை மாதம், தமிழ் புத்தாண்டை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர்,இளநீர், பன்னீர்,தேன், சந்தனம்,வெட்டிவேர் வாசனை திரவியங்களால் அனைத்து தெய்வங்களுக்கும் சிறப்பு அபிஷேகங்கள், வாழைமரம், மாவிலை தோரணங்களால் அலங்கரித்து, வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து,தங்க ஆபரணங்களுடன், வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பக்தி பாடல்களை பாடி, பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜைகள் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் முக்கனிகளும், பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## தேர்தல் களப்பணியில்...

### குடும்பத்துக்கு ஒரு செல்போன் வாக்குறுதி என்னாச்சு? - அதிமுகவை கேட்கிறார் கனிமொழி



தமிழகத்தில் கடந்த 2016 தேர்தலின்போது ஒரு குடும்பத்துக்கு ஒரு செல்போன் வழங்கப்படும் என்று அதிமுக அளித்த வாக்குறுதி என்ன ஆனது? அதை நிறைவேற்றினார்களா என கனிமொழி கேள்வி எழுப்பினார்.

திருநெல்வேலி தொகுதி திமுக வேட்பாளர் சுப்பிரமணியன், நாங்குநேரி தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ரூபி மனோகரன் ஆகியோரை ஆதரித்து கங்கைகொண்டான் மற்றும் பரப்பாடியில் கனிமொழி எம்.பி. பேசியதாவது: கடந்த 2016 சட்டப்பேரவை தேர்தலின்போது அதிமுக தேர்தல் அறிக்கையில் ஒரு குடும்பத்துக்கு ஒரு செல்போன் வழங்கப்படும் என்று சொன்னார்கள். என்ன ஆனது? வாக்குறுதியை நிறைவேற்றினார்களா? இப்போது, திமுகவை பார்த்து பழனிசாமி, எங்கள் தேர்தல் அறிக்கையை காப்பி அடிப்பதாக தெரிவிக்கிறார்.

தற்போதைய தேர்தல் அறிக்கையை செயற்கை நுண்ணறிவு தளங்கள் மூலம் மக்களின் கருத்துகளை கேட்டுதான் தயார் செய்தோம். தமிழகத்துக்கு வரவேண்டிய நிதியை பாஜக தருவதே இல்லை. சமீபத்தில் கொண்டுவரப்பட்ட எப்சிஆர்ஏ சட்டத் திருத்தம் மூலம், வெளிநாட்டு நிதி பெற்று இயங்கும் சிறுபான்மை கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் மற்றும் ஆதரவற்றோர் இல்லங்களை பாஜக மிரட்டுகிறது. அவர்களின் சொத்துக்களை பறிக்கப் பார்க்கிறார்கள்.

இந்தியில் திட்டங்களுக்கு பெயர் வைப்பதன் மூலம் கிராமப்புற மக்கள் அது என்ன திட்டமென்றே புரியாமல் உள்ளனர். ‘பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா’ என்றால் என்னவென்று புரிய இந்தி படிக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்குகிறார்கள். தமிழகத்துக்கு வரவேண்டிய ரூ.3,600 கோடி கல்வி நிதியை இந்தி படிக்கவில்லை என்பதற்காக நிறுத்தி வைத்துள்ளது பாஜக அரசு. இவ்வாறு அவர் பேசினார்.

### நோட்டுக்கு வாக்கு; நாட்டுக்கு வேட்டு: சீமான் ரைமிங்

நோட்டுக்கு வாக்கை விற்றால், அது நாட்டுக்கு வேட்டு என்று நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரில் நாதக வேட்பாளர்களை ஆதரித்து நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சீமான் பேசியதாவது: தமிழ்நாட்டை அதிமுகவும், திமுகவும் 60 ஆண்டுகளாக மாறி மாறி ஆட்சி செய்து வருகின்றன. ஊழல், லஞ்சத்தை பெருக்குவதிலும், இயற்கை வளங்களை கொள்ளை அடிப்பதிலும், மக்களின் நலன்களை கெடுப்பதிலும் இந்த 2 கட்சிகளும் போட்டிப் போட்டுக் கொண்டு செயல்படுகின்றன. இந்த நாட்டையும், நாட்டு மக்களையும் வாழ விட வேண்டும் என்ற எண்ணம் இல்லாத கட்சிகள் தான் இவை.

தமிழகத்தில் ரூ.10.5 லட்சம் கோடிக்கு கடன் வைத்துள்ளனர். தமிழ்நாட்டின் பட்ஜெட் ரூ.3 லட்சம் கோடி தான். வட்டியே ரூ.1 லட்சம் கோடிக்கு மேல் கட்டுவதால் ஆசிரியர்கள், செவிலியர்கள், போக்குவரத்து தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியவில்லை. சாராயம் விற்று ரூ.50 ஆயிரம் கோடி வருமானம் பெற்று, அதில் அரசு நடத்தப்படுகிறது.

ஃபிரிட்ஜ், தாலிக்கு தங்கம், 6 சிலிண்டர், ரூ.8 ஆயிரம் கூப்பன் இதற்கெல்லாம் எங்கிருந்து காசு வரும். நோட்டுக்கு வாக்கை விற்றால், அது நாட்டுக்கு வேட்டு. திருடனில் என்ன சின்ன திருடன், பெரிய திருடன். திமுகவும் அதிமுகவும் ஒன்றுதான். இவ்வாறு அவர் பேசினார்.

### “காலை வாரி விட்டதுதான் தவறு” - உதயநிதி விளக்கம்



விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் தொகுதியில் நேற்று திமுக வேட்பாளர் கவுதம சிகாமணியை ஆதரித்து துணை முதல்வர் உதயநிதி பிரச்சாரம் செய்தார்.

அப்போது அவர் பேசுகையில், “தமிழகத்தில் நான் எங்கே பிரச்சாரத்துக்கு சென்றாலும், ஒரு போட்டோவை காட்டுமாறு மக்கள் கேட்கின்றனர். அவர்கள் கேட்பதால் காண்பிக்கிறேன். பதவிக்காக யார் காலிலும் விழும் அனுபவம் எனக்கு இல்லை.

‘முதல்வர் பதவியை சசிகலா கொடுத்தார், அதனால் காலில் விழுந்தேன், அதில் என்ன தவறு?’ என பழனிசாமி கேட்கிறார். காலில் விழுவது தவறில்லை. முதல்வர் பதவிக்கு வந்ததும், சசிகலா காலை வாரி விட்டதுதான் தவறு. இந்த விவகாரத்தில், ‘தம்பி உதயநிதி பேசியதில் என்ன தவறு?’ என சசிகலா தற்போது கேட்டு வருகிறார். நாம் அமைதியாக வேடிக்கை பார்ப்போம்” என்றார்.

## மகளிருக்கு மாதம் ரூ.2.000, தைப்பூசம் மாநில விழா... பாஜக தேர்தல் அறிக்கை வெளியீடு



தமிழக சட்டசபை தேர்தலையொட்டி பா.ஜனதா தேர்தல் அறிக்கை இன்று வெளியிடப்பட்டுள்ளது. சென்னை கிண்டியில் உள்ள தனியார் ஓட்டலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய மந்திரி ஜே.பி.நட்டா பங்கேற்று தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். புதிய யுகம் படைக்கும் தாமரை வாக்குறுதி 2026 எனும் தலைப்பில் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல் அறிக்கையில் முக்கிய அறிவிப்புகள் பின்வருமாறு:-

1. குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் மாதந்தோறும் ரூ.2,000 உதவித்தொகை மற்றும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.10,000 நிதியுதவியாக ஒருமுறை வழங்கப்படும்.

2. ஆண்டுக்கு 3 விலையில்லா கேஸ் சிலிண்டர்கள் வழங்கப்படும். அவை பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தீபாவளி பண்டிகைகள் பொழுது வழங்கப்படும்.

3. பெண்களுக்கு எதிரான குற்றங்களை ஒழிக்கப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுப்போம். இதற்காகத் தடையற்ற ஜீரோ-எப்ஐஆர்’ பதிவுமுறை, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளருக்கான பாதுகாப்பு, பாலியல், போக்ஸோ குற்றங்கள் உள்ளிட்ட கொடூரமான வழக்குகளை விசாரிக்க சிறப்பு விரைவு நீதிமன்றங்கள், பேருந்துகள், பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் 100% கண்காணிப்பு கேமரா வசதி மற்றும் ‘நிர்பயா’ நிதியை முழுமையாகப் பயன்படுத்துவது ஆகியவற்றை உறுதி செய்வோம்.

4. பெண்கள் தலைமையிலான கூட்டுறவு சங்கங்கள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, உற்பத்தி அலகுகளை அமைக்க ரூ.50 லட்சம் வரை வட்டி இல்லாக் கடன்கள் வழங்கப்படும். மேலும், அரசின் கொள்முதலில் பெண்களுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு 20% இட ஒதுக்கீடு கட்டாயமாக்கப்படும்.

5. முருகப் பெருமானின் பெருமையைப் போற்றும் வகையில், தைப்பூசத் திருநாளை மாநில விழாவாக அறிவிப்போம்.

6. திருப்பரங்குன்ற மலை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்றும் பாரம்பரியம் மீண்டும் தொடங்கப்படுவதையும், அது காலம் முழுவதும் பாதுகாக்கப்படுவதையும் உறுதி செய்வோம்.

7. போதைப்பொருள் இல்லாத தமிழகத்தை உருவாக்க, சிறப்பு போதைப்பொருள் தடுப்புப் படை பிரிவுடன் கூடிய ‘தமிழக போதைப்பொருள் ஒழிப்புத் துறை’ உருவாக்கப்படும். கடல்வழி கடத்தலைத் தடுக்க ‘கடலோர போதைப்பொருள் புலனாய்வுப் பிரிவு’, துரித நடவடிக்கைக்காக பிரத்யேக உதவி எண், சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்படும். மேலும், மீண்டும் குற்றம் செய்வோர் மற்றும் போதைப்பொருள் கடத்தல் கும்பல்களுக்கு NDPS சட்டத்தின் கீழ் மரண தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

8. போதைப் பொருள் ஒழிப்பு தமிழ்நாட்டில் 10 நகரங்கள் TOP 100 CLEAN CITIES இடம்பெறும்

9. மூத்த குடிமக்களுக்கு வீட்டிற்கே சென்று மருத்துவ பரிசோதனை செய்யப்படும்.

10. மீனவர்களுக்கு நியாயமான இழப்பீட்டை வழங்கும் வகையில், 61 நாட்கள் மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை ரூ8,000-லிருந்து ரூ12,000-ஆகவும், மீன்பிடி குறைநிலை காலத்திற்கான உதவித்தொகையை ரூ6,000-லிருந்து ரூ8,000-ஆகவும் உயர்த்துவோம். மேலும், 60 வயதிற்கு மேற்பட்ட மீனவர்களுக்கு மாதந்தோறும் ரூ2,000 ஓய்வூதியம் வழங்கப்படும்.

11. தமிழக இளைஞர்களின் பிரகாசமான எதிர்காலத்தை உறுதி செய்ய, முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு ரூ10 லட்சம் வட்டியில்லா கடன், வேலைவாய்ப்பின்மை காரணமாக இ.எம்.ஐ (EMI) செலுத்த முடியாதவர்களுக்குக் கல்விக்கடன் தள்ளுபடி மற்றும் 1 லட்சம் அரசு வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்.

## “உங்களுக்கு வந்தால் ரத்தம் எங்களுக்கு வந்தால் தக்காளி சட்னியா?” - பழனிசாமி கேள்வி



அதிமுக கூட்டணி சார்பில் திருச்சி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து திருச்சி பொன்மலை ஜி கார்னர் மைதானத்தில் நேற்று மாலை பிரச்சார கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பேசியதாவது: முதல்வராக ஸ்டாலின் செய்யும் தவறுகளை நான் விமர்சிக்கிறேன். ஆனால் அவர் அரசியல் ரீதியாக அல்லாமல் தனிப்பட்ட முறையில் விமர்சிக்கிறார்.

முதல்வர் ஸ்டாலின் இப்போது தான் டீ கடைக்கு போவார், நடைப்பயிற்சிக்கு போவார். மக்கள் ஓட்டுப் போட்டு அவரை முதல்வராக்கியதற்கு இந்த காட்சிகளை பார்த்தது தான் மிச்சம். மறைந்த தலைவர்களை நான் கொச்சைப்படுத்துவதாக ஸ்டாலின் கூறுகிறார்.

திமுக எம்.பி.திருச்சி சிவா, காமராஜரை கொச்சைப்படுத்தி பேசி உள்ளார். அவரை கண்டிக்க முடிந்ததா? எம்ஜிஆர், ஜெயலலிதாவை கேலி பேசினார்கள். எங்களுக்கு எவ்வளவு கோபம் வரும். உங்களுக்கு வந்தால் ரத்தம், எங்களுக்கு வந்தால் தக்காளி சட்னியா? தனிப்பட்ட விமர்சனம் செய்தால் அதற்கு தகுந்த பதிலடியை நாங்கள் தருவோம்.

திமுகவினர் நடத்தும் மருத்துவமனைகளில் கிட்னி முறைகேடு நடந்துள்ளது. கிட்னி முறைகேட்டில் ஈடுபட்டவர்களுக்கு இந்த தேர்தலில் மக்கள் தண்டனை வழங்க வேண்டும். உங்கள் கனவைச் சொல்லுங்கள் என்று மக்களிடம் பெறப்பட்ட ஆதார், செல்போன் எண்களை திமுகவுக்கு தேர்தல் பணியாற்றும் ஒரு அமைப்புக்கு கொடுத்து தேர்தலுக்கு பயன்படுத்துகின்றனர்.

மக்களின் தரவுகளை அரசாங்கம் தவறாக பயன்படுத்தலாமா? அமைச்சர் கே.என்.நேருவின் நகராட்சி நிர்வாகத் துறையில் முறைகேடு நடந்துள்ளதாக அமலாக்கத்துறை 3 முறை அறிக்கை சமர்ப்பித்தும் இதுவரை நடவடிக்கை இல்லை. அதிமுக ஆட்சி அமைந்ததும் விசாரணை நடத்தப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## “சிறை சென்று திரும்பி வந்து பார்த்தால்...” - சசிகலா ஆதங்கம்



“நான் சிறை சென்றபோது ஒருவரிடம் கட்சி பதவியையும், மற்றொருவரிடம் ஆட்சி அதிகாரத்தையும் கொடுத்துவிட்டுச் சென்றேன். நான் நம்பிய இருவரும் என்னை ஏமாற்றி விட்டனர்” என்று முதுகுளத்தூரில் நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் சசிகலா பேசினார்.

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற கழக வேட்பாளர்களை ஆதரித்து சசிகலா பேசுகையில், “நான் சிறைக்குச் சென்றபோது, ஒருவரிடம் கட்சி பதவியையும், மற்றொருவரிடம் ஆட்சி அதிகாரத்தையும் கொடுத்துவிட்டுச் சென்றேன். நான் திரும்பி வரும்போது பார்த்தால் நிலைமை மாறிவிட்டது.

நான் நம்பிய இருவர் என்னை ஏமாற்றிவிட்டனர். பதவி கொடுத்தவருக்கு விசுவாசமாக இல்லாதவர்கள் மக்களுக்கு எப்படி விசுவாசமாக இருப்பார்கள்? எனவே, அவர்களை நம்ப முடியாது. திமுக கடந்த 5 ஆண்டுகளில் மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை. திமுக அரசு ரூ.10 லட்சம் கோடிக்கு மேல் கடன் வைத்துள்ளது. கடந்த தேர்தலில் அளித்த வாக்குறுதியை திமுக நிறைவேற்றவில்லை. அதனால் இவர்களையும் வரவிடக் கூடாது” என்றார்.

## ‘ஹாலோகிராம்’ தொழில்நுட்பத்தில் விஜய்யின் ‘3டி பிம்ப’ பிரச்சாரம்



‘ஹாலோகிராம்’ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தவெக தலைவர் விஜய் நேரில் பிரச்சாரம் செய்வது போல புதிய முயற்சியை கும்பகோணம் தவெக வேட்பாளர் மேற்கொண்டுள்ளார்.

தவெக தலைவர் விஜய் தனது பிரச்சாரத்தை அடிக்கடி ரத்து செய்து வருவதால், அவரது கட்சியினர் அதிருப்தியடைந்து வருகின்றனர்.

மற்ற கட்சித் தலைவர்கள் தமிழகம் முழுவதும் தீவிர பிரச்சாரம் செய்து வரும் நிலையில், தங்கள் கட்சித் தலைவர் இன்னும் தங்கள் பகுதிக்கு பிரச்சாரம் செய்ய வரவில்லையே என நினைக்கும் தவெக வேட்பாளர்கள் புதிய புதிய முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

அந்த வகையில், திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தொகுதி தவெக வேட்பாளர் நவல்பட்டு விஜி, விஜய்யின் சிலையை தனது பிரச்சார வாகனத்தில் வைத்து வாக்கு சேகரிக்கும் பணி மேற்கொண்டார்.

அதே போல, கொளத்தூர் தொகுதி தவெக வேட்பாளர் வி.எஸ்.பாபு, டூப்ளிகேட் விஜய் போல உள்ள நபரை தன்னுடன் பிரச்சாரத்துக்கு பயன்படுத்தினார். தற்போது அடுத்த கட்டமாக தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் தொகுதி தவெக வேட்பாளர் வினோத், ‘ஹாலோகிராம்’ தொழில்நுட்பத்தில் தனது பிரச்சார வாகனத்தில் விஜய் நேரில் பேசுவது போல ‘3டி’ பிம்பத்தில் வடிவமைத்து பிரச்சாரம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அக்கட்சியினர் கூறுகையில், “விஜய் முகம் காட்டினாலே போதும், பெருவாரியான வாக்கு கிடைக்கும். எனவே, சென்னையைச் சேர்ந்த தனியார் நிறுவனம் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ.35 ஆயிரம் வாடகையில் ஹாலோகிராமம் தொழில்நுட்பத்தில் விஜய் நேரில் பிரச்சாரம் செய்வது போல வடிவமைக்கப்பட்டுள்ளது. இன்னும் ஓரிரு நாளில் இந்த யுக்தியை பயன்படுத்தி பிரச்சாரம் செய்வோம்” என்றனர்.

## ‘திருமாவளவனை மதிக்கவில்லை’ - விருத்தாசலத்தில் பிரேமலதாவுக்கு விசிக-வினர் எதிர்ப்பு



திருமாவளவனை மதிக்கவில்லை என்று கூறி தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதாவுக்கு அவர் போட்டியிடும் விருத்தாசலம் தொகுதியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

விருத்தாச்சலம் தொகுதியில் போட்டியிடும் பிரேமலதா, நல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட கண்டப்பங்குறிச்சி, நகர், இலங்கியனூர், வலசை, பிஞ்சனூர் மற்றும் சேப்பாக்கம், ஐவதுகுடி உள்ளிட்டக் கிராமங்களில் பிரேமலதா பிரச்சார வேனில் பயணித்தபடி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். பிரச்சாரத்தின் போது, எப்போதும் குரலை உயர்த்திப் பேசும் பிரேமலதா, வழக்கத்துக்கு மாறாக சோர்வுடன் காணப்பட்டார்.

மிகுவும் சுருக்கமாக பேசி வாக்கு சேகரிப்பதை காணமுடிந்தது. “அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டும்” என்று அப்பகுதி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் வலியுறுத்தினர். அதைத் தொடர்ந்து, அங்கு சென்று அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் பிரேமலதா. அப்போது விசிக-வைச் சேர்ந்த சிலர், ‘திருமாவளவன் கடலூரில் பேசும் போது மேடையில் இருந்த பிரேமலதா அவரை மதிக்கவில்லை, எழுந்து நிற்கவில்லை’ என்று தெரிவிக்க, அங்கிருந்த விசிக மண்டல செயலாளர் திராவிட மணி, அவர்களை சமாதானம் செய்தார். உடனே முன்னாள் மாவட்ட செயலாளரான நீதிவள்ளல் உள்ளிட்டோர் திராவிட மணியிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அதனால் அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது. பின்னர் அங்கிருந்த போலீஸார் அவர்களை சமரசம் செய்து அனுப்பி வைத்தனர். கடந்த வாரம், கடலூரில் திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சியில் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் மேடையில் இருந்தார்.

திருமாவளவன் மேடையில் அவரது பெயரை கூறி அறிமுகம் செய்தபோது பிரேமலதா விஜயகாந்த் எழுந்து நிற்கவில்லை. இதுகுறித்து சர்ச்சை எழுந்தது. அதற்கு பிரேமலதா பின்னர் விளக்கம் அளித்தது குறிப்பிடத்

## திருச்செந்தூரில் சித்திரை விசு கனி! ஆயிரக்கணக்கானோர் சுவாமி தரிசனம்!!

**திருச்செந்தூர், ஏப்.15:**

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் சித்திரை முதல் நாள் தமிழ்ப்புத்தாண்டை முன்னிட்டு இன்று அதிகாலை 4 மணிக்கு நடைதிறக்கப்பட்டு, 4.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம் நடைபெற்றது. பிறகு உதயமார்த்தாண்ட அபிஷேகம், தொடர்ந்து உச்சிகால அபிஷேகமும், காலை 10 மணிக்கு சண்முகருக்கு அன்னாபிஷேகம் நடந்தது. தொடர்ந்து மற்ற கால பூஜைகளும் நடைபெற்றன.

சித்திரை முதல் நாளையொட்டி சுவாமி அஸ்திரதேவர் கடலில் புனித நீராடி தீர்த்தவாரி நடந்தது.

சித்திரை முதல் நாளையொட்டி சுவாமி அஸ்திரதேவர் கடலில் புனித நீராடி தீர்த்தவாரி நடந்தது. சித்திரை முதல் நாளை முன்னிட்டு அதிகாலை முதலே ஆயிரக்கணக்கான பக்தர்கள் கடல் மற்றும் நாழிக்கிணறில் புனித நீராடி சுவாமி தரிசனம் செய்தனர். புத்தாண்டு சிறப்புப் பூஜைகளுக்கான ஏற்பாடுகளை தக்கார் அருள்முருகன், இணை ஆணையர் ராமு மற்றும் பணியாளர்கள் செய்திருந்தனர்.

சித்திரை விசு கனி : திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் உள் பிரகாரத்தில் சித்திரை விசு கனி காணும் நிகழ்ச்சியை முன்னிட்டு கண்ணாடி முன்பு கனிகள் வைக்கப்பட்டிருந்ததை பக்தர்கள் வழிபட்டுச் சென்றனர்.

## டெல்டா மாவட்டங்களின் கடலோர பகுதிகளில் 20-ந்தேதி வரை மழைக்கு வாய்ப்பு

**சென்னை, ஏப்.15:**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;- அடுத்த ஏழு தினங்களுக்கான வானிலை முன்னறிவிப்பு மற்றும் எச்சரிக்கை:

சுமார் 0.9 கிமீ உயரத்தில், தெற்கு அசாம் முதல் தென் தமிழகம் வரை ஜார்க்கண்ட் மேற்கு வங்காளம், ஒடிசா, சத்தீஸ்கர், தெலுங்கானா மற்றும் உள் கர்நாடகா வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை (TROUGH) நிலவுகிறது.

14-04-2026 முதல் 20-04-2026 வரை: மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் கடலோர பகுதிகள் மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம் மற்றும் புதுவையில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

24 மணி நேர அதிகபட்ச வெப்பநிலை மாறுதல்: 14-04-2026 முதல் 18-04-2026 வரை: உள் தமிழக மாவட்டங்களில், அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 2-3° செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும். கடலோர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு.

அதிக வெப்பநிலையும், அதிக ஈரப்பதமும் இருக்கும் நிலையில், கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் அசௌகரியம் ஏற்படலாம்.

## கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் சித்திரை விஷு கனி காணும் நிகழ்ச்சி- திரளான பக்தர்கள் பங்கேற்பு

**கன்னியாகுமரி, ஏப்.15:**




உலகப் புகழ்பெற்ற கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் ஆண்டுதோறும் தமிழ் புத்தாண்டான சித்திரை மாதம் 1-ந்தேதி சித்திரை விஷு கனி காணும் நிகழ்ச்சி நடைபெறுவது வழக்கம். அதேபோல இந்த ஆண்டு சித்திரை முதல் நாளான இன்று சித்திரை விஷு கனி காணும் நிகழ்ச்சி விமரிசையாக நடைபெற்றது.

இதையொட்டி இன்று அதிகாலை 4.30 மணிக்கு கோமாதா தரிசனம் நிகழ்ச்சி நடந்தது. அப்போது பசு மற்றும் கன்றுக்குட்டியை கோவிலின் கொடிமரம் முன்பு உள்ள வாடா விளக்கு மண்டபத்தில் நிறுத்திவைத்து பூஜைகள் செய்யப்பட்டன. பின்னர் கோவிலின் மூலஸ்தான நடை திறக்கப்பட்டு அம்மன் கோமாதாவை தரிசனம் செய்யும் நிகழ்ச்சி நடந்தது.

அதைத்தொடர்ந்து நிர்மால்ய பூஜையும் விஸ்வரூப தரிசனமும் நடந்தது. அதன் பிறகு கனி காணும் நிகழ்ச்சி நடந்தது. கோவில் மூலஸ்தான மண்டபத்தில் காய்கனிகளை குவித்து வைத்து சிறப்பு வழிபாடு நடந்தது. பின்னர் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகமும் அதைத் தொடர்ந்து அம்மனுக்கு தங்க ஆபரணங்கள் மற்றும் வைரக் கிரீடம் அணிவித்து சிறப்பு அலங்காரத்துடன் தீபாராதனையும் நடந்தது.

அதன் பிறகு காலை 10 மணிக்கு அம்மனுக்கு எண்ணெய், பால், பன்னீர், இளநீர், தேன், களபம், சந்தனம், குங்குமம், பஞ்சாமிர்தம் மற்றும் புனித நீரால் சிறப்பு அபிஷேகம் நடந்தது. அதன் பிறகு அம்மனுக்கு தங்க ஆபரணங்கள் மற்றும் வைரக் கிரீடம் அணிவிக்கப்பட்டு, சந்தன காப்பு அலங்காரம் செய்யப்பட்டது.

அதைத்தொடர்ந்து அலங்கார தீபாராதனை நடந்தது. இந்த சிறப்பு பூஜைகளில் கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் மேலாளர் ஆனந்த் உள்பட திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

பூஜையில் பங்கேற்ற பக்தர்களுக்கு காய்கனிகளுடன் ஒரு ரூபாய் நாணயம் கை நீட்டமாக வழங்கப்பட்டது. இதனை கோவில் மேல் சாந்தி பக்தர்களுக்கு வழங்கினார். அதைத் தொடர்ந்து பகல் 12 மணிக்கு அன்னதானம் நடந்தது.

மாலை 6.30 மணிக்கு சாயராட்சை தீபாராதனை நடைபெறும். இரவு 8 மணிக்கு அம்மன் வெள்ளிப்பல்லக்கில் எழுந்தருளி மேளதாளம் முழங்க கோவிலின் உள் பிரகாரத்தை சுற்றி 3 முறை வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார்.

அதனைத் தொடர்ந்து வெள்ளி சிம்மாசனத்தில் அம்மனுக்கு தாலாட்டு நிகழ்ச்சியும் அத்தாழ பூஜையும் ஏகாந்த தீபாராதனையும் நடக்கிறது.

## சமயபுரம் மாரியம்மன் கோயில் சித்திரைத் தேரோட்டம் கோலாகலம்!

**திருச்சி, ஏப்.15:**



திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோயிலில் சித்திரைத் தேரோட்டம் இன்று கோலாகலமாக நடைபெற்றது. தேரோட்ட திருவிழாவில் ஓம் சக்தி மகா சக்தி எனப் பக்தி கோஷத்தோடு பக்தர்கள் தேரை வடம்பிடித்து இழுத்தனர்.

பிரசித்தி பெற்ற திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோவில் சித்திரை தேரோட்டத் திருவிழா ஆண்டுதோறும் சித்திரை மாதம் முதல் செவ்வாய்க்கிழமை வரை வெகு விமர்சையாக நடைபெறுவது வழக்கம். அந்தவகையில் இந்த ஆண்டுக்கான சித்திரை தேரோட்டத் திருவிழா கடந்த 5ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதனை முன்னிட்டு ஒவ்வொரு நாளும் உற்சவ அம்மன் சிம்ம வாகனம், பூத வாகனம், அன்ன வாகனம் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி தேரோடும் வீதியில் வீதியுலா வந்து பக்தர்களுக்குக் காட்சியளித்தார்.

நேற்று இரவு அம்மன் வெள்ளி குதிரை வாகனத்தில் எழுந்தருளி வையாளி கண்டருளும் நிகழ்ச்சி நடைபெற்றது.

சித்திரைத் திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று வெகு விமர்சையாக நடைபெற்று வருகிறது. இதையொட்டி காலை 10.31 மணிக்கு அம்மன் தேரில் எழுந்தருளினார்.

அதைத்தொடர்ந்து மேளதாளங்கள் முழங்க அதிர்வேட்டுகள் ஒலிக்கத் திருத்தேர் வடம் பிடித்தல் நிகழ்ச்சி 11.30 மணிக்கு நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு ஓம் சக்தி.. பராசக்தி என விண்ணதிரும் பக்தி கோஷங்கள் முழங்கத் தேரை வடம் பிடித்து இழுத்தனர். தேரோட்டத்தை முன்னிட்டு நேற்று இரவில் இருந்து தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் சமயபுரத்திற்கு வாகனத்திலும் பாதயாத்திரையாகவும் வருகை தந்து அக்னிச்சட்டி ஏந்தியும், அலகு குத்தியும், பால்குடம் எடுத்தும், பறவை காவடி எடுத்தும், கோயிலுக்கு வந்து மாரியம்மனை தரிசனம் செய்து தங்களது நேர்த்தி கடனை செலுத்தி வருகின்றனர். தேரோட்ட விழாவுக்கான ஏற்பாடுகளைக் கோயில் இணை ஆணையர் சூரிய நாராயணன், அலுவலர்கள், கிராம மக்கள் செய்து வருகின்றனர்.

சமயபுரம் வரும் பக்தர்களுக்காக சிறப்பு மருத்துவ முகாம்கள், குடிநீர், தற்காலிக கழிப்பறைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் செல்வநாகரத்தினம் அவர்களின் உத்தரவின் பெயரில் பக்தர்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்தவும், வாகனப் போக்குவரத்தை சீர்படுத்தவும் 2000 போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் பல்வேறு இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்தி, கூட்டத்தைக் கண்காணித்து வருகின்றனர்.

மேலும் காவல் உதவி மையங்களும் அதிக அளவில் அமைக்கப்பட்டுள்ளது.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

### கசப்பிலும் இவ்வளவு இனிப்பா? வேப்பம் பூவை சாப்பிட்டால் உடலில் நடக்கும் அதிசயம்!

கோடை வெயிலால் உடலில் பலவித பாதிப்புகள் உருவாகும். அந்த பாதிப்புக வராமல் தடுக்க உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கப்பட வேண்டும். அந்த நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க செய்வதில் பலவிதங்களில் வேப்பம்பூ (NEEM FLOWER BENEFITS) உதவுகிறது.

சித்திரையில் பூத்து குலுங்கும் வேப்பம்பூ பலவித மருத்துவ குணநலன்களை கொண்டுள்ளது. கிருமி நாசினியான வேப்பம்பூ பித்தம் அதிகமானால் உண்டாகும் பெருமூச்சு, நாவறட்சி, சுவையின்மை, வாந்தி, நாட்பட்ட வாத நோய்கள், ஏப்பம், வயிற்று புழு இவற்றை நீக்கும் சக்தி கொண்டது. புற்றுநோய் செல்களை அழிக்கக் கூடிய ஆற்றல் வேப்பம் பூவிற்கு உள்ளது என ஆய்வுகள் கூறுகின்றன. தலையில் உண்டாகும் பொடுகு பிரச்னைகளுக்கு 50மிலி தேங்காய் எண்ணெயில் ஒரு கைப்பிடி அளவு வேப்பம்பூவை போட்டு காய்ச்சி பூவுடன் தலையில் தேய்த்து குளித்து வர பொடுகு மற்றும் கேச நோய்கள் யாவும் குணமாகும்.

வெயில் காலத்தில் ஏற்படும் சரும நோய்களுக்கும், வயிறு உபாதைகளுக்கும் வேப்பம்பூ சிறந்த மருந்து. வேப்பம்பூவை உலர்த்தி பொடித்து 1/2 டீஸ்பூன் தேனில் கலந்து சாப்பிட வாய்க்கசப்பு மற்றும் வாந்தி தலைச்சுற்றல் சரியாகும். வேப்பம்பூவை காயவிட்டு 1 டீஸ்பூன் காய்ந்ததை எடுத்து சூடான நீரில் போட்டு கலந்து குளித்து வர வாதத்தால் உண்டாகும் உடல்வலி, நீங்கும், கபம் குறையும்.

வேப்பம்பூ பொடியுடன் வெல்லம் கலந்து பிள்ளைகளுக்கு கொடுக்க நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

வயிற்றில் வாயு அதிகரிப்பதால் உண்டாகும் வயிற்று வலிக்கு இரண்டு தேக்கரண்டி வேப்பம்பூவை நெய்யில் வறுத்து பொடி செய்து சூடான அரிசி கஞ்சியில் கலந்து சாப்பிட நல்ல குணம் கிடைக்கும்.

கோடையின் வெப்பம் காரணமாக உடலில் ஏற்படும் வேனல் கட்டி, வியர்க்குரு, அரிப்பு போன்ற சரும நோய்களை வேப்பம்பூ போட்டு ஊற வைத்த நீரில் குளிக்க அவை சரியாகிவிடும்.

வயிற்று பூச்சி இருந்து சாப்பிடாமல் இருக்கும் சிறுவர்களுக்கு பூவை பொடி செய்து தேனுடன் கலந்து கொடுக்க பூச்சிகள் அழிந்து பிள்ளைகளுக்கு நன்கு பசியெடுக்கும். வேப்பம்பூ, இலை இவற்றை காய வைத்து பொடியாக்கி வைத்துக் கொண்டு அதனால் புகை போட கிருமி தொற்று நீங்குவதுடன் கொசு, ஈ தொல்லைகளிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும். இவ்வாறு பல்வேறு பலன்களை தரும் வேப்பம்பூவை தனியாக சாப்பிடலாம் அல்லது ரசம், பச்சடி என நம் சமையலில் சேர்த்து செய்ய நல்ல பலன் கிடைக்கும். வலுவான நோய் எதிர்ப்பு சக்தி ஆனது பல வகையான பிரச்சனைகளில் இருந்து உடலை பாதுகாக்க உதவுகிறது. வலுவான நோய் எதிர்ப்பு சக்தி ஆனது பல வகையான பிரச்சனைகளில் இருந்து உடலை பாதுகாக்க உதவுகிறது.


## டயர்களில் உள்ள எண்களின் அர்த்தம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?

வாகனங்களைஓட்டுவதில் நமக்கு இருக்கும் ஆர்வம், அவற்றை பராமரிப்பதில் பலருக்கும் இருப்பதில்லை. குறிப்பாக, பாதுகாப்பிற்கு மிக முக்கியமான காரணியாக விளங்கும் டயர்களைப் பற்றி நாம் பெரிதாகக் கவலைப் படுவதில்லை.

டயரின் பக்கவாட்டில் அச்சிடப்பட்டுள்ள எண்கள் மற்றும் எழுத்துக்கள் ஏதோ சீரியல் நம்பர் என்று நீங்கள் நினைத்தால், அதுதான் தவறு. உங்கள் வாகனத்தின் வேகம், தாங்கும் எடை மற்றும் அதன் ஆயுட்காலம் போன்ற அத்தனை ரகசியங்களும் அந்த எண்களுக்குள் தான் ஒளிந்துள்ளன.

உதாரணத்திற்கு, ஒரு டயரில் 205/55 R16 91V என்று எழுதப்பட்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். இதன் ஒவ்வொரு பகுதியும் ஒரு முக்கியமான தகவலைக் கூறுகிறது.

முதல் எண்ணான 205 என்பது டயரின் அகலத்தைக் குறிக்கிறது. இது மில்லிமீட்டரில் அளவிடப்படுகிறது. அதாவது, டயரின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் வரையிலான அகலம் 205 மி.மீ ஆகும். இது வாகனத்தின் பிடிமானத்திற்கு மிக அவசியம்.




அடுத்ததாக வரும் 55 என்பது ஒரு சதவீதமாகும். இது டயரின் அகலத்திற்கும் அதன் உயரத்திற்கும் உள்ள விகிதத்தைக் குறிக்கிறது. இங்கே 55 என்பது, டயரின் அகலத்தில் (205 மி.மீ) 55% அதன் உயரம் என்பதாகும். இந்த எண் குறைவாக இருந்தால், டயர் தட்டையாகவும், கையாளுவதற்கு வசதியாகவும் இருக்கும்.

இதற்கு அடுத்து வரும் R என்ற எழுத்து 'RADIAL' என்பதைக் குறிக்கிறது. இன்று சந்தையில் உள்ள பெரும்பாலான கார்களில் ரேடியல் டயர்கள்தான் பயன்படுத்தப் படுகின்றன. இவை நீண்ட காலம் உழைக்கக்கூடியவை மற்றும் எரிபொருள் சிக்கனத்திற்கு உதவுபவை.

அடுத்ததாக வரும் 16 என்ற எண், அந்த டயர் எந்த அளவுள்ள சக்கரத்தில் பொருந்தும் என்பதைக் குறிக்கிறது. இது அங்குலங்களில் அளவிடப்படுகிறது. 16 என்றால், அது 16 இன்ச் சக்கரத்திற்கான டயர் என்று அர்த்தம்.

டயரின் இறுதியில் உள்ள 91V என்பதுதான் மிக முக்கியமானது.

இதில் உள்ள 91 என்பது அந்த டயர் அதிகபட்சமாக எவ்வளவு எடையைத் தாங்கும் என்பதைக் குறிக்கிறது.

'91' என்ற குறியீடு சுமார் 615 கிலோ எடையைத் தாங்கும் திறன் கொண்டது. கடைசியாக உள்ள V என்பது அந்த டயர் பாதுகாப்பாகப் பயணிக்கக்கூடிய அதிகபட்ச வேகத்தைக் குறிக்கிறது. 'V' குறியீடு இருந்தால், அந்த டயர் மணிக்கு 240 கி.மீ வேகம் வரை தாங்கும் திறன்கொண்டது என்று பொருள்.

இதுபோல, 'S' என்றால் 180 கி.மீ வேகம் வரையும், 'T' என்றால் 190 கி.மீ வேகம் வரையும், 'U' என்றால் 200 கி.மீ வேகம் வரையும், 'H' என்றால் 210 கி.மீ வேகம் வரையும், 'W' என்றால் 270 கி.மீ வேகம் வரையும் தாங்கும் திறன் கொண்டது.

டயர் உருவான தேதியை அறிவது எப்படி?

டயர்களில் DOT (DEPARTMENT OF TRANSPORTATION) என்று ஆரம்பித்து சில எண்கள் இருக்கும். அதன் இறுதியில் உள்ள நான்கு எண்கள் மிக முக்கியமானவை. உதாரணத்திற்கு 1224 என்று இருந்தால்:

முதல் இரண்டு எண்கள் (12), அந்த ஆண்டில் எத்தனையாவது வாரம் என்பதையும், கடைசி இரண்டு எண்கள் (24), அந்த ஆண்டு (2024) என்பதையும், அதாவது, அந்த டயர் 2024-ம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் தயாரிக்கப்பட்டது. பழைய டயர்களை வாங்குவதைத் தவிர்க்க இந்த ரகசியம் உங்களுக்கு உதவும்.

டயர் என்பது வாகனத்தின் பாதுகாப்புக் கவசம். அடுத்த முறை உங்கள் காருக்கோ அல்லது பைக்கிற்கோ டயர் மாற்றச் செல்லும் போது, இந்த எண்களைச் சரிபார்க்க மறக்காதீர்கள். சரியான அளவு மற்றும் வேகக் குறியீடு கொண்ட டயர்களைத் தேர்ந்தெடுப்பது உங்கள் பயணத்தைப் பாதுகாப்பானதாகவும், செலவு குறைந்ததாகவும் மாற்றும்.

# "தேங்கி நின்றால்!"



"என் தாத்தா சேர்த்த
செல்வம்...
என் அப்பா காத்த
சொத்து...
எனக்கு ஏழு
தலைமுறைக்கும்
போதும்!"பெருமையாகச்
சொல்லிக் கொண்டு
திரிந்தான் மதன்.

உழைப்பே இல்லாத
வாழ்க்கை அவனுக்கு
உற்சாகமாய்த்
தோன்றியது.
காலையில் சூரியன்
உதித்து நெடுநேரமான
பின்தான்
படுக்கையிலிருந்தே
எழுவான்.

அவன் நண்பர்கள்
தங்கள் வாழ்க்கையோடு
போராடிக்
கொண்டிருந்தார்கள்.
வியாபாரம்
தொடங்கினார்கள்.
வேலைக்காக
ஊர் விட்டு ஊர்
போனார்கள்.
மதனுக்கு மட்டும்
ஆடம்பர அறை,
அளவில்லா உணவு,
அளவில்லா ஓய்வு.
இவைகளின் மத்தியில்
சோம்பலாய்ச் சுழன்றது.
நாட்கள் நகர்ந்தன.
மதனின் உடல் பெருக்க
ஆரம்பித்தது. சில
அடிகள் நடந்தாலே
மூச்சுத் திணறியது.
இளமையிலேயே
முதுமைத் தோற்றம்.
ஒரு நாள் திடீரென்று
மார்பைப் பிளக்கும்
வலி. வீட்டார்
அவனை அவசரமாக
மருத்துவரிடம்
அழைத்துச்
சென்றார்கள்.
பரிசோதனையை
முடித்த மருத்துவர்,
"உன் வயது எவ்வளவு?"
சன்னக் குரலில்
கேட்டார்.
"முப்பது..." என்றான்
மதன் மெல்ல.
மருத்துவர் சிரித்தார்.
"உன் உடலைப்
பார்த்தால் ஐம்பது
வயது மனிதன்
போலிருக்கிறது,"
என்றார்.
மதன் தலை
குனிந்தான்.
சிறிது நேரம்
அமைதியாக இருந்த
மருத்துவர் ஜன்னலுக்கு
வெளியே பார்த்தார்.
அங்கு ஒரு சிறிய குளம்
தெரிந்தது. அதில் நீர்
அசையாமல் தேங்கி
நின்றது.
அதைச் சுட்டிக்
காட்டிச் சொன்னார்,
"அதைப் பாரு...
தண்ணீர் ஓடாமல்
தேங்கி நின்றால் என்ன
ஆகும்?"
"அழுக்கு... பாசி...
பிடிக்கும்... புழு
நெண்டும்" என்றான்
மதன்.
மருத்துவர்
புன்னகையோடு
சொன்னார்,
"அப்படித்தான்
மனித் வாழ்க்கையும்.
தேங்கி நின்றால்
தண்ணீர் மட்டுமல்ல...
மனிதனும் அழுக்காகிப்
போவான்."
அந்த வார்த்தைகள்
மதனின் உள்ளத்தில்
ஆழப் பதிந்தன.
அன்று முதல் அவன்
வாழ்க்கை மாறத்
தொடங்கியது.
உழைப்பின் வியர்வை
அவன் நெற்றியிலும்
முத்துகளாய் தோன்ற
ஆரம்பித்தன.

- **முகில் தினகரன்**
கோயமுத்தூர்

# தவறின் உயிர்




தாமோதரன், லட்சுமி, மகன் கார்த்திக்—
இந்த மூவரே அந்த வீட்டின் அடையாளம்.
கார்த்திக் சென்னையில் வேலை கிடைத்து கிளம்பினான். ஒரு வருடத்திற்குள் எப்படியோ ஏதேதோ காரணம் காட்டி சொந்த ஊருக்கே மாற்றல் வாங்கி வந்துவிட்டான்.
அம்மாவுக்கு மகிழ்ச்சி.
அப்பாவுக்கு நிம்மதி.
கார்த்திக்குக்கு மட்டும்... ஏதோ ஓர் நிம்மதியில்லா மனது.

சென்னை அவனுக்கு வேலை மட்டும் அல்ல மீனாவையும் அளித்திருந்தது. தீவிரமாக காதல் செய்தார்கள்.
ஆனால் மீனாவின் வீட்டில் அது ஏற்கப்படவில்லை.
"வேலைல இருக்கிறான்... ஆனா ஜாதி?" "நாளைக்கு விட்டுட்டுப் போய்டுவான்."
மனதை நோகடிக்கும் கேள்விகள், கத்திகள் போல குத்தின.

"நான் திரும்பி வர்றேன். நிச்சயம் வர்றேன்," என்று சொல்லி அவன் ஊருக்குப் போன நாள்...
அவள் கண்களில் பயம் மட்டும் இருந்தது. அவன் திரும்பவில்லை.
அவனுக்கும் வீட்டில் சொல்ல பயம். ஒரு வருடம் எப்படியோ கடந்து விட்டது. திருமண பேச்சை மட்டும் தவிர்த்து வந்தான்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை.
லட்சுமி காலை உணவு தயாரித்து பரிமாறி விட்டு சற்று இளைப்பாற, கார்த்திக் மதிய உணவை ஸ்விகியில் ஆர்டர் செய்தான்.
கதவு மணி அடித்தது.
கார்த்திக் கதவைத் திறந்த நொடியில்—
உலகம் அசையாமல் நின்றது.
ஸ்விகி யூனிஃபார்ம்.
முதுகில் பேக்.
மார்போடு சாய்ந்த கை குழந்தை.
மீனா. அவள் முகம் மெலிந்திருந்தது.
ஆனால் கண்கள் உறுதியாய் இருந்தன.

"சார்... ஆடர்,"
அவள் குரல் நடுங்கவில்லை.
அவன் கை நீட்டி பெற்றுக் கொண்டான்.
குழந்தை அழ ஆரம்பித்தது.
அந்த அழுகை...
அவன் மனசுக்குள் ஏதோ ஒன்றை கிழித்தது. மீனா தயங்கினாள்.
"சார்... குழந்தைக்கு பால் குடுக்கணும்.
உள்ளே உட்கார அனுமதி தருவீங்களா?"
கேட்டதும் அம்மா உடனே சொன்னாள்.
"அய்யோ, பிள்ளையோட இருக்கா... வாம்மா."
மீனா பக்கத்து அறையில் அமர்ந்து, குழந்தைக்கு பால் ஊட்டினாள். வெளியே வந்ததும் கார்த்திக் அவள் முகத்தை பார்க்கவில்லை. குழந்தையின் முகத்தை மட்டும் பார்த்தான்.
அவன் முகம்,கண்கள், மூக்கு.
அவன் உள்ளே ஒரு குரல்—
"இது... என் குழந்தை."
அவன் குரல் தடுமாற, கேட்டான்.
"மீனா... இது?"
அவள் புன்னகையோடு சொன்னாள்.
"ஆமா கார்த்திக். நீ போனதுக்கப்புறம்...
எனக்கு கர்ப்பம் தெரிய வந்தது."
அவன் மூச்சு நின்றது. "வீட்டில சொன்னேன். காதலை ஏத்துக்கலை.
கர்ப்பத்தை மன்னிக்கலை."
ஒரு நொடி நிறுத்தி,
"வீட்டைவிட்டே வெளியேற்றிட்டாங்க," என்றாள்.
அம்மா அதிர்ச்சியில் உட்கார்ந்தாள்.
அப்பா கண்களை மூடிக்கொண்டார். அவன் திருமணத்தை தள்ளிப் போட்டதன் காரணம் புரிந்தது.

மீனா மெதுவாக சொன்னாள்.
"நான் உன் வாழ்க்கை கெடக்கூடாதுனு உன்ன தேடல,"
ஆனா
"இந்த குழந்தை மட்டும்...
உன்ன தேடி வந்துடுச்சு."
கார்த்திக் குழந்தையை மெதுவாக தூக்கினான். குழந்தை அவன் மார்பில் அமைதியாக தூங்கியது.
அவன் கண்களில் நீர் வழிந்தது.

இது அவன் உயிர். அப்பா முன்னால் வந்து சொன்னார்.
"தவறு நடந்திருக்கலாம்.
ஆனா பொறுப்பு... இப்போ ஆரம்பிக்குது." கார்த்திக் தலை ஆட்டினான். மீனாவைப் பார்த்து சொன்னான்— "நான் தப்பு செய்து விட்டேன்.
ஆனால் இப்போ உன்னை விட்டு ஓட மாட்டேன்." மீனா ஒன்றும் சொல்லவில்லை.
ஆனால் அவள் கண்களில்...
பல மாதங்களுக்குப் பிறகு நிம்மதி இருந்தது. அந்த வீட்டில், அந்த மாலையில், ஒரு குழந்தை மட்டும் அல்ல— ஒரு மனிதனும் பொறுப்போடு மறுபடியும் பிறந்தான்.

**-கோமளவல்லி**
மும்பை



# ஊர்மிளையின் ஊமைமனம் 8



**.கே.பானுமதி நாச்சியார்**
சிவகிரி

## சூர்ப்பநகையின் அரற்றல்..


அதற்குள் ஊர்மிளை "இவளைப் பற்றிய தகவல்கள் தெரியவில்லையா?" என்று கேட்டாள்.

நாங்கள் இவளை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. அத்துடன் முடிந்து விடும் இந்த நிகழ்ச்சி என்று நினைத்து அவளைப் பற்றிய நினைவுகளை அகற்றினோம். ஆனால் விபீடணனின் சரணாகதியில் தான் இவளைப் பற்றிய தகவல்கள் எல்லாம் எங்களுக்குத் தெரிந்தது.

காமவல்லி என்பதாலும் ராமண்ணா சொன்ன மாதிரி நாணம் இல்லாதவளாகவும் இருந்ததால் இவளைப் பற்றிய நினைவுகளை நாங்கள் பெரிதாக நினைக்கவில்லை.

சரி சொல்லுங்களேன் "அவள் யார் என்று? அவள் ராமண்ணாவிடம் சொன்னதெல்லாம் உண்மைதானா?"

உண்மைதான் ஊர்மிளை. அவளைப் பற்றிய தகவல்களை நாங்கள் விபீடனன் எங்களிடம் வரும்பொழுது தான் தெரிந்து கொண்டோம் என்றேனே.



"சொல்லுங்கள் அவள் யார்? அவளுக்குத் திருமணம் ஆகி விட்டதா? ஏன் ராமண்ணா மேல் காமம் கொண்டாள்?. ராவணன், குபேரன் இவர்களெல்லாம் அவளுக்குத் தமையன் என்றால் அவள் தனித்துச் சுற்றித் திரிந்தது எதனால்? என் மனதில் நிறைய கேள்விகள் எழுகின்றன. அவளைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்!" என்றாள்.

அரக்கர் குலத்தைச் சேர்ந்த இலங்கை வேந்தன் ராவணனின் தங்கை. தந்தையின் பெயர் விஷ்ரவசுரிஷி; தாய் கேசி என்ற கைகாசி. அசுர குலத்தைச் சேர்ந்தவள்.

ராவணனின் தந்தைக்கு இரண்டு மனைவிகள் ஒன்று வாரவர்னீனி. அவரது மகன்தான் குபேரன்.

தன் தங்கையைச் சிறந்த வீரனுக்கு மணமுடிக்க விரும்பினான் ராவணன். கால்கை நாட்டின் வீரரான வித்யுத்சிகுவிற்கு மண முடித்து வைத்தான். தமையன் செய்து வைத்த திருமணம் எனினும் தன் கணவன் மீது அளவற்ற காதல் கொண்டிருந்தாள் சூர்பநகை.

அப்போது ராவணன் தன் சிவபக்தி மீதும் தனது பலத்தின் மீதும் மிகச் செருக்கு கொண்டவனாய்த் தன்னைவிட உலகில் சிறந்தவனே இல்லை என்ற இறுமாப்புக் கொண்டு இந்த ஈரேழ் உலகத்தையும் ஆளப் பிறந்தவன் தான் ஒருவனே, அந்தத் தகுதியும் தனக்கு மட்டுமே தான் இருக்கிறது என்ற கர்வத்தையும் உண்டாக்கிற்று. உலகை ஆளும் நோக்கத்தோடு போரில் ஈடுபட்டு பல நாடுகளைக் கைப்பற்றினான். உலக நாயகனாகும் ஆசையில் கால்கை நாடும் சேர, தங்கையின் மணவாளன் என்ற பாசம் பொய்யாக்கி, சூழ்ச்சியால் வதம் செய்து, தன்னை உலகச் சக்கரவர்த்தியாக நினைத்துக் கொண்டான். தானே மணமுடித்துக் கொடுத்துத் தானே கொன்ற தமையன் இடத்து பித்து பிடித்தவள் போல் புலம்ப, அந்தச் சடலத்தின் முன் சபதம் ஏற்றாளாம் "என் கணவனைச் சூழ்ச்சி செய்து கொன்ற உன்னையும் சூழ்ச்சி செய்து கொல்வேன்!" என்று!

எதற்கும் அசராத தமையன் தான் செய்த தவறையும் உணராது மாறாக அச்செயலுக்கு மாற்றாக ஒரு வழியை ஆராய்ந்து தர கரதூஷணர்களைத் துணைக்கு அனுப்பி தண்டகாரண்யத்தில் (பஞ்சவடி அங்கு தான் வருகிறது) தன் இஷ்டம் போல் வாழ அவளை அனுமதித்தான். அவளும் அங்குள்ள வனத்தில் முனிவர்களை வதைத்துத் தன் இஷ்டம் போல் வாழ்ந்து வந்தாள்.

"அருமையான தன் காதல் வாழ்க்கைக்கு வித்திட்ட தன் தமையனே தன் கணவரைக் கொல்வான் என அவள் கனவிலும் நினைக்கவில்லை!"

நீண்ட பெருமூச்சு ஒன்று இருவரிடமிருந்தும் வந்தது.

ஆனால் "நீங்கள் எழுவாளை நூக்கி அவளை மூக்கும் செவியும் போக்கிச் சினத்தோடு அவள் கூந்தலை விட்டீர்களே, அது எதனால்?" என்றாள்.

"ஆம்! அவளை எனக்கு என்னவோ முதல் பார்வையிலேயே பிடிக்காமல் போயிற்று. ராமண்ணா இவளுடன் இத்தனை நேரம் பேசுகிறாரே என்று நினைத்தேன். அவளைக் கண்ட உடனேயே அவளால் மிகப்பெரிய துன்பம் ஏற்படும் என்று தோன்றியது!"

முகத்தில் அந்த வெறுப்பு அவளை நினைத்த மாத்திரத்தில் படர்ந்தது.

"ஓ! அதனால்தான் கொல்லாமல் உன்னை விட்டேனே! என்று என்னைச் சூர்ப்பநகை என்று நினைத்துக் கொண்டு விட்டீர்கள்!"

"அப்படியா அது எப்போது?" என்றாள்.

உறக்கத்தின் விழிப்பு நிலையில் நாம் செய்வது எதுவுமே தெரிவதில்லை. லக்குவனனுக்கும் அது போல் ஒரு உணர்வு தான்.

"உம்மைச் சொல்லி அவளை அனுப்பிவிட்டாரே ராமண்ணா! பிறகும் வந்தாளா? என் செய்தாள்?".

"ஆமாம்! ஆமாம்!" ராமண்ணா அவளைப் போ என்று சொன்ன பிறகும் "இன்று போய் நாளை வருவேன்!" என்று கூறி வஞ்சமகள் நகர்ந்தாள்.

உள்ளத்து வெறுமையால் இரவு நீண்ட பொழுதாகியது அவளுக்கு. பொழுது விடிந்தால் தன் விடியலும் உண்டு என்று உறுதி கொண்டு விரகதாப வேதனையால் துடித்தாள் சூர்ப்பநகை.

காலையில் புத்தம் புது பொலிவோடு தோன்றிய ராமனின் தோற்றம் அவளுக்குப் பெருவிருப்பம் அதிகரிக்கச் செய்திருக்க வேண்டும்.

ராமன் தன் காலைக் கடன்களைச் செய்வதற்காகக் கோதாவரி நதிக்கரையோரம் சென்றான்.

"என்னை நீ இகழ்வது என்ன?" என்று ஆவேசத்துடன் சீதை தனித்து இருக்கிறாள் என்று நினைத்து" என் சிந்தை பலித்தது" என்று தோகையைத் தொடர்ந்தாள்.

உடனே நான் "நில் அடி!" எனக் கருகினன் பெண்ணென நினைத்தேன் புரிகுழல் பிடித்து ஊக்கித் தாங்கி விண்படர்வென் என வாள் உருவி நுவலா மூக்கும் காதும் வெம்முண் முலைஞம் முறையால் போக்கிச் சினத்துடன் புரிகுழல் விட்டேன்.

காட்சியை இப்போது காண்பவள் போல் கண்ணை இறுக்கி மூடிக்கொண்டாள் ஊர்மிளை.

"இந்நிலையில் ராமண்ணா அவளைப் பார்த்தாரா?"

"ஆம்!"...கண்களை மூடிக்கொண்டு "நான் அவளை கொல்லாமல் விட்டது தவறு தவறு!" என்று புலம்ப ஆரம்பித்தான் இலக்குவன்.

அன்பர் கொஞ்ச நேரம் ஆசுவாசப்படுத்தி கொள்ளட்டும் தன்னை என்று ஊர்மிளை காத்திருந்தாள் ..

- தொடரும்

# அருள்மிகு பரிமளரங்கநாதர் திருக்கோயில், திருநாங்கூர்

108 திவ்ய தேசங்களில் 26 வது திவ்ய தேசம் திருஇந்தளூர் என்ற திருநாங்கூர். இந்த திருத்தலத்தில் பெருமாளின் முகத்தை சந்திரனும், பாதத்தை சூரியனும், நாபிக்கமலத்தை பிரம்மாவும் பூஜிக்கிறார்கள்.

இது கங்கையை விட காவிரி புனிதமானது என்று பெயர் பெற்ற ஸ்தலம்.

பரிமளம் என்பதற்குப் பரிசுத்தம் என்பது பெயர். கங்கையையும், காவிரியையும் பரிசுத்தமாக்கிய இறைவன் என்பதால் இத்தல இறைவனுக்கு "பரிமள அரங்கநாதர்" என்று பெயர்.
பஞ்ச அரங்கத் தலங்களில் இத்தலம் "அந்திரங்கம்" என அழைக்கப்படுகிறது.

இத்தலம் "ஏகாதசி" விரதத்துக்கு உரிய தலம் என்பதால் "ஏகாதசி விரதம்" இருக்க நினைப்பவர்கள், இத்தலத்திற்கு வந்து வழிபட்டு சென்று விரதத்தை ஆரம்பிப்பது நல்லது.
இந்த பெருமாள் கேட்டதையெல்லாம் கொடுக்கும் இறைவன் ஆவார்.

திருஇந்தளூரில் உள்ள இத்திருக்கோவில் "ஏகாதசி விரதம்" சிறப்பு பெறுவதற்கு காரணமாக இருந்த தலமாகும். இங்கு பெருமாள் "வீரசயனத்தில்" கிழக்கு பார்த்து அருள்பாலிக்கிறார்.

இங்கு "சந்திரன்" வந்து தரிசித்துள்ளார். இங்கு உள்ள சந்திர தீர்த்தத்தில் நீராடி தான் "சந்திரன்" தன்னுடைய சாபம் நீங்கப்பெற்றான்.


இங்கு பெருமாளின் முகத்தை சந்திரனும், பாதத்தை சூரியனும், நாபிக்கமலத்தை பிரம்மனும் பூஜிக்கிறார்கள்.

இத்தலத்தில் இறைவனுக்கு தலைமாட்டில் காவிரி தாயாரும், கால்மாட்டில் கங்கை தாயாரும் வழிபடுகிறார்கள்.
மேலும், எமதர்மராஜாவும், அம்பரீசனும் பெருமாளின் திருவடியை பூஜை செய்கின்றனர்.
இத்தலம் தான் கங்கையை விட "காவிரி" புனிதமானவள் என பெயர் பெற்ற திருத்தலமாக விளங்குகிறது.

ஒருசமயம் அம்பரீசன் என்ற மன்னன் நினைத்ததையெல்லாம் பெற்றுத்தரும் ஏகாதசி விரதத்தை பல ஆண்டுகளாக கடைப்பிடித்து வந்தான்.

இவன் ஏகாதசியில் விரதமிருந்து மறுநாள் துவாதசி நல்லநேரத்தில் பிரசாதம் உண்டு விரதத்தை முடிப்பான்.

இவனுடைய நூறாவது விரதநாளில் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு



இருந்தது.
அந்த நாட்டு மக்கள் எல்லோரும் மிகவும் சந்தோஷமாக இருந்தனர்.
ஆனால், தேவலோகத்திலோ அனைவரும் கலக்கமாக இருந்தனர்.

இந்த "அம்பரீசன்" நூறாவது விரதத்தை முடித்துவிட்டால் தேவலோகப் பதவிகூட கிடைத்துவிடும்.

ஒரு மானிடனுக்கு இப்பதவி கிடைத்து விட்டால், தேவர்களின் மரியாதை குறைந்துவிடும் என்று பயந்தனர்.
இந்நிலையில் ஆலோசனைக்காகத் துர்வாசர் முனிவரிடம் சென்றனர்.

அவரும் தேவர்களுக்கு உதவுவதாக தெரிவித்துவிட்டு, மன்னனின் விரதத்தை தடுப்பதற்காக பூலோகம் வந்தார்.
அவர் வருவதற்குள் மன்னன் விரதத்தை முடித்திருந்தான.

அவன் ஏகாதசி விரதம் முடித்திருந்தாலும், துவாதசி நேரம் முடிவதற்குள் அவன் உணவு அருந்தியிருக்க வேண்டும்.

அப்போது தான் ஏகாதசி விரதத்தின் முழுபலனும் அவனுக்கு கிடைக்கும்.
ஆனால், துவாதசி நேரம் முடிந்துவிட்டால் பலனில்லை. அப்போது துவாதசி ஆரம்பிக்க மன்னன் உணவு உண்ண தயாராக இருந்தான்.
அதற்குள் "துர்வாசர்" வந்து விட்டார். துர்வாசர் தன்னுடைய விரதத்தை தடுக்கதான் வந்துள்ளார் என்பதை அறியாமல், மன்னன் அவரை வரவேற்றான்.

இந்த அம்பரீசன் அவரிடம், முனிவரே தாங்களும் என்னுடன் உணவருந்தினால் எனக்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் என்றான்.
துர்வாசர் முனிவர் அம்பரீசனிடம் சரியென்று கூறி, நதியில் நீராடிவிட்டு வருகிறேன்.
அதற்கு பிறகு உணவருந்தலாம் எனக் கூறிச் சென்றார்.
இந்த துர்வாச முனிவரின் திட்டம் என்னவென்றால், தான் நீராடிவிட்டு தாமதமாக வந்தால், அதற்குள் "துவாதசி" நேரம் முடிந்துவிடும்.

அம்பரீசன் நமக்காக காத்திருந்தால், அவனது விரதம் தடைப்பட்டுவிடும் என்பது தான் இவருடைய சூழ்ச்சியாக இருந்தன.
அந்த துவாதசி நேரம் முடிவதற்கு இன்னும் சில மணி நேரங்களே இருந்தது. துர்வாசர் வர நேரமானதால் வேதியர்களிடமும், அந்தணர்களிடமும் ஆலோசனை கேட்டான்.

அதாவது துவாதசி நேரம் முடியவதற்கு இன்னும் சில நிமிடங்களே உள்ளது. என்ன செய்யலாம் என்பதை குறித்து அவர்களது கருத்தை கேட்டான்.
அம்பரீசனின் தலைமைப் பண்டிதர் கூறிய ஆலோசனைப்படி, உள்ளங்கை அளவு தீர்த்தத்தை மூன்றுமுறை குடித்து தன் விரதத்தை பூர்த்தி செய்துவிட்டு முனிவருடன் சேர்ந்து உணவருந்துவதற்காக காத்திருந்தான் அம்பரீசன்.

இவனுடைய செயலை தன்னுடைய ஞானதிருஷ்டியால் அறிந்த துர்வாசர் மிகுந்த கோபமடைந்தார். உடனே, முனிவர் ஒரு பூதத்தை வரவைத்து, அம்பரீசனை கொல்லுமாறு ஆணையிட்டார்.

இந்த பூதத்தைக் கண்ட அந்த மன்னன் பயந்து பரிமளரங்கநாதரிடம் சென்று, பெருமாளே உனக்காக ஏகாதசி விரதம் இருக்கக்கூடாது என்பதற்காக ஏவப்பட்ட பூதத்திடம் இருந்து என்னை காப்பாற்று என்று அவருடைய பாதத்தில் சரணடைந்தான்.

அவனுக்கு அருள்புரிய பெருமாள் எண்ணி, அந்த பூதத்தை கோபத்துடன் விரட்டினார். இதையறிந்த துர்வாசர் பெருமாளிடம் தன்னை மன்னிக்குமாறு வேண்டினார்.
அவரும் அந்த முனிவரை மன்னித்து, அவருடைய கர்வத்தை அடக்கினார். அப்போது பெருமாள் மன்னனிடம், வேண்டியதை கேள் என்றார்.
அதற்கு அம்பரீசன், தாங்கள் இத்தலத்தில் வீற்றிருந்து வருகின்ற பக்தர்களின் குறையை கேட்டு அருள்புரிய வேண்டும் என்றான்.
பெருமாளும் அம்பரீசனின் விருப்பப்படி, இத்தலத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார்.

மயிலாடுதுறை - தரங்கம்பாடி சாலையில் 2 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது இத்திருக்கோவில்.

A s Govinda rajan
KODAMBAKKAM CHENNAI

**தினம் ஒரு தலைவர்கள்**

# பழசி இராசா வரலாறு

வீர கேரள வர்மா பழசி இராசா (Pazhassi Raja, அல்லது கேரளச் சிங்கம், சனவரி 3, 1753 நவம்பர் 30, 1805) கேரளாவின் வடக்கில் உள்ள கண்ணூர் மாவட்டத்திலுள்ள தற்கால கூத்துப்பரம்பு பகுதியில் அமைந்துள்ள கோட்டயம்-மலபார் நாட்டின் மன்னராக இருந்தவர். பிரித்தானியக் குடியேற்றவாதத்தை எதிர்த்துப் போராடிய துவக்க கால விடுதலை வீரர்களில் ஒருவர். பிரித்தானியர்களுக்கு எதிராக அவர் நிகழ்த்திய மறைவுத் தாக்குதல்களில் உயிர்விட்டதை அடுத்து அவருக்கு வீர என்ற அடைமொழி வழங்கப்பட்டது.

பழசிராசாவின் இளமைக்காலம் பற்றிய குறிப்புகள் கிடைப்பதில்லை. துவக்கத்தில் பிரித்தானியருக்கு திப்பு சுல்தானுடன் நடந்த சண்டையில் உதவிய பழசிராசா பின்னர் அவர்களுடன் பிணக்கு கொண்டார். விடுதலை போராட்டமாக இல்லாது அவர்களது வரிவிதிப்பிற்கு எதிரான புரட்சியாக 1793 1797 காலகட்டங்களில் வெடித்ததாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

பழசி குடீரம்-வயநாட்டில் மானந்தவாடியில் பழசிராசா இறந்த இடத்தில் எழுப்பப்பட்டுள்ள நினைவகம்
கேரளாவை ஹைதர் அலி, பின்னர் திப்பு சுல்தான் ஆண்டு வந்தபோது நிலக்கிழார்களை தவிர்த்து விவசாயிகளிடமிருந்து நேரடியாக வரிவசூல் செய்து வந்தனர். பழசிராசாவின் துணையுடன் திப்புவிடமிருந்து கேரளாவை வென்ற பிரித்தானியர் இதனை மாற்றி மன்னர்களிடமிருந்து வரி பெறும் முறையை கொண்டு வந்தனர். பிரித்தானியர் வசூலித்த வரிகள் மக்களால் கொடுக்க வியலாத அளவில் இருந்தன. மக்களின் எதிர்ப்புகளை யடுத்து மன்னர்களால் வரிவசூல் செய்ய இயலவில்லை. தவிர கோட்டயத்தை அடுத்திருந்த பகுதிகளை பழசிராசாவிற்கு கொடுக்காமல் அவரது மாமனுக்கு குத்தகை விட்டனர். இதனால் தன்னை அவமதித்ததாக கருதிய பழசிராசா மக்களிடம் வரி வசூலிப்பதை நிறுத்தினார். இது பிரித்தானியர்களுக்கு உடன்பாடில்லாவிடினும் பழசிராசாவின் மக்கள் ஆதரவை கண்டு ஓர் ஆண்டு வரிவிலக்கு அளித்தனர். ஆனால் பழசிக்கு கோபமூட்டுமுகமாக மாமனின் குத்தகையை ஐந்தாண்டுகளுக்கு நீட்டினர். இதன் எதிர்விளைவாக சூன் 28,1795 நாள் முதல் அனைத்து வரிவசூலையும் நிறுத்தியதோடன்றி பிரித்தானியரால் புரட்சியாளர்களாக காணப்பட்டவர்களுக்கு புகலிடம் கொடுத்தார்.

பிரித்தானிய படைகள், லெப்.கார்டன் தலைமையில் கோட்டய அரண்மனையை சுற்றி வளைத்தது. ஆனால் அதன் முன்னரே பழசிராசா தப்பி விட்டார். பிரித்தானியப் படை அவருடன் பேசி மீண்டும் திரும்ப உடன்பட்டபோதிலும், ஓர் தவறெண்ணத்தால் வயநாட்டின் மலைப்பகுதிகளுக்கு



தப்பினார். 1797ஆம் ஆண்டு பல சிறு தாக்குதல்கள் மூலம் பல பிரித்தானிய வீரர்களை கொன்றார். பழசியை எதிர்க்க முடியாத பிரித்தானியர் அவருடன் உடன்பாடு கொண்டு அவரது மாமனின் குத்தகையை இரத்தாக்கினர். அமைதியாக பிரித்தானியருடன் வாழ பழசி இணங்கினார்.

1799 இல், திப்புவின் சீரங்கப்பட்டணம் வீழ்ந்த பிறகு ஆங்கிலேயர் வயநாடு பகுதிகளை தமதாக்கிக் கொண்டனர். இதனை எதிர்த்து மீண்டும் ஆங்கிலேயருடன் சூன் 1800 இல் சண்டையிடத் துவங்கினார். பிரித்தாளும் குணம் கொண்ட ஆங்கிலேயர் பழசிராசாவை அவரது மலபார் ஆதரவாளர்களிடமிருந்து பிரித்தனர். இதனால் பழசிராசா தனது மிக அணுக்க நண்பர்களுடனும் மனைவியுடனும் காடுகளில் வசிக்க வேண்டியதானது. மட்டனூர் அருகிலுள்ள புரலிமலை புரட்சி போராட்டங்களுக்கு மையமாக விளங்கியது.

அவரது துணைவர்கள் சுழலி,பெருவாயல் நம்பியார் மற்றும் கன்னவத்து சங்கரன் நம்பியார் முதலானவர் பிடிபட்டுத் தூக்கிலிடப்பட்டும் தனது மறைமுகத் தாக்குதல்களை நிறுத்தவில்லை. 1802ஆம் ஆண்டு எடச்சேன கங்கன் நாயர் மற்றும் தலக்கால் சந்து பனமரம் கோட்டையை முற்றுகையிட்டு அங்கிருந்த 25 ஆங்கிலேயரை கொன்று வெற்றிக் கொடி நாட்டினர். இந்நிகழ்வு எதிர்ப்பு இயக்கத்திற்கு புத்துயிர் தந்தது.

இந்த நேரத்தில் வரியை உயர்த்தியதால் மக்கள் கிளர்ந்தெழுந்தனர். இதனைப் பயன்படுத்திய பழசிராசா படையினர் ஆங்கிலேயருக்கு அதிக சேதம் விளைவித்தனர்.

1804ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவராக பொறுப்பேற்ற தாமஸ் ஆர்வி பாபர், பழசிராசாவிற்கு துணைபோவது சட்டவிரோதம் எனவும் புரட்சியாளர்களின் நடமாட்டத்தை ஆங்கிலேயருக்கு தெரிவிப்பது கடமை என்றும் அறிக்கை விட்டார். சூன் 16 அன்று பழசிராசா மற்றும் அவரது துணைவர்களை பிடிப்பவர்களுக்கு பரிசும் அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தலைக்கால் சந்து பிடிபட்டார்.

நவம்பர் 30,1805 அன்று பாபர் நேரடியாக பழசிராசாவினை சுற்றிவளைத்தார். ஆனால் பழசிராசா தனது மோதிரத்தை விழுங்கி ஓர் சிற்றாற்றின் கரையில் தற்கொலை செய்துகொண்டார். மன்னரின் உடல் அதற்குரிய மரியாதைகளுடன் எரிக்கப்பட்டது.

பழசிராசாவின் வரலாற்றினை மலையாள இயக்குநர் ஹரிஹரன் திரைப்படமாக தயாரித்து மம்முட்டி, சரத் குமார், சுரேசுகோபி, மனோஜ் கே ஜயன் முதலானவர் நடித்து தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு மற்றும் இந்தி என ஐந்து மொழிகளில் வெளியிடப்பட்டது.

# Karuppu Movie ராத்து ராசன் பாடல் வெளியீடு



ஆர்.ஜே.பாலஜி இயக்கத்தில் சூர்யா நடிப்பில் உருவாகி வரும் படம் கருப்பு. இப்படத்தின் சூர்யாவுக்கு ஜோடியாக த்ரிஷா நடித்துள்ளார். மேலும் ஸ்வாசிகா, ஷிவதா, இந்திரன்ஸ், யோகிபாபு எனப் பலர் நடித்துள்ளனர். படத்திற்கு சாய் அப்யங்கர் இசையமைத்துள்ளார்.

இந்தப் படத்தின் டீசர் சூர்யா பிறந்தநாளான கடந்த ஆண்டு ஜூலை 23ஆம் தேதி வெளியானது. அதனைத்தொடர்ந்து படத்தின் முதல் பாடல் அக்டோபரில் வெளியானது. இதனையடுத்து கடந்த மாதம் நாங்க நாலு பேரு என்ற இரண்டாவது சிங்கிள் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

இந்நிலையில் இப்படத்தின் மூன்றாவது பாடலான 'ராத்து ராசன்'-ஐ புத்தாண்டை முன்னிட்டு இன்று வெளியிட்டுள்ளது படக்குழு. இப்படம் மே.14ஆம் தேதி வெளியாக உள்ளது.



எதிர்நீச்சல் தொடர்கிறது சீரியலில் ஜனனியாக நடித்து சின்னத்திரை ரசிகர்கள் எல்லோரையும் கவர்ந்து வருபவர் நடிகை பார்வதி.

சீரியல் தற்போது டிஆர்பியில் உச்சத்தில் இருக்க பார்வதியும் முக்கிய காரணம். அந்த அளவுக்கு முக்கியமான ரோல் ஆக ஜனனி ரோல் இருந்து வருகிறது.

நடிகை பார்வதி தற்போது சேலையில் ஹோம்லியாக போஸ் கொடுத்து போட்டோஷூட் எடுத்த புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.

# 'ரணபாலி' படப்பிடிப்பில் புதுமண தம்பதிக்கு பிரமாண்ட வரவேற்பு.




விஜய் தேவரகொண்டா- ராஷ்மிகா திருமணம் கடந்த பிப்ரவரி 26-ந்தேதி ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் பிரமாண்டமாக நடந்தது. திருமணம் முடிந்து ஐதராபாத்தில் நடந்த வரவேற்பு நிகழ்ச்சியில் இந்திய திரை உலகமே திரண்டு வந்து வாழ்த்தியது.

தொடர்ந்து திருமண விருந்து மற்றும் ராஷ்மிகா பிறந்தநாள் கொண்டாட்டத்தில் இருவரும் பங்கேற்று வந்தனர். 1 மாதம் திருமண கொண்டாட்டங்களுக்கு பிறகு விஜய்தேவரகொண்டாவும், ராஷ்மிகாவும் திருமணத்திற்கு முன்னதாக ஏற்கனவே இருவரும் நடித்து வந்த 'ரணபாலி' படப்பிடிப்பில் மீண்டும் பங்கேற்றனர்.

புதுமண தம்பதிகளுக்கு படக்குழுவினர் பிரமாண்ட வரவேற்பு கொடுத்தனர். படத்தில் 'ரணபாலி' கதாபாத்திரத்தில் விஜய் தேவரகொண்டாவும் ஜெயம்மா கதாபாத்திரத்தில் ராஷ்மிகாவும் நடிக்கின்றனர்.

19-ம் நூற்றாண்டின் உண்மையான வரலாற்று நிகழ்வுகளை மையமாக கொண்டு உருவாகும் இந்த படத்தில் இடம்பெற்ற எந்தையாசாமி பாடல் வெளியாகி வரவேற்பை பெற்றது.

# விக்ரம்-ஆனந்த் சங்கர் மீண்டும் கூட்டணி



நடிகர் விக்ரம் மற்றும் இயக்குநர் ஆனந்த் சங்கர் இணையும் திரைப்படம் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என தகவல். இந்தப் படத்திற்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்க உள்ளதாகவும், ஒளிப்பதிவு பணிகளை ஆர்.டி. ராஜசேகர் மேற்கொள்வதாகவும் கூறப்படுகிறது.

இந்திய மதிப்பில் ரூ. 50 முதல் ரூ. 55 கோடி பட்ஜெட்டில் தயாராகும் இந்தப் படத்தை சத்ய ஜோதி ஃபிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இந்தப் படம் தொடர்பான முதற்கட்ட போட்டோஷூட் நடைபெற்று முடிந்துள்ளதாகவும், வருகிற ஏப்ரல் 17-ஆம் தேதி நடிகர் விக்ரமின் பிறந்த நாளை ஒட்டி இந்தப் படம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகலாம்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு மே மாத தொடக்கத்தில் தேர்தல் முடிந்த பிறகு தொடங்கும் என்றும் இந்தப் படம் இந்த ஆண்டு நவம்பர் அல்லது டிசம்பர் மாத வாக்கில் திரைக்கு கொண்டுவர படக்குழு திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்தப் படம் நடிகர் விக்ரம் ரசிகர்களை பூர்த்தி செய்யும் வகையில் முழுக்க முழுக்க கமர்ஷியல் அம்சங்களை கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே இயக்குநர் ஆனந்த் சங்கர், நடிகர் விக்ரம் மற்றும் இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜ் கூட்டணியில் உருவான இருமுகன் திரைப்படம் கடந்த 2016-ஆம் ஆண்டு வெளியானது. மீண்டும் இந்தக் கூட்டணி கிட்டத்தட்ட பத்து ஆண்டுகள் கழித்து ஒன்றிணைந்து இருப்பது ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை அதிகப்படுத்தி இருக்கிறது.

# கிரிக்கெட் வீரராக ஜி.வி. பிரகாஷ்



நடிகர் மற்றும் இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் குமார் மற்றும் நடிகை மாளவிகா மனோஜ் இணைந்து நடிக்கும் புதியத் திரைப்படம் குறித்த அறிவிப்பு இன்று வெளியாகி உள்ளது.

ஜோ படத்தின் இயக்குநர் ஹரிஹரன் ராம்தான் இப்படத்தையும் இயக்குகிறார். இப்படத்திற்கு தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவு செய்கிறார். படத்திற்கு ஜி.வி. பிரகாஷே இசையமைக்கிறார்.

மேலும் படத்தை ஜி.வி. பிரகாஷ்குமாரே இணைந்து தயாரிக்கிறார். தமிழ் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு இன்று அறிவிப்பு போஸ்டரை வெளியிட்டுள்ளது படக்குழு.

இத்திரைப்படம் ஒரு கிரிக்கெட் வீரரின் வாழ்க்கையை மையப்படுத்தி உருவாக உள்ளது. இப்படத்தின்மூலம் ஜி.வி.பிரகாஷ் முதன்முதலாக ஒரு கிரிக்கெட் வீரராக திரையில் தோன்றவிருப்பது குறிப்பிடத்தக்கது.



இயக்குநர் ஆதித்யா தார் இயக்கத்தில் ரன்வீர் சிங் நடிப்பில் உருவாகி மாபெரும் வெற்றி பெற்றுள்ள திரைப்படம் துரந்தர் 2. இப்படம் ரூ. 1700 கோடியை கடந்து வசூல் செய்து வருகிறது.

இப்படத்தில் நடிகை சாரா அர்ஜுன் கதாநாயகியாக நடித்திருந்தார். துரந்தர் 1 மற்றும் 2 ஆகிய படங்கள் மூலம் வசூல் நாயகியாக மாறியுள்ளார்.

இந்த நிலையில், இவ்வளவு பெரிய வெற்றிக்கு நன்றி தெரிவித்து இன்ஸ்டாகிராமில் சாரா அர்ஜுன் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்த பதிவில் துரந்தர் 2 படப்பிடிப்பில் எடுக்கப்பட்ட சில புகைப்படங்களை அவர் பதிவிட்டுள்ளார்.

# தக்ஸிலா திரை விமர்சனம்

தக்ஸிலா(2 / 5)




பழமையான தக்ஷஷிலா நகரத்தின் வரலாற்றையும், அதனை மையமாக கொண்ட நவீன அரசியல் மர்மத்தையும் இணைத்து உருவாக்கப்பட்ட படம்தான் தக்ஸிலா. 2026 காலக்கட்டத்தில் நடக்கும் கதையில், ஒரு இளம் தொல்பொருள் ஆய்வாளர் நாயகன் சதீஷ் ராமகிருஷ்ணன் பழமையான சிதைந்த கட்டிடங்களின் உள்ளே மறைந்திருந்த ரகசிய ஆவணங்களை கண்டுபிடிக்கிறார். அந்த ஆவணங்களில், தற்போதைய அரசியலையே மாற்றக்கூடிய ரகசியம் இருப்பது அவருக்கு தெரிய வருகிறது.

அந்த ரகசியத்தை உடைக்க முயலும் சதீஷ் ராமகிருஷ்ணன், சாணக்யரின் போதனைகள் மற்றும் குறியீடுகளை புரிந்துகொள்ளும் முயற்சியில் பல சிக்கல்களை எதிர்கொள்கிறார். அதே நேரத்தில், அரசியல் சதிகள், துரோகங்கள், தொடர்ந்து வரும் ஆபத்துகள் ஆகியவை கதையை முன்னேடுக்கிறது.

இறுதியில் அந்த ரகசியம் என்ன? ரகசியம் வெளிவந்ததா? என்பதே படத்தின் மீதிக்கதை.

படத்தில் நாயகனாக நடித்து இருக்கும் சதீஷ் ராமகிருஷ்ணன், ஒரு தொல்பொருள் ஆய்வாளராக தனது கதாபாத்திரத்தை நன்றாக வெளிப்படுத்தியுள்ளார். அறிவும், பயமும் கலந்த அவரது நடிப்பு கதைக்கு ஏற்றதாக இருக்கிறது. வில்லன் கதாபாத்திரம் சாதாரணமாக இல்லாமல், தனக்கென ஒரு நோக்கத்துடன் எழுதப்பட்டிருக்கிறது. மற்ற துணை கதாபாத்திரங்களும் கதைக்கு தேவையான ஆதரவை வழங்குகின்றன.

இயக்குனர் சதீஷ் ராமகிருஷ்ணன், வரலாறு மற்றும் நவீன கால அரசியல் த்ரில்லரை இணைக்க முயற்சி செய்துள்ளார். கடந்த காலமும், நிகழ்காலமும் மாறி வரும் காட்சிகள் கதைக்கு வித்தியாசமான அமைப்பை கொடுக்கிறது. திரைக்கதை சுவாரஸ்யமாக நகர்ந்தாலும், சில இடங்களில் மேலும் வலுவாக இருந்திருக்கலாம் என்ற உணர்வு வருகிறது.

சதீஷ் ராமகிருஷ்ணனின் ஒளிப்பதிவு மற்றும் பின்னணி இசை படத்தின் மனநிலையை உருவாக்க உதவுகிறது. குறிப்பாக மர்மம் மற்றும் சஸ்பென்ஸ் காட்சிகளில் இது சிறப்பாக வேலை செய்கிறது.

# ரஜினிகாந்தின் 173-வது பட இயக்குநர் மீண்டும் மாற்றம்?


'கூலி' படத்தை அடுத்து நெல்சன் திலீப்குமார் இயக்கும் 'ஜெயிலர் -2' படத்தில் நடித்து வருகிறார் ரஜினிகாந்த். இதையடுத்து அவரது 173-வது திரைப்படத்தை சுந்தர். சி இயக்குவதாகவும், நடிகர் கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் தயாரிப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. ஆனால், கதையில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக சுந்தர். சி விலகினார். இதனால், சிவகார்த்திகேயன் நடித்த 'டான்' படத்தை இயக்கிய சிபி சக்ரவர்த்தி, ரஜினிகாந்தை இயக்க இருந்தார். இதற்கான அறிவிப்பும் வெளியானது. படத்துக்கான முதல்கட்ட பணிகள் நடைபெற்று வந்தபோதே படத்தின் அறிவிப்பு வீடியோவும் அதில் இடம்பெற்ற பின்னணி இசையும் பெரிய வரவேற்பைப் பெற்றது. இதன் படப்பிடிப்பு இம்மாத இறுதியில் நடைபெற இருந்த நிலையில் இப்படத்தில் இருந்து சிபி சக்ரவர்த்தி மாற்றப்பட்டுள்ளதாகத் கூறப்படுகிறது. அவர் மாற்றப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை. அவருக்குப் பதிலாக இயக்குநர் அஷ்வத் மாரிமுத்து 'ரஜினி 173' படத்தை இயக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது.



ரஜினி படத்துக்காக அடுத்தடுத்து 2 இயக்குநர்கள் மாற்றப்பட்டதால் ரசிகர்கள் குழப்பத்தில் உள்ளனர். அசோக் செல்வன், விஜய் சேதுபதி நடித்து வெற்றிபெற்ற 'ஓ மை கடவுளே', பிரதீப் ரங்கநாதன் நடித்து ஹிட்டான 'டிராகன்' ஆகிய படங்களை இயக்கியுள்ளார் அஷ்வத் மாரிமுத்து.


HAPPY
Birthday
பானுமதி நாச்சியார்


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Happy
Birthday!
Wishing you the happiest and brightest day ever! May you have all the happiness your heart can hold
ப.செல்வம்



RS.999/-
Best MLM
Software
Development
Company
In India
At Easy EMI
9853719337
7436914247
www.mlmperfect.com


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


Happy Birthday
ஆர்.ஹரிகோபி


தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


Happy Birthday
Archana


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
TV NEWS
பேப்பர்பாய்
8122664699


TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009






## பெருமை இழந்தின்று குக்கலானான்

எழுத்திற்கும் சொல்லிற்கும் உலகத்தார்கள்
எழுதிவைத்தார் இலக்கணத்தை ! தமிழர் மட்டும்
எழுத்தோடும் சொல்லோடும் பொருள்தனக்கும்
எழுதிவைத்தார் இலக்கணத்தை முதன்மையாக !
வழுவின்றி வாழ்க்கையினை நடத்துதற்கு
வழிகூறி அகம்புறமாய்ப் பிரித்துத் வைத்தார்
தழுவுகின்ற காதலுக்கும் போர்முறைக்கும்
தரணியிலே தமிழன்தான் நெறியைத்தந்தான் !

நிலமைந்தாய் வகுத்தற்கே எல்லைச் சொல்லி
நிலைமாறும் பெரும்சிறிதாம் பொழுதைச் சொல்லி
நிலம்வாழும் குடிமக்கள் விலங்கு புட்கள்
நிலம்விளையும் மரம்செடிகள் மலர்கள் சொல்லி
நலம்பயக்கும் இசைக்கருவி பண்ணைச் சொல்லி
நலமருளும் தெய்வங்கள் பெயர்கள் சொல்லிப்
புலப்பண்பாம் களவுகற்பில் மாறா மாண்பைப்
புவிதனக்குக் காட்டியவன் தமிழன் அன்றோ !

புறமுதுகு காட்டிப்போர் புரிந்திருந்தால்
புகட்டியப்பால் மார்பறுப்பேன் என்ற தாயும்
மறம்காட்டிப் போர்க்களத்தில் கணவன் மாய்ந்தும்
மகன் குழந்தை என்றபோதும் விடுத்த தாயும்
அறம்வழுவிக் கணவனையே கொன்ற மன்னன்
அவையினிலே நீதிகேட்டு வென்ற பெண்ணும்
முறத்தாலே புலியெதிர்த்து நின்ற பெண்ணும்
மூத்ததமிழ்க் குடிப்பெருமை சொல்லுமின்றும் !

முல்லைக்குத் தேர்; போர்வை மயிலுக்கீந்தே
முத்தமிழன் எவ்வுயிர்க்கும் அன்பு செய்தான்
கல்லணையைக் கோபுரத்தைக் கோட்டை கட்டிக்



கல்விதனில் அறிவியலில் உயர்ந்து நின்றான்!
பல்காதம் கடல்கடந்து நாட்டை வென்று
பலநாட்டில் வணிகம்தான் செழிக்கச்செய்த
தொல்தமிழன் தமிங்கிலனாய் ஆனதாலே
தொன்பெருமை இழந்தின்று குக்கலானான் !

பாவலர் கருமலைத்தமிழாழன்

## பரந்து விரிந்த கடலில்

கவ்விய பின்தான்
தெரிந்தது என்னை
போன்றோர்க்குவைக்கப்பட்ட
தூண்டில் இரை என்று

போராடித் தோற்றேன்
தரைமீது வந்து விழும்வரை

கவிஞர் பாலசந்தர்
மண்ணச்சநல்லூர்

## கவலை !

வீட்டின் எதிர்ப்பை மீறி
அக்கா காதலனுடன் ஓடிப்
போய்விட்டாள்....

கலகலப்பாய் இருந்த வீடு
சாவு விழுந்த வீடு போல்
இருந்தது !

"அவ செத்துப் போயிருந்தா
கூட நான் கவலைப்பட
மாட்டேன், இப்படி
எங்களை மானங்கெடுத்தி
போயிட்டாளே,அவளோட
தங்கச்சி
வாழ்க்கையையாவது
நினைச்சு பார்த்தாளா... !"

வாயிலும் வயிற்றிலுமாய்
அடித்து அழுதால் அம்மா...

மறுநாளும் இன்னும்
உச்சத்தில் அழத்தான்
செய்கிறாள்...

"அக்கா காதலனுடன் ரயில்
முன் பாய்ந்து தற்கொலை
செய்த செய்தி கேட்டு !"

எம்.பி.தினேஷ். கோவை

## ஆனந்தம்

பார்த்துக் கொண்டே
இருக்கலாம் இலையில்
வைத்த சாதத்தை
அக்கம் பக்கம் பார்த்தபடி
காக்கை கொத்திக்
கொத்தித் தின்பதை.

கேட்டுக் கொண்டே
இருக்கலாம் இடையிடையே
அது சந்தோஷமாய்
சக காக்கைகளை
அழைப்பதை.

ரசித்துக் கொண்டே
இருக்கலாம்
அணில்கள் அழகாய்
அருகிலமர்ந்து
கொறித்துக் கொறித்து
உண்பதை.

கே. பி. ஜனார்த்தனன்



## கைப்பேசி நன்மையைக் காண்!

நேரிசை வெண்பா!

விரலின் நுனியிலே
வீறாய் உலகம்
சரம்சரமாய்ச்செய்திகள்
சாந்தாய்..
வருமன்றோ!
ஐயமின்றி அன்பாய்ப்
பயன்படுத்தி.. நாளுமே
கைப்பேசி நன்மைதனைக்
காண்!

பாதையைக்கண்டறிந்துப்
பாங்காய் இசையினை
ஓதிடும் ஒண்மைப்
பொழுதுபோக்கு..
தீதுதான் கைப்படாமல்
காலமும் தேர்ந்தநல்
கருவியாம் கைப்பேசி
நன்மையைக்காண்!

முனைவர்
இராம.வேதநாயகம்.
திருவண்ணாமலை.

## ஹைக்கூ !

காளை கூட சினை என்றால்
தீண்டுவதில்லை
சிறு பிள்ளையைத் தீண்டிய
கயவர்கள் விலங்கிலும் கீழ் !

நெஞ்சு பொறுக்கவில்லை
கொதிக்கிறது நெஞ்சம்
கொல்லுங்கள
கொடூரன்களை!

காம வெறி பிடித்த
கொடூரன்களை
காவு கொடுக்க வேண்டும்
கோயில் வாசலில் !

காம வெறி பிடித்த
கொடூரன்களை
காவு கொடுக்க
வேண்டும் கோயில்
வாசலில் !

மனித வடிவில்
மிருகங்கள்
வாழ்கின்றன கோயிலில்

கவனம் பெண்களே !
ஆலயத்தில் உள்ளோர்
மெய்ப்பித்துள்ளனர்
கடவுள் இல்லை என்பதை !

காட்டுமிராண்டிகள்
திருந்திவிட்டனர்
நாட்டுமிராண்டிகள் கெட்டு
விட்டனர் கொடியோரின்
ஆணுறுப்பை அகற்றுங்கள் !

பிஞ்சின் உயிர் பிரித்த
வஞ்சகரின் உயிர் பறிப்பதே
உன்னத தீர்ப்பாகும் !

பாலியல் கொடுமை கொடூரம்
இதற்குப்பின்னும் நம்பலாமா ?
கடவுள் உண்டு என்பதை !



மனித வடிவில்
மிருகங்கள்
வாழ்கின்றன
கோயிலில்
கவனம் பெண்களே !

கவிஞர் இரா .இரவி

## அஃறிணையின் அன்பு!

நேரிசை வெண்பா!

பறவைக்கும்
உள்ளமுண்டு
பாங்காய் அறிவோம்!
சிறந்த விலங்குநேயம்
சீராய்... அறிந்தே
செழுமைப்பறவையே
சீருணவை ஈயும்!
அழகே அருமையே தான்!
உணவின்றி யாரும்
உயிர்வாழ்தல் ஆகா!
கணக்காய் உணவைக்



கனிந்தே.. குணத்துடன்
ஒன்றிய ஒன்றுபெற
ஒண்மை அறச்செயல்
நன்றாகும் அன்றோ நனி!

முனைவர்
இராம.வேதநாயகம்

## தீரா வலியாய்

எழுத்தாளர்கள்
மறைந்தாலும்
தங்கள் எழுத்தால்
சிரஞ்சீவியென
மனதைத் தேற்றிக்
கொண்டாலும்
இழப்பென்னவோ
தீரா வலியாய்....

ஸ்ரீகாந்த் திருச்சி

சாதி சாதிப்பதற்கு
தடையாகாது

மதம் மனிதனை
பிரிக்கலாகாது

புத்தகங்களை விளக்காக்கி
அறிவுத் தேடல் அவசியம்

சட்டத்தின் மாமேதை
சமூகத்தின் ஒளிவிளக்கு



அறிவுச்சுடர்
அம்பேத்கரின்
பெருமை
போற்றுவோம்

நாகை
பாலா



## வைராக்கியம்

மாடி வீடு கட்டணும்னு
கோடி கனவோடு
வந்தேனுங்க
ராஜா வீட்டு கன்னுக்குட்டி
கூஜாவாகி ஒரு
கட்டில் தொழுவத்தில
அடைந்ததென்ன ?
ருசியா சோத்துல குழம்பை
ஊத்தி , திண்ண வாயி
பசியில குபூஸ்ஸ தான்
முழுங்குதய்யா.
ஷேக்கு நாட்டு மணல் நகரம்
ஷோக்கா தான் இருக்குதப்பா
எட்டுத்திக்கும் சுத்தி நிக்கும்
ஒட்டகத்தை பாலையில
மேய்க்கயில அடிச்ச மண்ணு
காற்றினிலே எங்களுக்கும்
எதுவும் தான் தெரியலியே
விடிந்து இருட்டும்
பொழுதினிலே உன் நெனப்பு
வாட்டுதம்மா
வெட்டிப்பய பேரை தான்
மாத்தா தான் நிக்குறேண்டி
வீராப்பா ஒரு நாளு
உன் புருஷன் நான்தான்னு
கவுரதையா சொல்லுவேடி
கை கொட்டி சிரிச்ச சொந்தம்
–ஒரு நாளு
காசு பணம் வந்ததுமே
வாய் பொத்தி பொறுமுமடி
சின்ன புள்ள ,செவத்த புள்ள
நம்பிக்கையிய விட்டிடாதே
கஷ்டப்பட்டாலும்
இஷ்டப்பட்டு உனக்காக
உழைப்பேன்டி
சத்தியமா சொல்லுறேன்
சாதிச்சிட்டு வருவேன்டி
ராசாத்தி உன்ன தான்
ராணி போல ஆக்குவேன்டி
–எண்ணமும் –எழுத்தும் –

நெளஷாத் கான் .லி



விஷுக்கனிகளும்
குருவாயூரப்பனும்
பெரிய தட்டும் தட்டு நிறைய
காசும் பணமும்
கிண்ணங்கள் நிறைய
நகையும் தொகையும்
வருடம் தோறும் தருகிறோம்
என் கண்ணனே !!
வருடம் முழுவதும்
எங்களுக்கு நீ நாங்கள்
தட்டில் வைத்த
அனைத்தையும் அள்ள
அள்ள சிறிதும்
குறையாமல் பாங்காய் தந்து
வாழ்விற்கு நிறைந்த
ஆயுள் ஆரோக்யம் அளித்து
சந்தோஷங்களையும்
குடும்ப ஒற்றுமையையும்
வீட்டிற்கு செழுமையும்
தந்து உன் கடைக்கண்
பார்வையால் அருள
வேண்டும் மதுராபுரி
வாசனே குருவாயூரப்பனே !!!
தீப சுடரில் கொன்றை
மலரில் ஒளிந்திருக்கும்
கண்ணனே மணி
வண்ணனே !!
கனிகளின் சுவையில் பால்
பாயசம் பழம் சர்க்கரை
என அனைத்தும்
ஏற்றுக்கொண்டு எங்கள்
பிரார்த்தனை கண்டு
உன் புன்சிரிப்பால் எங்கள்
வாழ்வை செழிக்க செய் !!!

செல்லம் சேகர்




வணக்கம். "ஸ்ரீபராபவ" சித்திரைத் தமிழ்ப்புத்தாண்டு நல்வாழ்த்துகள்..!

## "இன்னும் கொஞ்சம்."

இன்னும் கொஞ்சம் பேச
அவனுக்கு அனுமதி
அளித்திருக்க வேண்டும்.
இன்னும் கொஞ்சம் பாட
அவனுக்கு அனுமதி
அளித்திருக்க வேண்டும்.
இன்னும் கொஞ்சம்
நடிக்க அவனுக்கு வாய்ப்பு
அளித்திருக்க வேண்டும்.
மேற்கூறிய இத்தனையும்
நன்றாக இருந்தது.

ஆனால்..

செய்யாத ஒரு
குற்றத்திற்காக
சிறையிலடைத்து அவனைத்
தண்டிக்க வேண்டுமென்ற



நம்ம ஊரு
நாட்டாமையின்
பிடிவாதம்தான்
சரியில்லை..!

கவிச்சாரல்
கொள்ளிடம்
காமராஜ்.

# நூல் விமர்சனம்

மின்னல் !
நூல் ஆசிரியர் கவிஞர் அரவிந்தன் ! அலைபேசி 9442663637. மின் அஞ்சல் kannandampdara03@gmail.com
நூல் விமர்சனம்
கவிஞர் இரா .இரவி !

நூல் ஆசிரியர் கவிஞர் அரவிந்தன் அவர்கள் தன்னுரையில் எழுதி இருப்பது ரசிக்கும்படி உள்ளது .

" சில நேரங்களில் சில இடங்களில் நூறு ரூபாய் தாளைவிட ஒரு ரூபாய் நாணயத்துக்கே அவசியம் ஏற்படும் .அப்படித்தான் ஹைக்கூ கவிதைகள் ."

ஹைக்கூ கவிதைக்கு இது வரை யாரும் சொல்லாத விதமாக வித்தியாசமாக சொல்லி உள்ளார் .பாராட்டுக்கள் .


அன்று மனிதனை நெறிப்படுத்துவதற்காக மதங்கள் தோற்றுவிக்கப்பட்டதாக சொன்னார்கள் .ஆனால் இன்று மனிதனை வெறிப்படுத்தவே மதங்கள் பயன்படுகின்றன .என்பதை உணர்த்தும் ஹைக்கூ நன்று .

சில நேரங்களில் மனிதனும் யானைபோல மதம் பிடித்துவிடும் !

இதே கருத்தை ஒட்டி நான் வடித்த ஹைக்கூ என் நினைவிற்கு வந்தது . யானைக்கு மட்டுமல்ல மனிதனுக்குப் பிடித்தாலும் ஆபத்து

### மதம் !

அடுக்குமாடி வீடுகள், உயரமான வீடுகள் என்று கட்டடங்கள் விரிவடைந்தபோதும் மனித மனங்கள் மிகவும் சுருங்கி விட்டது என்ற உண்மை உணர்த்தும் ஹைக்கூ நன்று .நகரத்தில் அருகருகே




மனிதர்களின் வீடுகள் தூரத்தில் மனிதநேயம் !

ஹைக்கூ கவிதை பற்றியே சில ஹைக்கூக் கவிதைகள் வடித்து உள்ளார் .அவற்றில் ஒன்று . கஞ்சனாக எழுதினாலும் வள்ளலாகச் சிந்திக்க வைக்கும் ஹைக்கூக் கவிதை ! இலங்கையில் நடந்த தமிழினப் படுகொலை பற்றி மனிதநேயர்களால் கண்டனத்தை பதிவு செய்யாமல் இருக்க முடியாது . நூல் ஆசிரியர் கவிஞர் அரவிந்தன் அவர்கள் கண்டனத்தை பதிவு செய்துள்ளார். இலங்கையில் முதல் பலி புத்தர் அப்புறம் தமிழர்கள் !

பெண் குழந்தை பிறந்தால் வருந்தும் மக்கள் இன்றும் இருக்கின்றனர். பெண் குழந்தைகளைக் கொல்லும் அவலம் கிராமங்களில் இன்றும் நடந்து வருகின்றது .மகனை விட மகளே இறுதி வரை பாசமாக, அன்பாக இருக்கிறாள் என்பதை உணராதவர்கள். அவர்களுக்குகான ஹைக்கூ . ஆண்பாலுக்கு எதிரான பால் பெண்பால் பெண்பாலுக்கே எதிரான பால் கள்ளிப்பால் !

மூட நம்பிக்கையைச் சாடும் விதமாக ஹைக்கூ வடித்துள்ளார். பூனை குறுக்கே சென்றால் அஞ்சும் மனிதர்கள் இன்றும் இருக்கின்றனர் .எள்ளல் சுவையுடன் வடித்த ஹைக்கூ நன்று . மனிதன் குறுக்கே வந்தான்

### யோசிக்கிறது பூனை !

பலர் வல்லரசு வல்லரசு என்று வீர வசனம் பேசி வருகின்றனர். ஆனால் ஒரு அரசு வல்லரசு ஆவதை விட வறுமை ஒழித்து தன் நிறைவு பெற்ற நல்லரசு ஆவதே நன்று என்பதை உணர்த்தும் ஹைக்கூ நன்று . இரண்டாயிரத்து இருப்தில் வல்லரசு எந்த ஆண்டிலிருந்து நல்லரசு ! சிந்திக்க வைக்கும் விதமாக சமுதாய அவலங்களைச் சாடும் விதமாக ஹைக்கூ வடித்துள்ளார் . குப்பைத்தொட்டியில் விளம்பரம் குப்பைகளைப் போடுங்கள் குழந்தைகளைப் போடாதீர்கள் !

இயற்கைப் பற்றி ஹைக்கூ வடிப்பதில் ஜப்பானிய ஹைக்கூக் கவிஞர்களையும் தமிழக ஹைக்கூக் கவிஞர்கள் மிஞ்சி விட்டார்கள் என்பதை மெய்ப்பிக்கும் விதமாக படைத்து வருகின்றனர் .இந்த ஹைக்கூ படிக்கும்போது வாசகர்க்கு மனக்கண் முன் ஆலமரம் வரும் என்று அறுதி இட்டுக் கூறலாம் . எத்தனை ஜடை இருந்தாலும் அழகுதான் ஆலமர விழுதுகள் ! மரம் மழைக்கான வரம் .இது அறியாமல் பலர் மரங்களை கண்மூடித் தனமாக வெட்டி வீழ்த்தி வருகின்றனர் .அதனை கண்டிக்கும் ஹைக்கூ . காடுகளை அழித்து பெயர் வைத்தான் பசுமை நகர் ! கோடை காலத்தில் இதம் தருபவை மரங்கள் .மரத்தின் மேன்மை உணர்த்தும் ஹைக்கூ . கடும் வெயில் குடை பிடிக்கிறது மரம் ! மின்னல் என்ற பெயரில் ஹைக்கூ மின்னல்கள் வழங்கி உள்ள நூல் ஆசிரியர் கவிஞர் அரவிந்தன் அவர்களுக்கு பாராட்டுக்கள் .வாழ்த்துக்கள் .



## சுமந்தவள்...

விறகு சுமப்பவனுக்கு வீடு
வந்ததும் ஓய்வு பொதி
சுமப்பவனுக்கு ஆற்றின் கரை
வந்ததும் ஓய்வு

சிந்தனையை சுமப்பவனுக்கு
கவி வரைந்ததும் ஓய்வு
காதலை சுமப்பவனுக்கு
கல்யாண நாளில் ஓய்வு

பத்து மாதம் என்னை
வயிற்றில் சுமந்தவளுக்கு
பேறுகாலம் முடிந்தும்கூட
இல்லை ஓய்வு

கருவில் சுமந்தது பத்து
மாதம் மட்டும் தான் என்னை
மனதில் சுமந்துகொண்டு
இன்னும் இன்னும் எத்தனை
நாளோ...

கனவுகளோடு என்னை
கருவினில் சுமந்தவள்
கவலைகளோடு என்னை
மனதில் சுமந்தவள்



இன்று கட்டம்
போட்ட
கண்ணாடி
சட்டத்தினுள்
புகைப்படமாய்...
அவளை
சுவர்தான்
சுமக்கிறது.

எஸ். சந்திரசேகரன்
அமுதா செஞ்சிக்கோட்டை.

## ஹைக்கூகள்

இறுதி நாழிகையை
ஒப்படைத்து / வைகறையிடம்
விடைபெறும்/
நடைபயின்ற இருள்.
*********
மந்தவொளியை அதிகமாக/
இருளைக் குறைவாக
நனைத்து / சந்திக்க
வைக்கிறது அந்திமழை./
**********
ஒரே குடையின் கீழ் /
இணைகிறோம் நிழலும்
நானும்/ ஒளிப்பட
நிலையத்தில்/
**********
பௌர்ணமியைப்
பழிக்கின்றன/ முழு இரவைக்
காணா / இருபத்தொன்பது
பிறைகள்/
********
மௌனத்தை
இரகசியமாக/
மொழியாக்கம்
செய்கையில்/
நிசப்தத்தின்
நிழலாடல்/
**********
வெறிச்சோடலை/
வெறித்தனமாய்
தாக்கியவாறே/
நடைபாதையை நெருங்கும்
தொடரி/
**********
நிழல்களைத் தொலைத்து
விட்டு/ நெடுந்தூர வானில்
பறக்கின்றன/ புள்ளினங்கள்./
**********
நிறம் மாறுகின்றன/
மரங்கொத்தி அலகை
அசைப்பதற்குள்/
விருட்ச நிற பச்சோந்திகள்/
*********
தேங்கிய நீரில் / வரிசையாக
மிதக்கின்றன / இறந்த
கட்டெறும்புகள்/



*********
"கால்' வில்லாகிறது /
கீழ்பாகம் பொதிந்து /
அரைவில்லான வானவில்/

முனைவர்
வே. புகழேந்தி







## சித்திரையே வருக ! நல்ல சிந்தனையே தருக !

முதுகெலும்பான விவசாயி வாழ்வு வசந்தமாகட்டும்
முக்கியமான தொழிலான விவசாயம் செழிக்கட்டும் !

பெண்களுக்குச் சமஉரிமை சாத்தியமாகட்டும் !
பெனடிமைத்தனம் சமுதாயத்தில் ஒழியட்டும்

வரதட்சணைக் கொடுமை இலாது அகலட்டும் !
வஞ்சியர் திருமணம் இயல்பாக நடக்கட்டும் !

பெண்சிசுக் கொலை இல்லாது ஒழியட்டும் !
பெண் குழந்தைகளைப் பேணிடும் நிலை வரட்டும் !

வேலை இல்லாத் திண்டாட்டம் ஒழியட்டும் !
வேலை வாய்ப்பு எல்லோருக்கும் கிட்டட்டும் !

சாதி சமயச் சண்டைகள் இல்லாது ஒழியட்டும் !
சகோதர எண்ணம் எல்லோருக்கும் வரட்டும் !

வன்முறை நாட்டில் எங்குமின்றி ஒழியட்டும் !
வசந்தம் வாழ்வில் அனைவருக்கும் வசப்படட்டும் !

அநீதிகள் நாட்டில் இல்லாது ஒழியட்டும் !
அறவழியில் சமுதாயம் எந்நாளும் நடக்கட்டும் !

மூடநம்பிக்கைகள் முற்றாக ஒழியட்டும் !
மூளையைப் பகுத்தறிவிற்கு பயன்படுத்தட்டும் !

செயற்கை உரங்கள் இல்லாது ஒழியட்டும் !
இயற்கை உரங்கள் எங்கும் தூவட்டும் !

மதவெறி மண்ணோடு மண்ணாக மறையட்டும் !
மனிதநேயம் மனங்களில் மலரென மலரட்டும் !

நச்சுக் கலைகள் எங்குமின்றி அழியட்டும் !
நல்ல கலைகள் நாட்டில் எங்கும் வளரட்டும் !

இளைய சமுதாயம் மூத்தோரை மதிக்கட்டும் !
இனிவரும் சமுதாயம் சிறந்ததாகச் சிறக்கட்டும் !

உலகின் முதல் மொழி தமிழ் உலகம் உணரட்டும் !
உலகம் முழுவதும் உள்ள மொழி தமிழ் அறியட்டும் !

ஏற்றத் தாழ்வுகள் இல்லாது ஒழியட்டும் !
எங்கும் எதிலும் சமநிலை என்றாகட்டும் !

ஆணவ எண்ணம் அடியோடு அழியட்டும் !
அமைதி பூங்காவாக அகிலம் திகழட்டும் !

தீய எண்ணங்கள் மனதிலிருந்து ஒழியட்டும் !
நல்ல எண்ணங்கள் மனதினில் நிலைக்கட்டும் !

மரங்களை வெட்டுவது இல்லாது ஒழியட்டும் !
மரங்களை வளர்ப்பது மக்களின் கடமையாகட்டும் !

ஏரி குளம் கண்மாய் எங்கும் தூர் வாரட்டும் !
எல்லா மழைநீரையும் அவை சேமிக்கட்டும் !



நீதி எங்கும் எதிலும் நிலைபெறட்டும் !
நிதிக்கு மயங்கும் நிலை மாறட்டும் !

வாக்கில் மெய் என்றும் நிலைக்கட்டும் !
வள்ளுவர் வாக்கென வாழ்வாங்கு வாழட்டும் !

பஞ்சம் பட்டினி இல்லாது ஒழியட்டும் !
பாவம் ஏழைகள் யாருமில்லை நிலை வரட்டும் !

கொலை கொள்ளை எங்கும் இல்லாது ஒழியட்டும் !
கொள்கை குறிக்கோளோடு மக்கள் வாழட்டும் !

இலஞ்சம் ஊழல் எங்கும் இல்லாது ஒழியட்டும் !
இலட்சிய நோக்குடன் மக்கள் செயல்படட்டும் !

துன்பம் கவலை வாழ்வில் தூர விலகட்டும் !
இன்பம் மகிழ்ச்சி என்றும் நிரந்தரமாகட்டும் !

துயரம் சோகம் இல்லாது ஒழியட்டும் !
தூய நல்வாழ்க்கை எல்லோருக்கும் அமையட்டும் !

கல்வியைக் காசாக்கும் கொடுமை ஒழியட்டும்
கல்வி அனைவருக்கும் இலவசம் என்றாகட்டும் !

மதுக்கடைகள் நாட்டில் இல்லாது ஒழியட்டும் !
மதுப்பழக்கம் மக்களுக்கு இல்லாது ஒழியட்டும் !
.
உடல்தானம் பற்றிய விழிப்புணர்வு வளரட்டும் !
உடல்தானத்தால் பலர் உயிர் வாழட்டும் !

கண்தானம் என்பது இனி கட்டாயமாகட்டும் !
கண்தானம் தந்தால்தான்சுடுகாட்டில் எனுமதி என்றாகட்டும் !

**கவிஞர் இரா .இரவி**




கொலுசு தானடி அணிந்தாய்
நீ நடந்து வரும் போது வந்த
முத்துச் சத்தம் கொத்தோடு
அள்ளிச் சென்றது
பாவி மனசை!

நீ இப்படி இருக்கும் வரை
காதலிக்காமல்
எப்படி இருப்பது?!

சாயாத கோபுரமே
நீ சாய்த்த உலக அதிசயத்தை
யாரிடம் சொல்ல!

நிலவை பார்க்கும்
போதெல்லாம்
துறு,துறுன்னு துடிக்கும்
அவள் இரு கண்கள் தான்
அடிக்கடி ஞாபகத்துக்கு
வந்து போகிறது!

கவிதை சொல்லியே
கவிழ்க்கிறாய் என்கிறாள்.
எப்படி சொல்ல?
அவள் கண்களால்
என்னை கொன்ற கதையை!

திருட்டுத்தனமாய் தானடி
உந்தன் இடுப்பு மடிப்பை
கண்டு இரசித்தேன்
ஏனடி உதித்தது?
புதியதொரு இதிகாசம்!

நீ வெட்கத்தால் துப்பி எறிந்த
துண்டு நகம் கூட
எந்தன் அறையில்
பிறை நிலவானது!

அமாவாசை இரவில்
எந்தன் வீதியில் வலம் வாடி
என் பகுதி மக்கள்
நிலவின் பிரகாசத்தை
வரமாய் வாங்கி
கொள்ளட்டும்!

அன்பு சூழ் உலகு மட்டுமல்ல
தேவதைகள் சூழ்ந்த
உலகமும் வரம் தான்!



கடல்
நீரிலெல்லாம்
குளிக்காதே
உன் வியர்வை
பட்டு தித்திக்க
போகிறது!

**லி.நௌஷாத் கான்**



கருப்பு மையிட்ட கண்ணே
கண்டவுடன் காதல்
கொள்ளாதே
இமைப்பொழுதில்
நல்லவனென்று எண்ணாதே.
இருவருக்கும் இருக்கும்
முரண் தெரியாமல்
உன்கை வலையை
பிண்ணிக்கொண்டிருக்கிறது.
எப்படி சொல்வேன்.
நான் ஒரு அரக்கனென்று.
யோசித்து வலையைத்
தயார்செய்.

நீ வீசிய வலையை
அதனால்தான்
நான் தவிர்க்கிறேன்.
கண்மை அழியும் அளவிற்குக்
காயத்தையும்
நினைவுகளையும்
தரும் கானல் நீர்தான் நான்



அதனால்,
இந்த
கனம்நமக்கு
போதுமானது.

**துங்கன்.**
கோயம்புத்தூர்




## மவுசுத் திருவிழா

அஞ்சு வருஷத்துக்கு ஒரு
தடவ அலுப்பு சலிப்பேதும்
இல்லாமலே மக்களை
கடவுளா மதிச்சி வரும்
மகத்துவம் தரும் மவுசுத்
திருவிழா

திரும்புறப் பக்க மெல்லாம்
தெருமுனைப் பிரச்சாரம்
கேக்கலாம்.... வியக்கிற
தலைவரை யெல்லாம்
வீதியிலே எங்கும் பாக்கலாம்

தொகுதிப் பக்கம் எட்டிப்
பாராத எம்.எல்.ஏ.க்கள்
எல்லாம் இனிமே
ஊசி ஒடிந்த சோகத்துக்குக்
கூட ஓடி வந்து நின்னு
உதவுவாங்க

கஞ்சத் தனம்
காட்டாம நல்லா
கரன்சியை அள்ளி
வீசுவாங்க காசு
பணத்துக்கு



மயங்காம கருத்தா இருக்கக்
கத்துக்கணும்

வாய்ஜாலம் காட்டி
வக்கணையா
வார்த்தை ஆட்டம்
ஆடுவாங்க... வஞ்சக
வலையில விழுந்திடமா
வருங்காலம் நெனச்சி
வாக்களிங்க

உலக வாசிப்பு தெனம்பார்த்து
தேர்தல் வந்து
வாய்ச்சிருக்கு...
யோசிச்சிப் பார்த்தா இதனால
கூடுதல் நன்மை
கிடைச்சிருக்கு

பத்தோடு பதினொண்ணா
நினைச்சி பொன்னான
உரிமையைப் பொருளா
மாத்திடாதீங்க...
பரிசுத்தமா ஓட்டுப் போட்டு
பத்தரை மாத்து
தங்கமாயிடுங்க!

**நெல்லை குரலோன் ,**
பொட்டல் புதூர்




சித்திரை பொழுது விடிந்தது
எது வந்து சேரினும்
எழுந்து நில் என்றே
சித்திரை பொழுது விடிந்தது!

கடியும் பகை வெல்ல
கொல்லும் மிடி துடைத்து
எழுந்து நில்; என்றே
சித்திரை பொழுது விடிந்தது

மடியா கனவுடன்
வடியா எழுச்சியுடன்
துடிக்கும் மனதின் ஒடியா
தெம்புடன் வாழ் என்றே

புது சித்திரை பொழுது
விடிந்தது

உன்னும் உணர்வால்;
பின்னமின்றி பிசிறன்றி
தன்னில் நிறைவாய்
உன்னதமாய் மன்பதைக்கு
இன்பமாய் அன்பு செய்;



என்றே

புது சித்திரை
பொழுது
விடிந்தது

**சசிகலா விஸ்வநாதன்**



1. கர்ணனைப் போல
நண்பனை தேர்ந்தெடு
நீ வீழ்கின்ற நிலை வந்தாலும்
உனக்காக போராடுவான்

2. உண்மையாக
இருப்பவர்களிடம் உறவுகள்
ஒட்டாது

3. பாவத்தை மனிதனுக்கு
செய்துவிட்டு மன்னிப்பை
கடவுளிடம் கேட்கும் அதிசய
பிறவி மனிதன்

4. அடுத்தவன் அடுப்பில்
என்ன வேகிறது என்று
பார்க்காதீர்கள் உங்கள்
அடுப்பில் என்ன கருகு
இருக்கிறது
என்று
பாருங்கள்



5. சரியா
பேசுகிறோமோ
என்பதை
விட சரியானவர்களிடம்
பேசுகிறோமா என்பது தான்
முக்கியம்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி




## சமத்துவம் பேணுவோம்!

(டாக்டர் அம்பேத்கர்)

நிலைமண்டில ஆசிரியப்பா!

வடக்கில் உதித்த
வண்ண சமத்துவம்
திடமன சூரியன்
தேர்ந்த அம்பேத்கர்!

சாதி வேறுபாடு
தள்ளி வைப்போம்
ஓதிச் சென்றார்
அம்பேத் கர்தான்!

சமத்துவ சமூகம்
சாந்தாய் அமைய

கமழுங் கொள்கை
கண்டார் அம்பேத்கர்!
சட்ட மாமேதை
சரிநிக ரெல்லாம்
திட்ட மாகத்
தேர்ந்தே உரைத்தார்!

சட்டமா மேதை சமூகச் சிற்பி
எட்டாக் கனியை
இனிமையாய்த் தந்தார்!



அண்ணல் அம்பேத்கர்
அளித்த சமத்துவம்
கண்ணாய்ப் போற்றி
கடைப்பிடிப் போமே!

**முனைவர் இராம.வேதநாயகம்.**
திருவண்ணாமலை.




## சித்திரைப் பெண்ணே வா வா!

சித்திரைப் பெண்ணே வா வா
செழிப்பைத் தரவே வா வா!
முத்திரை பதிக்க வா வா
மேன்மை யாக வா வா!
வித்தக மாக வா வா
வீறு கொண்டே வா வா!
முத்தமி ழாக வா வா
முன்னேற்றம் தரவே வா வா!

இத்தரை போற்ற வா வா
இனிமை பொங்க வா வா!
மொத்த மாக வா வா
முழுமன தாக வா வா!
உத்தமி யாக வா வா
ஊரே போற்ற வா வா!

உத்தம மாக வா வா
உள்ளம் மகிழ வா வா!
எத்திசை போற்ற வா வா
எழிலே பொங்க வா வா!

ஒத்தி சைந்தே வா வா
ஒற்றுமை ஓங்க வா வா!
கத்துகடல் சூழ வா வா
கனிவாகத் தானே வா வா!

கொத்து மலராய் வா வா
கொஞ்சு தமிழாய் வா வா!

சத்தோ டவேதான் வா வா
சந்தனம் மணக்க வா வா!

சுத்த தமிழாய் வா வா
சுடரின் ஒளியே வா வா!

சித்தம் மணக்க வா வா
சீரினைக் கொண்டே வா வா!

சொத்தாகத் தானே வா வா
சொந்தம் கொள்ள வா வா!

தத்தித் தத்தி வா வா
தரணி போற்ற வா வா!
தித்திக்க நீயும் வா வா!
தேனின் சுவையாய் வா வா!

நித்திலக் குவியலே வா வா
நெஞ்சு குளிர வா வா
பத்தரை மாற்றுத்
தங்கமே வா வா
பசுமைப் பொன்னாய்
வா வா!

புத்தமிழ் தாக வா வா
பூத்துக் குலுங்கிட வா வா
புத்துணர் வாக வா வா
பொலிவோ டேதான் வா வா!

புத்தெழுச்சி யாக வா வா
புதுமல ராக வா வா
மத்தளம் முழங்க வா வா
மங்கல மாக வா வா!

**முனைவர் இராம.வேதநாயகம்.**




சித்திரக்கனியின் வாழ்த்துகள் என் பிறந்தநாள் இன்று என்னையும் வாழ்த்துங்கள்

இனிய சித்திரை புத்தாண்டு வாழ்த்துகள்...

இன்று பிறந்த எனக்கும் இது ஒரு அகவைத் திருநாள் தான்...

நாளென்ன செய்யும் கோளென்ன செய்யும் என்ற ஞானசம்பந்தரின் கூற்றுப்படி யாகிலும் நல்ல நாள் நமக்குத் தெம்பைத் தருகிறது..அதிலும் நம்மைக் குறிப்பாய் வாழ்த்தும்போது அந்த மகிழ்ச்சியே அலாதிதான்...

கிட்டதட்ட முப்பது வருடங்களாய் நகர்ந்த என் பிறந்த நாள் வாழ்த்து...சக அலுவலர்களுடன் கொண்டாடி மகிழ்ந்தது.. இன்று அவர்களுடன் நான் இல்லை...

இருந்தபோதும் இங்கும் ஒரு தனிக் கூட்டம் அந்த அன்பில் நனைவதும் ஒருவித மகிழ்ச்சியாகத் தான் உள்ளது

இதோ அறுபத்து ஒனபதைக் கடந்துவிட்டது வாழ்வியல் அனுபவங்களும் நமக்குச் சொல்லித் கொடுத்த பாடங்களும் நாம் விட்டுச் செல்லும் எச்சங்களும் பிறர்க்கு உதவியாக இருக்கவேண்டும்..இருக்கிறது என் வாழ்வு...

இன்னும் எத்தனை காலங்கள் இந்த மண்ணிலோ.. இதோ இதே அன்புடன் ஒவ்வொரு வருடத்தையும் கடந்து செல்ல உங்கள் வாழ்த்துகளும் இறை அருளும் சேரட்டும்..வாழ்க வளத்துடன்..

என்னை விடப் பெரியவர்களுக்கு என் பணிவான வணக்கத்தையும்.. என்னைவிடச் சிறியவர்களுக்கு வாழ்த்தையும்...இறைவனின் அருளோடு....வேண்டுகிறேன்...

1. பாசம் வைப்பது தப்பில்லை
ஆனால்பாசத்தின் அருமை
தெரியாதவர்கள் மீது
வைப்பது தான் தவறு

2. உலகிலேயே மிகவும்
ஆபத்தானது ஏழைகளின்
சாபமும் பணக்காரர்களின்
பாராட்டும் தான்

3. ஆணி நிமிர்ந்து நின்றால்
சுத்தியலுக்கு பிடிக்காது
மனிதன் நிமிர்ந்து நின்றால்
சுத்தி இருப்பவர்களுக்கு
பிடிக்காது

4. பூமியே வாடகை வீடுதான்
எல்லோரும் ஒருநாள்
கண்டிப்பாக காலி செய்து
தான் ஆக வேண்டும்

5. கூட்டணி என்பது ஒருவர்
குளிர் காய மற்றவர்கள்
விறகுகளாக எரிவது

--------------------

1. சேமிப்பு இல்லாத குடும்பம்
கூரையில்லா வீட்டிற்கு சமம்

2. கட்டுப்பட்டு இருப்பதல்ல
சுதந்திரம்
கட்டுப்பாட்டுடன் இருப்பதே
சுதந்திரம்

3. வாழ்க்கையில் பிடித்த
வாழ்க்கையை வாழ்பவன்
அதிர்ஷ்டசாலி
எந்த வாழ்க்கையாக
இருந்தாலும் பிடித்து
வாழ்பவன் புத்திசாலி

4. பாவங்களும் செருப்பும்
ஒரே மாதிரி தான்
கோவிலுக்கு போகும் போது
கழற்றி வைக்கிறோம்
வெளியே வரும்போது
மீண்டும் மாட்டிக்
கொள்கிறோம்

5. திருப்பி போட்டால்தான்
தோசை வேகும் மூடி
வைத்தால் தான்
இட்லி வேகும் கம்முனு
இருந்தால்தான் இரண்டும்
கிடைக்கும்

6. கோபத்தில் ஏழையாக
இரு அன்பில் பணக்காரனாக
இரு

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி


GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும் சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய் ₹1.80 லட்சம்
800 SQFT
FREE FREE!!!
10 கிராம் GOLD COIN சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118


WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF (Male & Female)
MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD (Male & Female)
ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!


குன்னத்தோழும்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெனிமக்கு வுரன்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379


ADVERTISE
WITH US
7789941009


WANTED
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
Salary: ₹10,000 – ₹15,000
Attractive Incentives
Flexible Work From Home Option
Freshers & Experienced Both Can Apply
Contact Now:
9566072935


WANTED
ஆட்கள் தேவை
சமையல்
வீட்டுவேலை
குழந்தை
நோயாளி
தங்கி
தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்
தொடர்புக்கு 8148215778 8248610592
A trustworthy help service for Chennai families


Manjal Mart
SOMETHING FOR EVERY FAMILY
எந்தவித கலப்படமும் இல்லாத தரமான மஞ்சள், குங்குமம், விபூதி, சந்தனம், ஜவ்வாது, விற்பனைக்கு உள்ளது
www.manjalmart.com


ATTENTION
ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE
தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.


SHRI RAGHAVENDRA SCAN CENTRE
We Are HIRING
PRO
PUBLIC RELATION OFFICER
DIAGNOSTIC ULTRASOUND & COLOUR DOPPLER STUDIES
TIMING : 9AM-8PM
Attractive salary package
@TONDIARPET
+91 8189997221
+91 9094337745
ADDRESS:THAI APARTMENTS 618 T.H.ROAD (NEAR) TONDIARPET METRO STATION CHENNAI-81


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.
Real Choice Channel
Real Choice Channel
Real Choice Channel


THANIGAI
WANTED
ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
Flexible work
No Age Limit /No Investment
No Experience/No Qualification
No Risk / No Target
Simple work - just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy 90879 55111


திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
Location: (Nr Mylapore Jn)
Direction: N/ Face
Total Area: 2400 sft
Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner
www.vgpdevelopers.com


Special Invitation
To Retired Senior Housewives Businessmen Bankers CAs NRIs Age.30 to 70.Qualification. SSLC/Graduate
To Restart Your Second Innings With A Career Business Opportunity
Flexible Timing Unlimited Incentive.
No Target Work From Home Training Provided
For Successful Business.
Contact Mr.Irudaya Raj
Ph.9486634780

## WANTED
### MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED

**Managers:** Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000

**Telecaller** -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000

Call/wapp: 9438610756

## ADVERTISE WITH US
CONTACT US
9438610756

## WANTED: FEMALE ANCHORS
- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889

## ! WANTED !
### Muslim Lady Accounts Assistant
**Qualification:** B.Com / Tally Knowledge Required
**Company:** Perfume Manufacturing Company
**Location:** Chrompet



Contact: 99401 46318

உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
## D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்

- கைரேகை ஜோதிடம் (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
- முகக் குறிப்பு
- கண் பார்வை கணிப்பு (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
- வீடு மனை வாங்க விற்க அணுகவும்
- நல்ல நேரங்கள் கணிப்பு
- ராகு காலங்கள் பற்றிய தெளிவு

இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962

**கவனத்தில் கொள்க:**
- குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
- இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
- எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.

## Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

## keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
### INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology – Freshers

**Internship:**
- Clinical Training
- Counseling Practice
- Case Work

**Jobs:**
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

## WANTED
## JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

## ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact
9790979539

## WANTED
### FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp 94386 10756

## WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
- வானகரம் பைபாஸ் ரோடு
- முகப்பேர்
- அம்பத்தூர்
- பட்ரவாக்கம்
- பெரம்பூர்
- மாதவரம்
- திருமுல்லைவாயல்

Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW

## SEVEN STARS LOGISTICS PVT.LTD.
We Build Perfection
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

## just499®
### MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

## Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

## CAR WASH
SADHANA DEVI.K
### SUPREME
Car Wash & Detailing
- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

## WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588

## அருள்தரும் தெய்வம்
தமிழ் மாதமிருமுறை இதழ்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com

## WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872


முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


DIGITAL MARKETING SOLUTIONS
Branding
Website/App
eCommerce
Content Marketing
Graphic/ UI-UX
Video
SEO
Social Media
Online Sales
Viral
DIGITAL MARKETING
EMAIL MARKETING
SEO
smartpromoters.com


THE BEST CENTRE OF
CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


ஸர்வேஜநா சுகிநோபவந்து
அஜந்தா
பாக்கு
சம்பிரதாய தாம்பூல பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
RAVIKUMAR AND COMPANY
சம்பிரதாய
தாம்பூல பாக்கு!
பூஜைக்கு
உகந்த பாக்கு
21, North Mada Street, Viilivakkam, Chennai - 600 049 PH: 044 26171341 | emalir ajanthasupari@hotmail.com


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


PALANIVEL
9677174691
9176232026
PR
TRANSPORT
NO.1-B, parivallai street, Murugappa nagar,
Manali high road, Ernavoor,Chennai-57


Sri ManjalMart
YOUR DESIRE WE DELIVER
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com
TATA SALT


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com


உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com


வாரம் தோறும்
பல்சுவை செய்திகளை
தரும் தரமான
வார இதழ்
பேப்பர்பாய்
www.Paperboy.com



# பல்சுவை களஞ்சியம்




# இன்சுலின் செடி என்பதன் தமிழ் பெயர் என்ன.?

பெரும்பாலானவர்கள் இன்சுலின் செடியின் தமிழ் பெயர் என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். என்றால் இது சர்க்கரை நோய்க்கு ஒரு சிறந்த மருந்தாகும். சர்க்கரை நோய் உள்ளவர்கள் இதன் இலையை உட்கொள்வதால் சர்க்கரை அளவு குறையும். ஓகே வாருங்கள் இந்த செடி பற்றி தெரிந்து கொள்வோம்..

இன்சுலின் செடி (Insulin Plant) செடி என்பதை இந்தியாவில் காஸ்டஸ் பிக்டஸ் என்று அழைப்பார்கள். அதாவது, காஸ்டஸ் பிக்டஸ் என்பது இன்சுலின் செடியின் தாவரவியல் பெயர் ஆகும். இதனை தான் தமிழ் பெயர் என்றும் கூறுகிறார்கள். ஆனால், இன்சுலின் செடி என்பதற்கு துல்லிமான தமிழ் பெயர் எதுவும் இல்லை. அனைத்து இடங்களிலும் இன்சுலின் செடி அல்லது காஸ்டஸ் பிக்டஸ் என்றுமே அறியப்படுகிறது. பெரும்பாலும் இன்சுலின் செடி என்பதே இதன் தமிழ் என கூறுகிறார்கள்.



இந்த செடி மலை காடுகளிலும் நீர் நிலை உள்ள பகுதிகளிலும் அதிகமாக வளர கூடியது. அதிகபட்சம் 10 அடி உயரத்திற்கு மேல் வளரக்கூடியது. இதன் நன்மைகளை பற்றி சொல்லிக்கொண்டே போகலாம். அந்த அளவிற்கு இது மருத்துவ குணம் மிக்க ஒன்றாகும். இன்சுலின் செடியை வீட்டிலும் வளர்க்கலாம்.

சர்க்கரை நோயாளிகள் தினமும் இந்த இன்சுலின் செடியின் 2 இலைகளை பறித்து பச்சையாக காலையில் சாப்பிட்டு வருவதன் மூலம் அவர்கள் உடம்பில் உள்ள இரத்தத்தின் சர்க்கரை அளவு குறையும். சர்க்கரை நோயாளிகளுக்கு இதை விட மாற்று மருந்து ஏதும் இல்லை என்று ஐரோப்பிய, அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

இன்சுலின் செடியின் இலையில் உள்ள சாறு ஆனது இரத்தத்தில் கலந்துள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்துவதோடு இனிப்பு சாப்பிட வேண்டும் என்ற எண்ணத்தையும் குறைக்கிறது. எனவே, சர்க்கரை நோயாளிகள் எந்தவித பயமுமின்றி இந்த இன்சுலின் செடியின் இலையை எடுத்துக்கொள்ளலாம்.

# மீம்ஸ்









## விடுகதை



| | |
|---|---|
| நான் பார்த்தால் அவன் பார்ப்பான், நான் சிரித்தால் அவன் சிரிப்பான் அவன் யார்? | முகம் பார்க்கும் கண்ணாடி |
| பேச்சுக் கேட்குது பேசுபவர் தெரியவில்லை. அது என்ன? | வானொலிப் பெட்டி |
| மரத்தின் மேலே தொங்குது மலைப் பாம்பல்ல. அது என்ன? | விழுது |
| எத்தனை தரம் சுற்றினாலும் தலை சுற்றது. அவன் யார்? | மின்விசிறி |
| கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும்தான்? | வெங்காயம் |
| தனித்து உண்ணமுடியாது என்றாலும் இது சேர்த்தால்தான் உணவுக்கு சுவை. அது என்ன? | உப்பு |

# மகாலட்சுமி வாசம் செய்யும் மருதாணி

எமதர்மனின் மனைவியின் பெயர் “சாமளாதேவி”. சியாமளாதேவி எமதர்மனிடம் ஏற்பட்ட சண்டையின் காரணமாக பூலோகத்தில் மருதவாசிணி இருந்த காட்டிற்கு வந்தார். மிகவும் சோகமாக அமர்ந்திருந்த சியாமளாதேவியைப் பார்த்த மருதவாசிணி அவருக்கு ஆறுதல் கூறி தன்னுடைய குடிலில் தங்க வைத்துக்கொண்டு அவரை பார்த்துக்கொண்டாள்.

தமக்கு என்ன வரம் வேண்டும் என்பதைக் கேட்டான் எமதர்மன். அதற்கு அந்த மருதாணி செடி தன்னை கையில் வைப்பவர்களுக்கு மரணமே ஏற்படக்கூடாது என்ற வரத்தைக்கேட்டது.

அதற்கு எமதர்மன் பூமியில் பிறக்கும் அனைவரும் ஒருநாள் மரணிப்பதுதான் தர்மம் என்பதை கூறினார். வேறு ஏதேனும் வரம் வேண்டுமா கேள் என்றார்.

மருதாணி செடியோ தன்னை வைத்திருப்பவர்களுக்கு “ஆறு நாட்கள்” மரணம் ஏற்படக்கூடாது என்ற வரத்தை கேட்டது.



எமதர்மனும் மருதாணி செடிக்கு அந்த வரத்தை அளித்தார்.

இதையும் படியுங்கள்:
பாவ புண்ணியக் கணக்கும் ’சிபில் ஸ்கோரும்’: விதியை வெல்லும் நல்வினைகள்!

எமதர்மன் மருதாணி செடியிடம் அடுத்த ஜென்மத்தில் உன்னிடம் மகாலட்சுமி வாசம் செய்வாள் என்ற வரத்தையும் அளித்தார்.

இதனால்தான் நம் முன்னோர்கள் விழாக்காலங்களிலும், விசேஷ நாட்களிலும், திருமணம் வீடுகளிலும், மருதாணியை ஒரு நாளுக்கு முன்பே வைத்துக்கொள்வர். மருதாணி அழகு பொருளாகப் பயன்படுத்துவது மட்டுமல்லாமல் உடல் சூட்டைக் குறைப்பதற்கும், சரும நோயை குணப்படுத்துதல், முடி வளர்ச்சிக்கும் உதவுகிறது.

மேலும் மருதாணி வைப்பது பெண்களுக்கு லட்சுமி கடாட்சத்தையும், அழகு மற்றும் சௌந்தர்யத்தையும் தரக்கூடியதாக இருக்கும். செயற்கையாக கிடைக்கும் மருதாணியை போன்றவற்றை பயன்படுத்துவது பல பக்கவிளைவுகளை ஏற்படுத்தும். அதனைக் காட்டிலும் இயற்கையாகவே கிடைக்கும் மருதாணி அரைத்து கைகளில் வைப்பது ஆரோக்கியமானதாகவும் உடல் வெப்பத்தைக் குறைக்கவும் உதவுகிறது.



# ஜோக்ஸ்

இறந்த பிறகு ஒருவன் சொர்க்க வாசலுக்கு செல்கிறான். அவன் போகும் வழியெல்லாம் கடிகாரங்கள் அதிகம் இருக்கிறது. வாசல் கதவை நெருங்கியதும் அங்கிருந்த தூதரை பார்த்து, எனக்கு ஒரு சந்தேகம் கேட்கலாமா என்றான்.

தூதர்: கேளுங்கள்..

ஆவி: அது.. நான் வரும் வழியெல்லாம் கடிகாரங்கள் இருந்ததை பார்த்தேன். ஏன்?

தூதர்: மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் இங்கு ஒரு கடிகாரம் இருக்கும். அவர்கள் செய்யும் தவறுகளை பொறுத்து நிமிட முள் நகரும்.

ஆவி: அப்படியா.. அப்போ என்னோட கடிகாரம் எங்கே இருக்கிறது..

தூதர்: அது சீலிங் ஃபேன் ஆக மாட்டியுள்ளோம்.

ஆவி: !!!

------------------------



ஒரு பேருந்தில் பயணித்த மிகவும் அசிங்கமான 10 பேர் விபத்தில் இறந்து போகிறார்கள். அவர்கள் இறந்ததும் நேராக தூதரிடம் அழைத்து செல்லப்படுகிறார்கள்.

அங்கு அவர் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வரம் தருகிறேன் என்ன வேண்டுமென்றாலும் கேளுங்கள்.

முதல் ஆவி: நான் மிகவும் அழகாக மாற வேண்டும்.

தூதர்: அப்படியே நடக்கட்டும்.

2வது ஆவி: எனக்கும் அவரை போலவே அழகாக ஆக வேண்டும்.

தூதர்: அப்படியே நடக்கட்டும்.

அதை தொடர்ந்து வந்த பலரும் அதே போல அழகாக வேண்டும் என கேட்க, தூதரும் வரத்தை கொடுத்தார்.

கடைசி ஆள் இவர்களை பார்த்து பயங்கரமாக சிரித்தான். அதை பார்த்த தூதரோ இவன் கண்டிப்பாக அவன் வரத்தை பயன்படுத்திக்கொள்வான் என எண்ணினார். அவனிடம் உன் வரத்தை கேள் என்று சொன்னார்.

கடைசி ஆவி: இப்போ அழகாக மாறின எல்லோரும் பழைய மாதிரி அசிங்கமாக மாறனும்.

தூதர்: !!!




## தாத்தாவின் நினைவு



பிரகாஷ் ஐந்தாம் வகுப்பு படிக்கும் சிறுவன்,அவனது வீட்டில் அவனுடைய தாய் தந்தை,தாத்தா ஆகியோர் இருக்கின்றனர். அப்பாவும் அம்மாவும் வங்கியில் வேலை பார்க்கின்றனர்.தாத்தாவும் தாசில்தாராக வேலைபார்த்து ஓய்வு பெற்று பல வருடங்கள் ஆகிவிட்டன.

பிரகாஷ்க்கு தாத்தாவை ரொம்ப பிடிக்கும்.அவர் தான் சிறுவயதிலிருந்து அவனை வளர்த்தவர். அவர் சொல்லும் கதைகளை ஆர்வமுடன் கேட்பான்.பெரியவர்களிடத்தில் மிகவும்மரியாதையாக இருப்பான்.

அவனது அப்பாஅம்மா இருவரும் சேர்ந்து அவனது பள்ளி அருகே ஒரு அபார்ட்மென்ட் வாங்கியுள்ளனர்.அதில்நான்கு அறைகள் உள்ளன.ஒன்று அவனது அப்பா அம்மவுக்கு,ஒன்று அவனுக்கு,ஒன்று தாத்தாவுக்கு. வீட்டின் கிருகப்பிரவேசம் முடிந்து ஒருநாள் எல்லோரும் அந்த வீட்டிற்கு குடிபோனார்கள்

தாத்தாவிற்கு வயதாகிவிட்டதால் நடப்பதற்கு சிரமபட்டார். ஒரு நாள் அவர் தலையில் எண்ணெய் வைத்திருந்தார்.அவர் கையெல்லாம் எண்ணைய்.உடம்பு தள்ளாடியதால் கீழே விழாமல் இருக்க ஹாலில் உள்ள சுவற்றினை பிடித்துக்கொண்டு வந்தார்..

சுவற்றில் வரிசையாக அவரின் கைகளின் தடயங்கள் இருந்தன.அதைபார்த்த பிரகாஷின்அப்பா தன் தந்தையை கடிந்து கொண்டார்.

தாத்தாவுக்கு பிரகாஷின் அப்பா ஒரு ஊன்றுகோல் வாங்கிக்கொடுத்து இனிமேல் நீங்கள் சுவரைப் பிடிக்காமல் இந்த ஊன்றுகோலின் உதவியோடு நடக்கவேண்டும் என்றார். தாத்தாவும் அதன்படியே நடந்துகொண்டார்.

ஒருநாள் தாத்தாவுக்கு ஊன்றுகோல் வழுக்கி கீழே விழுந்து இடுப்பில் பலத்தக் காயம் ஏற்பட்டது.அறுவை சிகிச்சை செய்தும் பயனில்லாமல் இறந்து போனார்.பிரகாஷுக்கு ரொம்ப வருத்தம். தனக்கு கதைகள் சொல்ல யாருமில்லை என்று

தாத்தாவின் காரியங்கள் முடிந்த பின் பிரகாஷின் தந்தை அந்த வீட்டுக்கு பெயிண்ட் அடிக்கலாம் என்று ஒரு பெயின்டெரை வரவழைத்தார். அவரிடம் பிரகாஷ் ' இந்த ஹாலில் உள்ள என்னுடைய தாத்தாவின் கைவிரல் அடையாளங்களை எடுக்கக்கூடாது என்றான்,மேலும் இதைப்பார்த்தால் எனக்கு என்னுடைய தாத்தா என்னுடனே இருக்கிறமாதிரி தோன்றுகிறது என்றான்.பெயின்டரும் அவனுடைய உணர்வுகளுக்கு மதிப்புக்கொடுத்து தாத்தாவின் எண்ணெய் விரல்களுக்கு வண்ணம் பூசி அழகுபடுத்தினார்.அதைப்பார்த்த எல்லோரும் நன்றாக இருக்கிறது என்று பாராட்டினர்..

பிரகாஷ் தனது பள்ளியில் நடந்த ஓவியப் போட்டியில் "சுவற்றில் தாத்தாவின் விரல்கள்" என்ற தலைப்பில் ஒரு ஓவியம் வரைய அவனுக்கு முதல் பரிசு கிடைத்தது.

பிரகாஷ் அப்பாவிடம் ஓவியத்தைக் காண்பித்து " அப்பா நாம் தாத்தாவை சுவற்றைப் பிடித்துக்கொண்டு நடக்க அனுமதித்தால் கீழே விழுந்திருக்கமாட்டார்" இப்பவும் நம்முடன் இருந்திருப்பார் அல்லவா என்று கேட்டான்.

அப்பா மிகவும் வருத்தப்பட்டு தனது செயலுக்கு வருந்தினார்.

இதிலிருந்து நாம் உணர்வது சிறுவர்களே " வீட்டிலுள்ள பெரியோர்களிடம் நாம் பாசமாகவும் மரியாதையோடும் நடந்துகொள்ளவேண்டும் "என்பதே.

## நியாய தீர்ப்பு



திண்டுக்கல் என்ற ஊரில் மாரியப்பனும் அவனது தந்தையும் வாழ்ந்து வந்தனர். மாரியப்பன் தன் வீட்டில் உள்ள தோட்டத்தில் விளையும் காய்கறிகளையும் பழங்களையும் விற்று பிழைத்துவந்தான்.

மாரியப்பன் தந்தைக்கு வயதாகிவிட்டதால் அவரால் அவனுக்கு ஒன்றும் உதவி செய்ய முடியவில்லை.அவர் தான் சிறுக சிறுக சேர்த்துவைத்திருந்த ரூபாய் ஒரு லட்சத்தை அந்த ஊரில் அவரது நண்பரும் கணக்கு பிள்ளையுமான தாமோதரனிட ம்கொடுத்து கூடவே ஒரு கடிதமும் கொடுத்தார்.அந்த கடிதத்தில், 'நீ விரும்பியதை என் மகன் அவனுடைய தொழிலுக்கு தேவை ஏற்படும்போது கொடு'என்று எழுதியிருந்தது.இந்த லெட்டரின் ஒரு நகலை மகனிடமும் கொடுத்திருந்தார்..

சில மாதங்களில் தந்தை இறந்துவிட மாரியப்பன் கணக்குபிள்ளையான தாமோதரனிடம் அப்பா கொடுத்த பணத்தை தன்னுடைய தோட்டத்தை சீரமைக்கவேண்டும் என்று கேட்டான்.அவர் அவனிட ம்ரூபாய் 25000/- மட்டுமே கொடுத்தார். மாரியப்பன் இதற்கு ஒத்துக்கொள்ளவில்லை.இது நியாயமாக இல்லாததால் மாரியப்பன் இந்த வழக்கை தனக்கு தெரிந்த அந்த ஊர் நீதிபதியிடம் எடுத்து சென்றான்.

நீதிபதி தாமோதரனிடம் நீ மாரியப்பனுக்கு எவ்வளவு கொடுக்க விரும்புகிறாய் என்று கேட்டார்.அவர் ரூபாய் 25000/- என்று கூறினார்.தந்தை கொடுத்துள்ள லெட்டரை பார்த்துவிட்டு நீதிபதி தாமோதரனிட நீ எவ்வளவு எடுத்துக்கொள்ள விரும்புகிறாய் என்று கேட்டார்.அதற்கு தாமோதரன் ரூபாய் 75000/- என்றார்.

தந்தை கொடுத்த லெட்டரில் ' நீ விரும்பியதை கொடு'என்று எழுதியிருந்ததால்,அதன் படி நீ எடுத்துக்கொள்ள விரும்பியதுரூபாய் 75000/-அதுவே நீ விரும்பியத்தொகையாகும் ஆகவே ரூபாய் 75000/-ஐ மாரியப்பனிடம் கொடுத்துவிட்டு நீ ரூபாய் 25000/-ஐ எடுத்துக்கொள் என்று கூறி வழக்கை முடித்தார்..

## மன்னிப்பு

ப்ரணவ் காலை சீக்கிரம் எழுந்து சிறுசேரியில் உள்ள அலுவலகத்திற்கு டிபன் சாப்பிட்டுவிட்டு கிளம்பலாம் என்று டைனிங் டேபிளில் அமர்ந்தான்.அவனது ,மனைவி வனஜாவும் அலுவலகத்திற்கு கிளம்ப வேண்டியிருந்ததால் வேலை செய்யும் விமலாவை கூப்பிட்டு செய்த டிப்னை டேபிளில் வைக்கச்சொன்னாள்.. விமலா கொண்டுவந்த கண்ணாடி பத்திரத்தை கைதவறி கீழே போட்டுவிட்டாள்.

வனஜாவும் கோபத்தில் நாங்கள் அலுவலகத்திற்கு கிளம்பும்போது இப்படி அபசகுனமாக உடைத்துவிட்டாயே. செய்யறவேலையில் கவனம் வேண்டாம்.இப்ப ' நீ உடைத்த கண்ணாடி பாத்திரத்துக்கு இந்த மாதம் ஐம்பது ரூபாய் பிடித்துக்கொள்ளப்போகிறேன்' என்று கோபமாக கத்தினாள்.

கை தவறிப்போச்சும்மா... மன்னிச்சிடுங்க' என்றபடியே அவள் காலில் விழுந்தாள். விமலா.சரி விடு வனஜா .இதைப்போய் பெரிசு பண்ணாதே.பாவம்... தெரியாமத்தானே நடந்துபோச்சு. மன்னித்துவிடு,மனுஷனுக்கு மன்னிக்கும் குணம் வேண்டும்.. அவளுக்கு சம்பளத்திலிருந்து ஐம்பது ரூபாய் பிடிக்காதே. என்று சொல்லிவிட்டு அலுவலகம் கிளம்பினான்..

வனஜாவும் அவன் சொல்வதைக்கேட்டு விமலாவிடம் இனிமேல் கவனமாக இரு என்று சொல்லிவிட்டு கிளம்பினாள்.

முந்தின நாள் அலுவலகத்தில் இவன் செய்த ப்ராஜெக்ட் ஒன்றில் ஒரு சிறு தவறு நிகழ்ந்துவிட ..அதனால் அலுவலகத்தில் பல ஊழியர்களின் சில மணிநேர உழைப்பு வீணானது.மேலதிகாரி என்ன சொல்வாரோ? என பயந்தபடி அவரைப்பார்த்து' சாரி சர்' என்றான்.

உடன் அவர் ' இட் ஈஸ் ஆல்ரைட்...பிரணவ்... தெரிஞ்சா தப்பு பண்ணின? தெரியாமத்தானே நடந்துபோச்சு.இதைக் கூட மன்னிக்கலைன்னா அப்புறம் எது மனுஷத்தனம்..?



என்று சர்வ சாதாரணமாக சொல்லிச்சென்றது நினைவிற்கு வந்தது.சாயங்காலம் வீட்டிற்கு வந்ததும் வனஜாவிடம் நடந்ததைக்கூறினான்.அவளும் இனிமேல் நான் விமலாவிடம் கடுமையாக நடந்து கொள்ளாமல் இருக்கிறேன் என்று கூறினாள்.

## புத்திசாலி தீர்ப்பு



ஒரு செல்வந்தரிடம் 17 குதிரைகள் இருந்தன. அவருக்கு மூன்று மகன்கள் இருந்தனர்.அவர் நோய்வாய் பட்டதால் கீழ்கண்டவாறு உயில் எழுதி வைத்தார்.

இருக்கும் 17 குதிரைகளில் பாதி பெரியவனுக்கும்,மீதியில் 2/3 பங்கு இரண்டாம்மகனுக்கும்.இரண்டாம் மகனுக்கு கொடுத்த பின் மீதியில் 2/3 பங்கு மூன்றாம் மகனுக்கும் எழுதி வைத்திருந்தார்.

மூன்று மகன்களுக்கும் ஒண்ணுமே புரியவில்லை.எப்படி குதிரைகளை பிரித்துக்கொள்வது என்று தெரியவில்லை..

உடனே அவர்கள் அந்த ஊர் நாட்டாண்மையிடம் சென்று அவருடைய உதவியை நாடினர்.நாட்டாண்மை புத்திசாலி. எல்லோருடைய சிக்கல்களையும் தீர்த்து வைப்பார்.

செல்வந்தரின் உயிலை பார்த்துவிட்டு நாட்டாண்மை கீழ்கண்டவாறு கூறினார்

முதலில் தன்னிடம் இருக்கும் ஒரு குதிரையை கொண்டு வந்து நிறுத்தினார். மொத்தம் 17+1= 18 ஆயிற்று.முதல் மகனுக்கு 18 குதிரைகளில் பாதி அதாவது 9 குதிரைகளை கொடுத்துவிட்டார்.

இண்டாம் மகனுக்கு மீதி 9 ல் 2/3 பங்கு அதாவது 6 குதிரைகள் அவனுக்கு கொடுப்பது என்று முடிவாயிற்று.

மூன்றாம் மகனுக்கு முதல் இரண்டு பேருக்கு கொடுத்த மீதியில் 2/3 பங்கு.அதாவது மீதியுள்ள 3 ல் 2/3 பங்கு, 2 குதிரைகளை அவனுக்கு கொடுப்பது என முடிவாகியது.

எஞ்சிய ஒரு குதிரை செல்வந்தருடையது. ஆகையால் அவர் அந்த குதிரையை எடுத்துக்கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றார்.

## சாலையில்...



சாலையில் கவனம்
வேண்டும்
சரியாய்ச் செல்லவும்
வேண்டும்

அவசரம் என்றே
ஓடக்கூடாது
ஆமை போலவும்
நடக்கக் கூடாது..


சீரான வேகம் போதும்
சீருடை போல அழகு
ஆட்டோ வேகம் போனால்
சீராய் ஓட்டுங்க மாமா
துணிவாய்ச் சொல்ல
வேண்டும்..

நின்று பார்த்து கடக்கணும்
நன்றாய்ப் படித்து
உயரணும்..

எதிலும் கவனம்
எப்போதும் நிதானம்
எல்லாம் ஒழுங்கே
வெற்றியின் சூத்திரம்..

**ஹரணி**
தஞ்சாவூர்-

## கோடை கொடுமை



அண்ணா அண்ணா
பாருங்க
கோடை கொடுமை
தாங்கலே..

கொடுமை இல்லை தம்பி
கோடையின் தன்மை
அப்படி..

ரொம்ப வேர்க்குது அண்ணா
தாகமும் ரொம்ப எடுக்குது...

தண்ணீர் நிறைய குடிக்கணும்
தாகம் அடங்கக்
குடிக்கணும்..

தண்ணீர் குடிச்சா போதுமா
தண்ணீர் குடிச்சா
போதுமே..
அங்குமிங்கும் அலையாம
புதர்ல இருந்தா போதுமே..

காலநிலையைக்
குறை சொல்லாம
கவனமா இருந்தா போதுமே..

கோடை என்ன வெம்மை என்ன?
குளிர் என்ன நடுக்கம் என்ன?

எல்லா வேணும் தம்பியே
எப்பவும் வேணும் தம்பியே..

**ஹரணி**
தஞ்சாவூர்-

## பொது அறிவுப் பூங்கா

1) "மனித உரிமைகள் தினம்" டிசம்பர் 10 ஆம்நாள் அனுசரிக்கப் படுகிறது.

(2).ஷேக்ஸ்பியரின் நாடகங்களை வங்க மொழியில் மொழிபெயர்த்தவர் "ரவீந்திர நாத் தாகூர்."

(3). (T.V.S) நிறுவனர், சுந்தரம் ஐயங்கார் தமிழ்நாட்டில் பயணிகள் பேருந்தை 1911ல் தொடங்கி வைத்தார்.

(4).உலகின் மிகப் பெரிய "சுதந்திரதேவி சிலை" அமெரிக்காவில் "பெட்லோ" தீவில் அமைந்திருக்கிறது.

(5). எகிப்து நாட்டின் தேசியப் பூ தாமரை,

(6).உலகிலேயே மிகப் பெரிய தீவு கிரின்லாந்து ஆகும்.

(7). உலகம் முழுவதும், இரவும் பகலும் சமமாக உள்ள இரண்டு நாட்கள் மார்ச் 21 செப்டம்பர் 21.




(8). ரஷ்யாவின் இரும்பு மனிதர் என்று அழைக்கப் படுபவர் ஸ்டாலின்.

(9)."வெற்றிவேற்கை" என்னும் நீதி நூலை எழுதியவர் "அதிவீரராம பாண்டியர்" ஆவார்.

(10) "நீதி நெறி விளக்க" நூலின் காப்பு வெண்பாவில் வரும் "நீரில் எழுத்தாகும் யாக்கை" என்ற வரிகள் மகாத்மா காந்திக்குப் பிடித்தமான தமிழ்ப் பாடல் வரியாகும்.

குடந்தை
**பரிபூரணன்.**




காஞ்சிப்புரம் ஸ்ரீ வரதராஜ பெருமாள் புரப்பாடு சேவை நேற்று மாலை (14.04.2026) அழைப்பில் பரபவ நாம சம்வத்சர வருடப்பிறப்பு.


ஸ்ரீ அஹோபிலவல்லி நயகா சமே தஸ்ரீ பாடலாதிரி நரசிம்ம பெருமாள் திருக்கோயில் சித்திரை மாதம் ஸ்வாமி எம்பெருமானர் (ராமானுஜர்) திரு அவதார உற்சவம் முதல் திருநாள் திருமஞ்சனம் மற்றும் புறப்பாடு சாற்றுமுறை


ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் நம்பெருமாள் பராபவ தமிழ் வருட பிறப்பு ஆஸ்தான மண்டபம் சேவையில் சிறப்பு படங்கள்.

## காட்பாடி கரிகிரி பகுதியில் அதிமுக வேட்பாளர் ராமு வாக்கு சேகரிப்பு!



**வேலூர்,ஏப்.15:** தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் அதிமுக காட்பாடி தொகுதி வேட்பாளர் ராமு தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தார். இதில் காட்பாடி அடுத்த கரிகிரி ஊராட்சியில் வீதி வீதியாக பிரச்சாரம் மேற்கொண்டார் ராமு. அங்குள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அத்துடன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் வேட்பாளருக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

ரவுசு மணி

காயம் படாமல்
மூங்கில்
புல்லாங்குழல்
ஆவதில்லை
அதுபோல்
வலியில்லாமல்
வாழ்க்கை
இல்லை



ராஜகோபாலன்.J
பெங்களூரு

## பராபவ வருட சித்திரை பெருவிழா நம் வாசவி அம்மனுக்கு கிளி பந்தல் அலங்காரம்

**கடலூர் , ஏப்.15:** கடலூர் மாவட்டம் புவனகிரி புவனகிரி கடைவீதியில் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அமைந்திருக்கும் நம் வாசவி அம்மனுக்கு பராபவ வருடத்தை முன்னிட்டு நம் வாசவி அம்மனுக்கு சித்திரை பெருவிழா விஷீ பந்தல் அலங்காரங்கள், சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களால் அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

உபயதாரர் (ஒடிவாலு குரூப் ), ஆர்ய



வைஸ்ய மகாசபை புவனகிரி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வேலூர் சிஎம்சி மருத்துவமனை இயக்குனராக பொறுப்பேற்றுள்ள பிஜு ஜார்ஜிக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்து!

**வேலூர், ஏப். 15:** தமிழ் புத்தாண்டு அன்று 14.4.26 செவ்வாய்க்கிழமை வேலூர் சி.எம்.சி.,மருத்துவமனையின் இயக்குநராக பொறுப்பேற்றுள்ள டாக்டர்.பிஜுஜார்ஜை டாக்டர் ஐடாஸ்கடர் அன்புக்கரங்கள் அறக்கட்டளை சார்பில் சந்தித்து சால்வை மற்றும் மாலை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



இந்த நிகழ்ச்சியில் அறக்கட்டளை செயலாளர் ஐடா ஜி.தவசீலன், பொருளாளர் ஆர்.தேவபிரகாசம், துணைத் தலைவர் பி.ரவிக்குமார், இணைச் செயலாளர் பேராசிரியர் பி.சி.இரத்தினம், செயற்குழு உறுப்பினர் எஸ்.மகிமைரூபஸ், சமூக ஆர்வலர் பாடிபில்டர் ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த மரியாதையை ஏற்றுக் கொண்டு சி எம் சி இயக்குநர் டாக்டர் பிஜுஜார்ஜ் அனைவருக்கும் தனது நன்றியை தெரிவித்து கொண்டார். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிஎம்சி மருத்துவமனையின் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் துரை ஜாஸ்பர் செய்திருந்தார்.

## திருப்பத்தூர் அருகே தேர்தலில் 100% வாக்களிப்பை வலியுறுத்தி நடைபெற்ற மாபெரும் உலக சாதனை நிகழ்ச்சி

**சிவகங்கை,ஏப்.15:** சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே அரளிகோட்டை கிராமத்தில் செயல்பட்டு வரும் பி.அழ. கருத்தான் கோனார்- கருப்பாயி அம்மாள் கல்வி அறக்கட்டளை மற்றும் யோவா யோகா அகடாமி உலக சாதனை மற்றும் தற்காப்பு கலை இணைந்து வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் பொதுமக்கள் அனைவரும் 100%சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மாபெரும் உலக சாதனை நிகழ்ச்சி நடைபெற்றது.






முன்னதாக இவ்விழாவினை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் செல்வகுமார் துவங்கி வைத்தார். தொடர்ந்து இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற 228 மாணவ மாணவிகள் யோகா, அடிமுறை, சிலம்பம், வாழ்வீச்சு, போன்ற பல்வேறு தற்காப்புக் கலையை தொடர் படியாக 23 நிமிடங்கள் விடாமல் செய்து காட்டி அசத்தினர். விழாவில் பங்கேற்ற அனைத்து மாணவ மாணவிகளுக்கும் விழா குழு சார்பாக பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவ்விழாவை காண சுற்றுவட்டாரத்தில் இருந்து பிரதான பொதுமக்கள் பங்கேற்றனர்.

இவ்விழா ஏற்பாட்டினை டாக்டர் கோகுல கிருஷ்ணன் செய்திருந்தார். விழா ஒருங்கிணைப்பு பணிகளில் பாலா, முத்துப்பாண்டி,முத்துரமீனா ஆகியோர் ஈடுபட்டனர்.

## அம்பேத்கர் பிறந்தநாள் விழா



அம்பேத்கர் அவர்களின் 135 வது ஆண்டு பிறந்தநாள் உலகமெங்கும் நேற்று கொண்டாடப்பட்டது. இதன் ஒரு பகுதியாக வசூர், அத்திமூர் ரெண்டேரிப்பட்டு களம்பூர் ஆகிய நான்கு பகுதிகளில் டாக்டர் பி ஆர் அம்பேத்கார் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது இந்த நான்கு பகுதியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கலந்து கொண்டு பி ஆர் அம்பேத்கர் அவர்களின் புகழையும் அவர் பெற்ற கஷ்டங்களையும் துன்பங்களையும்துயரங்களையும் இனி யாரும் படக்கூடாது என்று அவருடைய திருவுருவ சிலையின் முன்பு சபதம் ஏற்றுக் கொண்டோம்.

## அம்பேத்கர் சிலைக்கு மாலை



சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள அம்பேத்கர் சிலைக்கு சீர்காழி நகர வர்த்தகர்கள் சங்க தலைவர் சுடர் எஸ். கல்யாணசுந்தரம் மற்றும் பொறுப்பாளர்கள் மாலை அனிவித்து மரியாதை செய்தார்கள்.

## ராஜகோபாலன் திருக்கோலம்.


மந்தைவெளி மாரி செட்டித்தெரு ஆலயம் ராஜகோபாலன் திருக்கோலம்.

## திருமஞ்சம்


ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி தேவஸ்தானம் பராபவ வருஷ பிறப்பு திருமஞ்சனம்


## "சமூக நீதி தலைவர்" அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மலர் தூவி மரியாதை



அண்ணல் டாக்டர். அம்பேத்கர் அவர்களின் 136 வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று 14.4.2026 சென்னை ராஜாஜி சாலையில் கலெக்டர் அலுவலகம் எதிரில் அமைந்துள்ள "சமூக நீதி தலைவர்"திருவுருவ சிலைக்கு அகில இந்திய சிறுபான்மை மக்கள் சமூகநீதி பேரவையின் தலைவர் வழக்கறிஞர் திரு. ஜெயம் இ புஷ்பராஜா அவர்கள் மரியாதை செலுத்தி மலர் தூவி வணங்கிய போது எடுத்த படம். பேரவை நிர்வாகிகள் மற்றும் திருச்சபை ஆயர். அருள்திரு.Dr.D.சங்கீததாஸ் அவர்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தி சிறப்புரை ஆற்றினார்கள், கலந்கொண்ட நிர்வாகிகள் மற்றும் பொது மக்களுக்கும் இனிப்புகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது

## ஸ்ரீதன்வந்திரி வைத்தியநாராயண பெருமாள் சித்திரை மாதம் தமிழ் வருடப்பிறப்பு சிறப்பு அலங்காரத்தில்

கடலூர் மாவட்டம் பண்ருட்டி ஆர்ய வைஸ்ய சமூக திரு நந்தவனத்தில் எழுந்தருளியிருக்கும் பகவான் ஸ்ரீ தன்வந்திரி வைத்தியநாராயண பெருமாள் தமிழ் வருட பிறப்பை முன்னிட்டு மலையப்பனாக சீனிவாச பெருமாள் தங்க கவசத்துடன், வண்ணமலர் மாலைகளால் அலங்காரத்துடன் அருள் பாலிக்கும் காட்சி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை






திருவண்ணாமலையில் டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135 பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவ சிலைக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.இதில் தமிழ்நாடு அரசு அனைத்துதுறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் எஸ்.பச்சையப்பன் மற்றும் வட்ட செயலாளர் தோழர் மா.மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.






திருப்புல்லாணி லஷ்மி ஹயக்ரீவர் ஆலய அலங்காரம்


## வேலூர் மாவட்ட ஆட்சியர் அம்பேத்கர் உருவப்படத்திற்கு மரியாதை!

**வேலூர்,ஏப்.15:** வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள அம்பேத்கரின் உருவ சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்துக்கு மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி மலர் தூவி மரியாதை செலுத்தினார். அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு இந்நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) குணசேகரன் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## வேலூர் இறைவன்காடு ஸ்ரீ வனதுர்கா அம்மனுக்கு புத்தாண்டு சிறப்பு அபிஷேக அலங்காரம்!

**வேலூர், ஏப். 15:** வேலூர் இறைவன்காடு ஸ்ரீவன துர்கா பீடத்தில் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு வன துர்கா அம்மனுக்கு அதிகாலை சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம் நடந்தது. இதையடுத்து வன துர்கா பிரசாந்த் சுவாமிகள் தீபாராதனை காண்பித்தார். பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று ஸ்ரீவன துர்கா அம்மனை தரிசனம் செய்தனர். இந்த சிறப்பு பூஜையில் கலந்து கொண்ட அனைவருக்கும் கோயில் நிர்வாகம் சார்பில் பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது.




ஸ்ரீபெரும்புதூர் ஸ்வாமி உடையவர் திருஅவதார உற்சவம் இரண்டாம் திருநாள் மாலை புறப்பாடு.


மாம்பலம் ஸ்ரீகோதண்ட ராமர் பராபவ வருட பிறப்பு திருமஞ்சனம் (14.04.2026) செவ்வாய் கிழமை மாலை நடைபெற்றது.


மதுரை ஸ்ரீ கூடல் அழகர் சன்னதி ஸ்வாமி ராமானுஜர் திருஅவதார உற்சவம் முதல் திருநாள் திவ்ய சேவை.

## திருவோணம் சுவாமி புறப்பாடு



தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாளுக்கு நேற்று (12.04.2026) திருவோணத்தை முன்னிட்டு காலை திருமஞ்சனம் கண்டருளால், மாலை சுவாமி பிரகார புறப்பாடு சிறப்பாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள் மற்றும் உபயதாரர்கள் செய்து இருந்தனர். செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்

## அம்பேத்கர் பிறந்த நாள் விழா



**வாடிப்பட்டி, ஏப்.15:** மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பஸ் நிலையத்தில் அம்பேத்கர் மக்கள் இயக்கம் சார்பாக அம்பேத்கர் பிறந்த நாள் விழா கொண்டாடப் பட்டது.இந்த விழாவிற்கு மாநில பொருளாளர் பிச்சை தலைமை தாங்கினார். பூர்வீக மக்கள் விடுத லைக் கட்சி தலைவர் செல்லக் கண்ணு கட்சி நிர்வாகிகள் சேகர் ராஜா, செல்வராஜ், சரவண குமார், மச்சராசன்,அழகர், சேவுக பெரு மாள் உட்பட பலர் கலந்து கொண் டனர்.

# சுற்றுலா: சிறிய பட்ஜெட்டில் மேகமலை கோடை சுற்றுலா செல்லலாம்!



சுற்றுலா செல்ல வேண்டும் என்றுபிளான்பண்ணினால்முதலில் மணி பர்ஸ் காலியாகிவிடுமே என்ற பயம் தான் நமக்கு வரும். ஏனென்றால் குடும்பத்துடன் சுற்றுலா செல்ல வேண்டும் என்றால் ஒரு குறிப்பிட்ட தொகையை நாம் பெரிய பட்ஜெட்டாக எடுத்து வைக்க வேண்டும்.

ஆனால் மேகமலை சென்றால் குளுகுளுவென இருக்கும் சூழ்நிலையில் உங்கள் பணமும் குறைவாகவே செலவாகும் கம்மி பட்ஜெட் சுற்றுலாத்தலமாகும். அதன் சிறப்புகளைப் பற்றி இப்பதிவில் பார்க்கலாம்.

மேகமலை தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும் ஒரு சிறிய பிரமிக்க வைக்கும் பகுதி.

தேனி மாவட்டம் சின்னமனூரிலிருந்து 45 கிலோ மீட்டர் மலைப்பாதை வழியாகச் சென்றால் மேகமலையை அடைந்து விடலாம். கடல் மட்டத்திலிருந்து சுமார் 1500 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது அழகான மேகமலை.

இங்கு தாவரங்கள், வனவிலங்குகள், நூற்றுக்கும் மேற்பட்ட பறவை இனங்கள் உள்ளன. காணும் திசையெல்லாம் பசுமையான காட்சிகள், நீர்வீழ்ச்சிகள், மலைகள், இதமான சூழல் என மேகமலை நம்மை கட்டி போடுகிறது.

ஊட்டி, கொடைக்கானலுக்கு மற்றாக கம்மி செலவில் மலை பகுதிக்கு டூர் போக விரும்புபவர்களுக்கு மேகமலை வரபிரசாதம் என சொல்லலாம்.

இயற்கையின் அழகை கண்டு களிக்கவும், அமைதியாக நேரத்தை கழிக்கவும் ஏற்ற இடம். இங்கு காப்பி, தேயிலை அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

தேயிலைத் தோட்டங்கள், பசுமையான மலைத்தொடர்களை எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

18 ஹேர்பின் வளைவுகள் வழியாகச் சென்றாலும், இருபுறமும் உள்ள தேயிலை மற்றும் ஏலக்காய் பண்ணைகள் வழியாகச் சென்றாலும், மேகமலைக்கு வாகனம் ஓட்டுவது சலிப்பை தராது.

தேனிக்கு வரும் சுற்றுலா பயணிகளின் முதல் தேர்வாக மேகமலை இருக்கும். அதிகமான வெயிலும் அதிகமான குளிரும் இல்லாமல் இதமான சூழல் எப்போதும் காணப்படும்.

புலிகள் சரணாலயத்துக்குட்பட்ட பகுதி என்பதால் இங்கே கட்டுப்பாடுகள் அதிகம் இருக்கும். காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டுமே மேகமலைக்கு செல்ல முடியும்.

மணலாறு அணை மேகமலை பேருந்து நிலையத்திலிருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இந்த அணையின் மூலம் தேனி மாவட்டத்தின் கம்பம் பள்ளத்தாக்குகள் மற்றும் குடியிருப்புகளை மேலிருந்து பார்க்க முடியும். மூடுபனி படர்ந்த மலை சிகரங்கள், பசுமையான பள்ளத்தாக்குகள, கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பரந்து கிடக்கும் வனப்பகுதி நல்ல அனுபவத்தை தரும்.

மேகமலைப் பேருந்து நிலையத்திலிருந்து 11 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது மேகமலை காட்சி முனை. அமைதியான சூழல் மற்றும் பசுமையான தாவரங்களால் சூழப்பட்ட இந்த இடம் பிரமிப்பை ஏற்படுத்தும்.

சமவெளிகள், ஏரிகள், பெரிய தேயிலை தோட்டங்கள் மற்றும் மூடுபனி மூடிய மலைகளின் காட்சிகளை அனுபவிக்க முடியும்.

மேகமலை வனவிலங்கு சரணாலயம் பாதுகாக்கப்பட்ட காப்பகமாகும். 63,000 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இந்த சரணாலயம் வனவிலங்கு பிரியர்களுக்கு சொர்க்கமாக உள்ளது.

இது கேரளாவின் பெரியார் புலிகள் சரணாலயத்திற்கு ஒரு பாதுகாப்பு மண்டலமாக செயல்படுகிறது.

இரவங்கலாறுஅணைமேகமலை பேருந்து நிலையத்திலிருந்து 18 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள நீர்த்தேக்கம். இங்கு ஆண்டு முழுவதும் தண்ணீர் தேங்கி இருக்கும்.

இந்த அணை அருகில் இரவங்கலாறு அருவி உள்ளது. இரவங்கலாறு பகுதியில் உள்ள ஏரியில் வன விலங்குகள் நீர் அருந்தி செல்லும் அழகை ரசிக்கலாம்.

இரவங்கலாறுஅணைமேகமலை பேருந்து நிலையத்திலிருந்து 18 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள நீர்த்தேக்கம். இங்கு ஆண்டு முழுவதும் தண்ணீர் தேங்கி இருக்கும். இந்த அணை அருகில் இரவங்கலாறு அருவி உள்ளது.

இரவங்கலாறு பகுதியில் உள்ள ஏரியில் வன விலங்குகள் நீர் அருந்தி செல்லும் அழகை ரசிக்கலாம்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### மத்திய அரசின் நிலக்கரி நிறுவனத்தில் காலிப் பணியிடங்கள்

மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்றான நார்த்தன் கோல்ஃபீல்டு நிறுவனத்தில் காலியாக உள்ள 557 பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதற்கு யாரெலாம் விண்ணப்பிக்கலாம் என்பது பற்றிய விவரங்கள் வருமாறு:

பணி நிறுவனம்: நார்த்தன் கோல்ஃபீல்டு நிறுவனம் (என்.சி.எல்) காலி பணியிடங்கள்: 557

பதவி: எச்.இ.எம்.எம். ஆபரேட்டர் (டிரெய்னி), பாராமெடிக்கல் ஸ்டாப் மற்றும் மேற்பார்வையாளர் (சிவில்) உள்ளிட்ட பல்வேறு பணியிடங்கள். கல்வி தகுதி: 10-ம் வகுப்பு, டி.ஜி.என்.எம்., டி.பார்ம், டிப்ளமோ.

வயது வரம்பு: 1-5-2026 அன்றைய தேதியின்படி 18 முதல் 30 வயதிற்கு உட்பட்டவர்கள். அரசு விதிமுறைகளின்படி மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டவர்களுக்கு 3 முதல் 15 ஆண்டுகள் வரை வயது தளர்வும் உண்டு.

தேர்வு முறை: கம்ப்யூட்டர் அடிப்படையிலான தேர்வு மற்றும் ஆவண சரிபார்ப்பு. விண்ணப்பிக்க கடைசி தேதி: 01-05-2026 இணையதள முகவரி: http://nclcil.in/data-listing/pages/recruitment

### இந்தியன் வங்கியில் வேலை: யாரெல்லாம் விண்ணப்பிக்கலாம்?

நாட்டின் முன்னணி பொதுத்துறை வங்கிகளில் ஒன்றாக இருக்கக் கூடிய இந்தியன் வங்கியில் காலியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதுபற்றிய விவரங்கள் வருமாறு:

பணியிடங்கள்: சிறப்பு அதிகாரி 350

கல்வித்தகுதி: பி இ/ பிடெக், எம்பிஏ,எம்சிஏ, எம்.எஸ்.சி,சிஏ/ ஐசிம் ஏ/சிஎப்ஏ ஆகிய படிப்புகள் முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்

சம்பளம்: அதிகபட்சமாக ரூ. 85,920/- முதல் ரூ.1,05,280/-

தேர்வு முறை: எழுத்து தேர்வு, நேர்முகத்தேர்வு

விண்ணப்ப கட்டணம்: ரூ.1,000, எஸ்சி/எஸ்டி பிரிவினருக்கு ரூ.175

அவகாசம் முடியும் நாள்: 28.04.2026

தேர்வு அறிவிப்பை படிக்க: https://indianbank.bank.in/wp-content/uploads/2026/04/Advertisment-Notice.pdf

## வாக்கு எண்ணும் மையத்தில் பாதுகாப்பு தடுப்புகள் அமைக்கும் பணி ஆய்வு

**திருநெல்வேலி, ஏப். 15:**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 வாக்குப்பதிவு ஏப்ரல் 23-ம் தேதி நடைபெறுவதையொட்டி, சட்டமன்ற பொதுத்தேர்தலில் எந்தவொரு வாக்காளர்களும் விடுபட்டு விடக்கூடாது என்பதற்காக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் 100 சதவீதம் வாக்களிப்பது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

18 வயது நிரம்பிய வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி திருநெல்வேலி மாவட்டத்தில் 5 சட்டமன்ற தொகுதிகளில் அமைக்கப்படவுள்ள வாக்குப்பதிவு மையங்களில் அடிப்படை வசதிகள், பாதுகாப்பு போன்றவை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் நேற்றையதினம் அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வி.கே.புரம் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி, அம்பாசமுத்திரம் ராணி மேல்நிலைப்பள்ளி, திருவள்ளுவர் கல்லூரி போன்ற இடங்களில் அமைக்கப்படவுள்ள வாக்குச்சாவடி மையத்தின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் சுகுமார் நேற்ற பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து, வாக்கு எண்ணும் மையத்தில் வாக்குப்பதிவு எந்திரங்கள் பாதுகாப்பு அறைகளில் வரிசை எண்கள் அமைத்து வாக்குப்பதிவு எந்திரங்கள் வரிசைப்படுத்தி வைப்பதற்கான பணிகள் மற்றும் வாக்கு எண்ணும் அறைகளில் வாக்குஎண்ணிக்கையின்போது முகவர்கள் வாக்கு எண்ணிக்கையை பார்வையிட ஏதுவாக பாதுகாப்பு தடுப்புகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் இரா.சுகுமார், பார்வையிட்டார்.

## குடும்ப சூழல்; மனவேதனையில் 2 பேர் தூக்குப்போட்டு தற்கொலை

**தூத்துக்குடி, ஏப்.15:**

தூத்துக்குடி மாவட்டம், முறப்பநாடு பாரதியார் தெருவைச் சேர்ந்த சுப்பரமணியன் மகன் சண்முகவேல் (வயது 54). இவரது உடன் பிறந்த 4 சகோதரர்களும் ஏற்கனவே மனநிலை பாதிப்பு காரணமாக அடுத்தடுத்து உயிரிழந்துள்ளனர். இதனால் தனது முதிய பெற்றோரை அரவணைத்து கவனித்துக் கொள்வதற்காக சண்முகவேல் திருமணம் செய்து கொள்ளாமல் அவர்களுடனேயே வசித்து வந்தார். தனி ஆளாக பெற்றோரைப் பராமரித்து வந்த நிலையில், நேற்று காலை சண்முகவேல் தனது வீட்டின் சமையலறையில் கயிற்றால் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்ட நிலையில் கிடந்துள்ளார். இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் அருகே உள்ள கொங்கராயகுறிச்சி சிவன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் சுடலை மகன் மாடசாமி(35). இவர் கடந்த சில காலமாக தனது குடும்பத்தைப் பிரிந்து, வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார். மாடசாமிக்கு மது அருந்தும் பழக்கம் இருந்ததாகவும், இதனால் அவர் அடிக்கடி மதுபோதையில் இருந்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று மாடசாமி தனது வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டார். இதுகுறித்து போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று உடலை கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் பாதுகாப்பு பணியில் 295 கம்பெனி துணை ராணுவப் படையினர்

**சென்னை, ஏப்.15:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 23-ம் தேதி நடைபெற உள்ளது. 3,579 ஆண்கள், 443 பெண்கள், மூன்றாம் பாலினத்தவர் ஒருவர் என மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 5.73 கோடி பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 75,064 ஆக உயர்ந்துள்ளது. இதில் பதற்றமான வாக்குச்சாவடிகள் 5,938 உள்ளன.



தேர்தல் பணியில் 3.40 லட்சம் அரசு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இவர்களில் இதுவரை தபால் வாக்கு செலுத்த 1.50 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர். அடுத்தடுத்த கட்டங்களில் நடைபெறும் பயிற்சியின் போது, தபால் வாக்களிக்க தகுதியானவர்களிடம் 12-டி படிவம் வழங்கப் பட்டு, அந்த பயிற்சி மையங்களிலேயே தபால் வாக்குகள் பதிவு செய்யப்படும். பின்னர், மூடி முத்திரையிட்ட உறையில் வைத்து திருச்சியில் உள்ள பொது மையத்துக்கு அனுப்பப்படும்.

தமிழகத்தில் 85 வயதுக்கு மேற்பட்ட 4 லட்சம் வாக்காளர்கள், 4.63 லட்சம் மாற்றுத் திறனாளிகள் உள்ளனர். இவர்களில் 1.20 லட்சம் முதியோர், 70 ஆயிரம் மாற்றுத் திறனாளிகள் என மொத்தம் 1.90 லட்சம் பேர் 12-டி படிவம் பெற்று, தபால் வாக்கு செலுத்த விருப்பம் தெரிவித்துள்ளனர். இவர்களில் 15 ஆயிரம் பேர் தபால் வாக்கு செலுத்தியுள்ளனர்.

தேர்தல் பாதுகாப்பு பணியில் 295 துணை ராணுவப் படை கம்பெனிகள் ஈடுபட உள்ளன. இதுவரை 115 கம்பெனிகள் வந்துள்ளன. மற்ற கம்பெனி வீரர்களும் தமிழகத்துக்கு வந்த வண்ணம் உள்ளனர். பாதுகாப்பு பணிகளில் 1.40 லட்சம் போலீஸார், ஊர்க்காவல் படையினர் மற்றும் முன்னாள் ராணுவத்தினரும் ஈடுபடுகின்றனர்.

தேர்தல் செலவினங்களுக்காக ரூ.1,032 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் 20,757 பேரிடம் அனுமதிபெற்ற துப்பாக்கிகள் உள்ளன. இதில் 3 ஆயிரம் துப்பாக்கிகள் தவிர்த்து மற்ற அனைத்தும் அருகில் உள்ள காவல் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தேடப்படும் குற்றவாளிகளில் இதுவரை 2,650 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்றவர்கள் தேடப்பட்டு வருகின்றனர்.

வாக்குப்பதிவுக்கு மொத்தம் 75,164 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், விவிபாட் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இயந்திரங்கள் பயன்படுத்தப்படும். 140 தொகுதிகளில் ஒரே ஒரு இயந்திரமும், 89 தொகுதிகளில் 2 இயந்திரங்களும், முதல்வர் ஸ்டாலின் போட்டியிடும் கொளத்தூர், விஜய் போட்டியிடும் பெரம்பூர், ஆர்.கே.நகர் ஆகிய 3 தொகுதிகளில் 3 இயந்திரங்களும், கரூரில் மட்டும் அதிகபட்சமாக 5 இயந்திரங்களும் பயன்படுத்தப்பட உள்ளன. இது மட்டுமின்றி, அவசரத் தேவைக்காக கூடுதலாக 20 முதல் 30 சதவீத இயந்திரங்கள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. 'சி-விஜில்' செயலி மூலம் 3,791 புகார்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் 727 புகார்கள் தீர்க்கப்பட்டுள்ளன. வாக்குப்பதிவை முன்னிட்டு, ஏப்.21, 22, 23 ஆகிய 3 நாட்கள் டாஸ்மாக் மதுபானக் கடைகளுக்கு விடுமுறை விடப்படுகிறது.

## தேர்தல் பறக்கும் படையினர் இதுவரை ரூ.83 லட்சம் பறிமுதல்

**தூத்துக்குடி, ஏப்.15:**

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் தீவிரமாக அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனைத் தொடர்ந்து, இன்று வரை பறக்கும் படைகள் மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவினர் நடத்திய சோதனையில் கைப்பற்றப்பட்ட ரொக்கம் மற்றும் பொருட்களின் விவரங்கள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட கலெக்டர் விஷ்ணு மகாஜன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

பறிமுதல் விவரங்கள்: ரொக்கத் தொகை: உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.83 லட்சத்து 3 ஆயிரத்து 266 பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இலவச பொருட்கள்: வாக்காளர்களுக்கு விநியோகிக்கக் கொண்டு செல்லப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் ரூ.13 லட்சத்து 71 ஆயிரத்து 671 மதிப்பிலான இலவச பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மதுபானங்கள்: விதிமீறலாகக் கொண்டு செல்லப்பட்ட ரூ.5 லட்சத்து 44 ஆயிரத்து 499 மதிப்பிலான மதுபானங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தேர்தலை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் கண்காணிப்புப் பணிகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளை மீறி, ஆவணங்களின்றி அதிகப்படியான பணம் அல்லது பரிசுப் பொருட்களை கொண்டு செல்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் உரிய ஆவணங்களுடன் பணத்தைக் கொண்டு செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ரூ.727 கோடி பறிமுதல்

**சென்னை, ஏப்.15:**

தேர்தல் பறக்கும் படை, நிலைக் கண்காணிப்பு குழுக்கள் நடத்தும் சோதனையில் இதுவரை ரூ.126 கோடி பணம், ரூ.295 கோடி மதிப்பில் தங்கம், வெள்ளி நகைகள், ரூ.75 கோடி போதை பொருட்கள், ரூ.2 கோடி மதுபானங்கள் மற்றும் இலவசமாக வழங்குவதற்காக கொண்டு செல்லப்பட்ட ரூ.227 கோடி மதிப்பிலான பரிசுப் பொருட்கள் என மொத்தம் ரூ.727 கோடி ரொக்கம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதில், உரிய ஆவணங்களை சமர்ப்பித்தவர்களிடம் ரூ.381 கோடி மதிப்பிலான பணம், நகை ஆகியவை திருப்பித் தரப்பட்டுள்ளன.

தமிழக அரசின் செய்தித் துறை அதிகாரிகள் முதல்வர் ஸ்டாலினுடன் பாதுகாப்பு வாகனங்களில் சென்று செய்தி அனுப்புவது குறித்து தேர்தல் ஆணையத்துக்கு புகார் அனுப்பப்பட்டுள்ளது.

வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் பட்டுவாடா செய்வதை கட்டுப்படுத்த ட்ரோன் கேமரா பயன்படுத்துவது குறித்து தேர்தல் ஆணையம் முடிவு செய்யும் என்று தேர்தல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# தேர்தல் நாள் அப்டேட்களை செயலியில் பதிவு செய்ய தேர்தல் அதிகாரிகளுக்கு பயிற்சி

**சென்னை, ஏப்.15:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு வரும் 23-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான தொழில்நுட்ப ஆயத்தப் பணிகளில் ஒரு முக்கிய மைல்கல்லாக, புரோ மாட்யூல் (PRO MODULE-ECINET) குறித்த மாநில அளவிலான பயிற்சி முகாம் நேற்று சென்னையில் நடைபெற்றது. இசிஐ நெட் புரோ மாட்யூல் என்பது தேர்தல் பணியில் இருக்கும் தலைமை வாக்குச்சாவடி அலுவலருக்காக உருவாக்கப்பட்ட ஒரு செயலியாகும்.




வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி பொருட்கள் வருகை, மாதிரி வாக்குப்பதிவு, வாக்குப்பதிவு தொடக்கம், அந்தந்த நேரப்படி வாக்குப்பதிவு சதவீதம் அப்டேட், வாக்குப்பதிவு நிறைவு போன்ற தேர்தல் நாள் அப்டேட்களை அதிகாரிகள் கைபேசி செயலி மூலம் நேரடியாக பதிவு செய்ய இந்த புரோ மாட்யூலை பயன்படுத்துகிறார்கள். இந்த பயிற்சியில் அனைத்து தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய பிற அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்திய தேர்தல் ஆணையத்தின் மூத்த அதிகாரிகள், சந்தோஷ் பதாரியா மற்றும் தருண் மிஸ்ரா ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், மூத்த அதிகாரிகள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு புரோ மாட்யூலை பயன்படுத்துவது குறித்த நேரடிப் பயிற்சி வழங்கப்பட்டது.

தேர்தல் வாக்குப் பதிவு நாளில் வாக்குப் பதிவு விவரங்களை எவ்வித தாமதமுமின்றி உடனுக்குடன் வழங்குவதற்காக, வாக்குப்பதிவு தரவுகளை டிஜிட்டல் முறையில் நிர்வகிக்கவும், பதிவேற்றவும் அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்குத் தேவையான முழுமையானத் திறனை வழங்குவதையும், இசிஐநெட் அமைப்பைச் செயல்படுத்துவதையும் மையமாகக் கொண்டு இந்தப் பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சி மட்டுமின்றி அனைத்து தொகுதிகளிலும் இசிஐநெட் செயலியில் உள்ள புரோ மாட்யூல் பயன்பாட்டை உறுதி செய்யும் விதமாக கள சோதனையானது வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வாக்குச்சாவடி மையங்களில் இருந்து மேற்கொள்ளப்பட்டது.

மண்டல அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் மேற்பார்வையாளர்கள் ஆகியோர், நேரடிச் சூழலில் புரோ மாட்யூல் எவ்விதக் குறையுமின்றிச் செயல்படுவதை உறுதிசெய்யும் வகையில், இச்செயல்முறையை நிகழ்நேரத்தில் கண்காணித்தனர்.

இன்றைய பயிற்சி மற்றும் களச் சோதனைகள் நிறைவடைந்துள்ள நிலையில், புரோ மாட்யூல் செயல்பாடுகள் குறித்த இறுதிக்கட்டக் கள சோதனை, நாளை (15-ம் தேதி) அனைத்து வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களால் நடத்தப்படவுள்ளது.

## க்ரைம் கார்னர்

### சாத்தூர் பட்டாசு ஆலை வெடி விபத்து - உரிமையாளர் கைது

**சாத்தூர், ஏப்.15:**

விருதுநகர் மாவட்டம் சிவகாசி தாலுகா தாயில்பட்டி அருகே சத்திரப்பட்டியில் நாக்பூர் மினி உரிமம் பெற்ற பட்டாசு ஆலை ஒன்று செயல்பட்டு வருகிறது. 30-க்கும் மேற்பட்ட பட்டாசு தயாரிப்பு அறைகள் அதில் உள்ளன. இந்த ஆலையை சிவகாசியை சேர்ந்த கண்ணன் (வயது 52) என்பவர் நடத்தி வருகிறார்.

நேற்று காலை வழக்கம்போல் பட்டாசு தயாரிப்பு தீவிரமாக நடந்து வந்தது. சற்று நேரத்தில் பட்டாசுகளுக்கு மருந்து செலுத்தும் அறையில் திடீரென வெடிவிபத்து ஏற்பட்டு வெடித்துச்சிதறியது. இதையடுத்து அங்கிருந்த பட்டாசுகள் பயங்கரமாக வெடித்துச்சிதறின. அடுத்தடுத்த பட்டாசு அறைகளில் இருந்த பட்டாசுகளும் வெடிக்கத்தொடங்கியதால் பெரும்பாலான தொழிலாளர்கள் பதறியபடி வெளியே ஓடிவந்தனர். இதில் பல அறைகள் தரைமட்டமாகி கிடந்தன.

தகவல் அறிந்து சிவகாசி மற்றும் வெம்பக்கோட்டையில் இருந்து தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்தனர். பட்டாசுகள் வெடித்த வண்ணம் இருந்ததால் ஆலைக்குள் நுழைய முடியாத நிலை இருந்தது. வெடிச்சத்தம் குறைந்ததும் ஆலைக்குள் நுழைந்து மீட்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். தரைமட்டமான அறைகளின் இடிபாடுகளை அகற்றும் பணி நடைபெற்றது. இந்த சம்பவத்தில் தாயில்பட்டி ஊராட்சி வினோபா காலனியை சேர்ந்த மகாலிங்கம் என்பவருடைய மகன் பாண்டியராஜ் (38) சம்பவ இடத்திலேயே உடல்கருகி பரிதாபமாக உயிரிழந்தது தெரியவந்தது. அவரது உடலை போலீசார் மீட்டு சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மடத்துப்பட்டியை சேர்ந்த ராஜ்குமார் (42) மேல கோதைநாச்சியார்புரம் செல்வம் (33), ரமேஷ் (42), ஜெயா, ராமலட்சுமி உள்பட 9 தொழிலாளர்கள் பலத்த தீக்காயங்களுடன் மீட்கப்பட்டனர். அவர்கள் சிவகாசி அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுகுறித்து தாயில்பட்டி கிராம நிர்வாக அலுவலர் கணேசன் கொடுத்த புகாரின் பேரில் பட்டாசு ஆலை உரிமையாளர் கண்ணன், போர்மேன் சத்திரப்பட்டியை சேர்ந்த முனியசாமி (43) ஆகியோர் மீது போலீசார் வழக்குப்பதிவு விசாரணை நடத்திவந்தனர். இந்த நிலையில், பட்டாசு ஆலை வெடி விபத்து தொடர்பாக ஆலையின் உரிமையாளர் கண்ணன் என்பவரை போலீசார் கைது செய்துள்ளனர். போர்மேன் முனியசாமியை போலீசார் வலைவீசி தேடிவருகின்றனர்.

### பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த காவலர் பணியிடை நீக்கம்

**தூத்துக்குடி, ஏப்.15:**

தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டை அருகேயுள்ள தெற்கு காலாங்கரையைச் சேர்ந்த கூலித் தொழிலாளி ஒருவர், உடல்நலக் குறைவு காரணமாகத் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அவருக்கு உதவியாக அவரது 28 வயது மனைவி உடனிருந்தார்.

அதே வார்டில் சிகிச்சை பெற்று வந்த கைதி ஒருவருக்கு பாதுகாப்பு பணிக்காக, தட்டப்பாறை தெற்கு தெருவை சேர்ந்த கோபாலகிருஷ்ணன் (வயது 36) என்ற காவலர் பணியமர்த்தப்பட்டிருந்தார். இவர் தற்போது சிப்காட் காவல் நிலையத்தில் காவலராக பணியாற்றி வருகிறார்.

சம்பவத்தன்று நள்ளிரவில், காவலர் கோபாலகிருஷ்ணன் அந்தப் பெண்ணிடம் சென்று செல்போன் சார்ஜர் கேட்பது போல பேச்சு கொடுத்துள்ளார். ஒரு கட்டத்தில் அந்தப் பெண்ணிற்கு அவர் பாலியல் ரீதியாக தொந்தரவு கொடுத்துள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த அந்தப் பெண் இதுகுறித்துப் புகார் அளித்தார். பாதிக்கப்பட்ட பெண்ணின் புகாரின் பேரில், தூத்துக்குடி தென்பாகம் போலீசார் விசாரணை நடத்தினர். இதில் காவலர் கோபாலகிருஷ்ணன் மீதான குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டதையடுத்து, அவர் மீது பாலியல் தொந்தரவு, பெண்ணைத் துன்புறுத்தல், கொலை மிரட்டல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து கோபாலகிருஷ்ணனை போலீசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். காவல்துறையின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் செயல்பட்டதை கருத்தில் கொண்டு, அவர் நேற்று முறைப்படி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

## விளையாட்டு செய்திகள்

### கால்பந்தில் பச்சையப்பன் எஃப்சி வெற்றி

**சென்னை, ஏப்.15:**

சென்னை கால்பந்து சங்கம் சார்பில் முதல் டிவிஷன் போட்டி செனாய் லயோலா மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பச்சையப்பன் எஃப்சி 2-1 என்ற கோல் கணக்கில் ஏடிபி அணியை தோற்கடித்தது. அந்த அணி சார்பில் 47-வது நிமிடத்தில் கமலேஷும், 51-வது நிமிடத்தில் ஜீத்தும் கோல் அடித்து அசத்தினர். மற்றொரு ஆட்டத்தில் நேதாஜி எஃப்சி 4-1 என்ற கோல் கணக்கில் அசோக் லேலண்ட் அணியை வீழ்த்தியது. அந்த அணி தரப்பில் யோகேஷ் 2 கோல்களும் (45 மற்றும் 52-வது நிமிடங்கள்), ராஜ் A(5-வது நிமிடம்), தேவா (90-வது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோலும் அடித்தனர்.

### ஐசிசி மகளிர் டி20 உலகக் கோப்பைக்கு ரூ.82 கோடி பரிசு

**துபாய், ஏப்.15:**

ஐசிசி மகளிர் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் வரும் ஜூன் 12 முதல் ஜூலை 5 வரை இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் நாட்டில் நடைபெறுகிறது. இதில் 12 அணிகள் கலந்து கொள்கின்றன. 24 நாட்கள் நடைபெறும் இந்தத் தொடரில் மொத்தம் 33 ஆட்டங்கள் நடைபெறுகின்றன. தொடக்க ஆட்டத்தில் ஜூன் 12-ம் தேதி இங்கிலாந்து - இலங்கை அணிகள் மோதுகின்றன. இந்த ஆட்டம் பர்மிங்காமில் நடைபெறுகிறது.

இந்நிலையில் இந்த தொடருக்கான பரிசுத் தொகையை நேற்று ஐசிசி அறிவித்தது. மொத்த பரிசுத் தொகை ரூ.82 கோடியாகும். இது 2024-ம் ஆண்டு வழங்கப்பட்ட தொகையைவிட 10 சதவீதம் அதிகமாகும். சாம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு ரூ.21.8 கோடி வழங்கப்படும்.

2-வது இடம் பிடிக்கும் அணி ரூ.10 கோடியை பெறும். அரை இறுதியில் தோல்வி அடையும் அணிகளுக்கு தலா ரூ.6.29 கோடி வழங்கப்படும். லீக் சுற்றில் பெறும் ஒவ்வொரு வெற்றிக்கும் ரூ.29 லட்சம் வழங்கப்படும். டி20 உலகக் கோப்பை தொடரில் பங்கேற்கும் ஒவ்வொரு அணிக்கும் குறைந்தபட்சம் ரூ.2.06 கோடி பரிசுத் தொகை வழங்கப்படுவது உறுதி செய்யப்படும் என ஐசிசி தெரிவித்துள்ளது.

### ஆர்சிபி வீரர் டிம் டேவிட்டுக்கு அபராதம் விதிப்பு

**மும்பை, ஏப்.15:**

ஐபிஎல் தொடரில் நேற்று முன்தினம் மும்பை வான்கடே மைதானத்தில் மும்பை - ஆர்சிபி அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் ஆர்சிபி பேட்டிங்கின் போது 17.2-வது ஓவரில் பந்து மாற்றப்பட்டது. அப்போது அந்த அணியின் பேட்ஸ்மேன் டிம் டேவிட் பந்தை கையில் வாங்கிக் கொண்டு திருப்பி கொடுக்க மறுத்தார். 19.2-வது ஓவரிலும் இதே போன்று அவர், நடந்துகொண்டார். இது ஐபிஎல் நன்னடத்தை விதிகளுக்கு எதிரானது ஆகும். இந்நிலையில் இந்த விவகாரத்தில் டிம் டேவிட்டுக்கு போட்டியின் ஊதியத்தில் 25 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு மதிப்பிழப்பு புள்ளியும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆட்டத்தில் மும்பை அணி பந்துவீசுவதற்கு அதிக நேரம் எடுத்துக் கொண்டதால் அந்த அணியின் கேப்டன் ஹர்திக் பாண்டியாவுக்கு ரூ.12 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# துணை ஜனாதிபதி வீட்டில் தமிழ் புத்தாண்டு கொண்டாடிய பிரதமர் மோடி



**புதுடெல்லி, ஏப்.15:**

உலகம் முழுவதும் உள்ள தமிழர்களால் சித்திரை முதல் நாளான இன்று தமிழ் புத்தாண்டு கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ் புத்தாண்டையொட்டி கோவில்களில் இன்று அதிகாலை முதல் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகின்றன. பொதுமக்கள் கோவில்களுக்கு சென்று சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், டெல்லியில் உள்ள துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் இல்லத்திற்கு நேரில் சென்ற பிரதமர் மோடி அவருக்கு தமிழ் புத்தாண்டு வாழ்த்து தெரிவித்தார். பிறகு அவரது இல்லத்தில் உள்ள பூஜை அறையில் வழிபாட்டிலும் ஈடுபட்டார்.

பின்னர் பிரதமர் மோடிக்கு முருகப்பெருமான் புகைப்படத்தை சி.பி. ராதாகிருஷ்ணன் பரிசாக கொடுத்தார்.

இதுகுறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில், “சிறப்பு வாய்ந்த புத்தாண்டு தினத்தில் துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களை சந்தித்து வாழ்த்துதெரிவித்தேன். நல்ல ஆரோக்கியமும், மகிழ்ச்சியும் நிறைந்த அற்புதமான ஆண்டாக அமைந்திட பிரார்த்திக்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

# கர்நாடகாவில் அமைச்சர் பதவி கேட்டு 30 எம்எல்ஏ-க்கள் டெல்லிக்கு பயணம்: முதல்வர் சித்தராமையாவுக்கு நெருக்கடி

**பெங்களூரு, ஏப்.15:**

கர்நாடகாவில் அமைச்சர் பதவி கேட்டு 30 காங்கிரஸ் எம்எல்ஏக்கள் டெல்லியில் முகாமிட்டுள்ளனர்.

கர்நாடகாவில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்து இரண்டரை ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், துணை முதல்வர் டி.கே.சிவகுமார் முதல்வர் பதவி கேட்டு போர்க்கொடி தூக்கியுள்ளார். அவரது ஆதரவு எம்எல்ஏக்கள் முதல்வர் சித்தராமையாவுக்கு எதிராக பேசிவருவதால் காங்கிரஸ் மேலிடத்துக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.



இந்நிலையில் காங்கிரஸ் எம்எல்ஏக்கள் ரிஸ்வான் அர்ஷத், லட்சுமண் சவதி, சுப்பா ரெட்டி, சிவண்ணா, வினய் குல்கர்னி உள்ளிட்ட 30 பேர் நேற்று முன்தினம் டெல்லிக்கு ஒரே விமானத்தில் சென்றனர்.

அங்கு அவர்கள் காங்கிரஸ் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மூத்த தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோரை சந்தித்து பேச திட்டமிட்டுள்ளனர்.

இதுகுறித்து காங்கிரஸ் எம்எல்ஏக்கள் தரப்பில் கூறுகையில், “காங்கிரஸ் ஆட்சி பொறுப்பேற்று இரண்டரை ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது. எங்களுக்கு பதவி கிடைக்காததால் தொகுதி மக்களின் முன்னேற்றத்துக்கு எதையும் செய்ய முடியவில்லை. எனவே அனைவருக்கும் வாய்ப்பு தரும் வகையில், சரியாக செயல்படாத அமைச்சர்களை நீக்கிவிட்டு எங்களுக்கு அமைச்சர் பதவி வழங்க வேண்டும்” என்றனர்.

காங்கிரஸ் மேலிட வட்டாரத்தில் விசாரித்தபோது, “5 மாநில தேர்தல் முடிவுகளுக்கு பிறகு கர்நாடக அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படும். அமைச்சர் பதவிக்கு யார் வேண்டுமானாலும் ஆசைப்படலாம். அதற்கான சூழலைப் பொறுத்து பதவிகள் வழங்கப்படும்” என்றனர்.

கர்நாடக காங்கிரஸ் எம்எல்ஏக்களின் போர்க்கொடியால் முதல்வர் சித்தராமையாவுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

## வணிகச் செய்திகள்

### ஏர் இந்தியா ஊழியர்களுக்குப் புதிய சலுகை: பணித்திறன் அடிப்படையில் பங்குகள் திட்டம்

**புதுடெல்லி, ஏப்.15:**

டாடா குழுமத்தின் அங்கமான ஏர் இந்தியா நிறுவனம், தனது ஊழியர்களை ஊக்குவிக்கவும் திறமையானவர்களைத் தக்கவைத்துக் கொள்ளவும், அவர்களின் பணித்திறனை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் பங்குகளை வழங்கும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஏர் இந்தியாவின் விமானிகள், பொறியாளர்கள், மூத்த மேலாண்மை அதிகாரிகள் உள்ளிட்ட தகுதியுள்ள ஊழியர்களுக்கு, நிறுவனத்தின் பங்குகளை சலுகை விலையில் வாங்கும் இந்த வாய்ப்பு கிடைக்கும்.

இதற்காக மொத்தம் 22.71 கோடி பங்குகளை ஏர் இந்தியா ஒதுக்கியுள்ளது. இது நிறுவனத்தின் மொத்த பங்குகளில் 0.25 சதவீதம் ஆகும். இதற்கான ஒப்புதலை நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு கடந்த பிப்ரவரி மாதமே வழங்கிவிட்டது.

இப்பங்குகள் அனைவருக்கும் சமமாக வழங்கப்படாது. ஊழியர்கள் தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எவ்வளவு சிறப்பாக எட்டுகிறார்கள் என்பதைப் பொருத்தே அது அமையும். அதாவது, நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளில் 85 சதவீதத்துக்கும் குறைவாக எட்டப்பட்டால், ஊழியர்களுக்கு பாதி அளவிலான பங்குகள் மட்டுமே கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், நிறுவனத்தின் லாபத்தை அதிகரிப்பதில் ஊழியர்களின் பங்களிப்பை உறுதி செய்ய ஏர் இந்தியா திட்டமிட்டுள்ளது.

# மக்கள் விரும்பும் மக்களாட்சியை அமைக்க உறுதியேற்போம் - விஜய் சூளுரை

**சென்னை, ஏப்.15:**

சட்டமேதை டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் 136-வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை பனையூரில் உள்ள தவெக அலுவலகத்தில் அக்கட்சியின் தலைவர் விஜய் அம்பேத்கர் உருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.





அதன்பின்னர் அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில்,

அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் சமத்துவம், சம உரிமை, சமூக நீதி, ஜனநாயகம் ஆகியவற்றை நிலைநிறுத்தியவர்.

வலுவான அடித்தளம் அமைத்து, எளியவர்களுக்கும் அதிகாரம் கிடைக்கப் பாடுபட்டவர். நம் கொள்கைத் தலைவர் அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாள் இன்று.

அவரது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னையில் உள்ள அலுவலகத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினேன்.

நம் கொள்கைத் தலைவரின் பிறந்தநாளில், சமத்துவ சமுதாயம் அமைக்கும் லட்சியப் பாதையில் பயணிப்போம்.

மக்கள் விரும்பும் மக்களாட்சியை அமைக்க உறுதியேற்போம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மத்திய அரசின் திட்டங்களைத் தடுக்கிறது திமுக: பிரதமர் மோடி குற்றச்சாட்டு

புதுடெல்லி, ஏப்.15:



பாஜக பூத் கமிட்டி உறுப்பினர்களுடன் பிரதமர் மோடி டில்லியில் இருந்து காணொலி வாயிலாக திங்கள்கிழமை ஆலோசனை நடத்தினார்.

சென்னை மயிலாப்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், பாஜக மூத்த தலைவரும், மயிலாப்பூர் தொகுதி வேட்பாளருமான தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் தமிழகத்தைச் சேர்ந்த 5 பூத் கமிட்டி உறுப்பினர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார்.

அப்போது அவர் பேசியதாவது: மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் திமுக அங்கம் வகித்தபோது, தமிழகத்துக்கு எந்தத் திட்டங்களையும் கொண்டு வரவில்லை. மக்கள் சந்தித்த பிரச்னைக்கும் அவர்கள் தீர்வு காணவில்லை. உதாரணத்துக்கு பாம்பன் பாலம் குறித்து காங்கிரஸ் ஆட்சியில் கவனம் செலுத்தவில்லை. ஆனால், பாஜக ஆட்சியில் பாம்பனில் செங்குத்து தூக்குப் பாலம் அமைக்கப்பட்டது.

தமிழகத்தில் 11 புதிய மருத்துவக் கல்லூரிகள் திறக்கவும், மருத்துவப் படிப்புகளுக்கான இடங்களை இரு மடங்காக உயர்த்தியும் பாஜக அரசு அனுமதி வழங்கியது.

தேர்தல் பரப்புரையின்போது, இதுபோன்ற மத்திய அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூறவேண்டும். காங்கிரஸ் ஆட்சிக்கும், பாஜக ஆட்சிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை மக்களிடம் விளக்க வேண்டும்.

திட்டங்களுக்கு முட்டுக்கட்டை: விவசாயிகள், சிறு வியாபாரிகள் மற்றும் ஏழை மக்களுக்காக பல திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, முத்ரா போன்ற திட்டத்தால் மக்கள் நேரடியாகப் பயன் பெறுகின்றனர்.

ஆனால், தமிழகத்தில் மத்திய அரசின் சில திட்டங்களை வேண்டுமென்றே திமுக அரசு தடுத்து வருகிறது. திமுக அரசின் இந்தப் போக்கால், மத்திய அரசின் வீடு கட்டும் திட்டத்தின் பயன் முழுமையாக மக்களுக்குச் சென்றடையவில்லை. திமுக ஆட்சியில் பெண்கள், சிறுமிகள் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது. போதைப் பொருள் விற்பனை கட்டுக்கடங்காமல் உள்ளது. இது பற்றியெல்லாம் திமுக அரசுக்கு எந்த அக்கறையும், கவலையும் இல்லை. இதுபோன்ற சட்டத்துக்குப்புறம்பான செயல்களை ஆதரித்து, ஊக்கம் அளிப்பதே திமுக அரசு என்பதுதான் வருத்தமாக உள்ளது என்றார் பிரதமர் நரேந்திர மோடி.

# மகளிர் இடஒதுக்கீட்டு சட்ட விவாதம்: இன்று எதிர்க்கட்சிகள் கூட்டம்

பெங்களூரு, ஏப்.15:

அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பெங்களூரில் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை கூறியதாவது: நாடாளுமன்றத்தில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ள மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவை அமல்படுத்துவது குறித்து விவாதிக்க புது தில்லியில் ஏப். 15-ஆம் தேதி அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்துள்ளோம். மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவை அமலாக்குவது தொடர்பாக கலந்தாலோசிக்க மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரேண் ரிஜிஜு எனக்கு எழுதியிருந்த கடிதத்துக்கு ஏற்கெனவே பதில் அனுப்பிவிட்டேன். அனைத்துக் கட்சிகளின் கருத்து அறிவதற்கு மத்திய அரசுக்கு விருப்பமில்லை. மாறாக, இந்த விவகாரத்தில் அரசியல் லாபம் அடைவதை மட்டுமே நோக்கமாக கொண்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்த விவகாரத்தை காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி ஏற்கெனவே கிளப்பியிருந்தார். இந்த மசோதாவுக்கு காங்கிரஸ் கட்சியின் முழு ஆதரவு உண்டு. காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் ஆதரித்து, ஒரு மனதாக சட்ட மசோதாவை நிறைவேற்றினோம். நாடாளுமன்றம், சட்டப்பேரவைகளில் மகளிருக்கு மூன்றில் ஒருபங்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கு காங்கிரஸ் கட்சி ஆதரவு அளித்து வந்துள்ளது. எனவே, புது டில்லியில் ஏப். 15-ஆம் தேதி அனைத்து எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவின் அடிப்படையில் எங்களது அடுத்தகட்ட நடவடிக்கை இருக்கும். மகளிர் இடஒதுக்கீட்டு சட்ட மசோதாவை நாங்கள் எதிர்ப்பதாக கூறுவதில் உண்மையில்லை. இந்த சட்ட மசோதாவை அமல்படுத்துவதில்தான் சில யோசனைகளை கூற விரும்புகிறோம் என்றார்.

# மேகதாது அணை விவகாரம்: தமிழக அரசு, சுப்ரீம் கோர்ட்டில் மறு ஆய்வு மனு தாக்கல்



புதுடெல்லி, ஏப்.15:

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டுவதற்கான கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையை நிராகரித்து திருப்பி அனுப்ப மத்திய நீர்வளத்துறை ஆணையத்துக்கு உத்த ரவிட வேண்டும் என தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மனுவை சுப்ரீம் கோர்ட்டு கடந்த நவம் பர் 13-ந் தேதி தள்ளுபடி செய்து தீர்ப்பு கூறியது. இந்த தீர்ப்பை மறு ஆய்வு செய்யக்கோரி தமிழ்நாடு அரசு தரப்பில் வக்கீல் மிஷா ரோத்தகி மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், 'மேகதாது அணை திட்டத்துக்கு எதிராக தமிழ்நாடு அரசின் மனுவை நிராகரித்தது காவிரி வழக் கில் சுப்ரீம் கோர்ட்டு பிறப்பித்த தீர்ப்புக்கு எதிரானது. சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பை அமல்படுத் தும் அமைப்பாகவே காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உள்ளது. அதற்கு மேல் வேறு அதி காரம் இல்லை. இந்த விவகாரத்தில் ஆணையத்தை முடிவு எடுக்க சுப்ரீம் கோர்ட்டு அனுமதித் தது தவறானது.

எனவே, இந்த தீர்ப்பை மறுஆய்வு செய்ய வேண்டும்' என கூறப்பட்டுள்ளது. இந்த மறு ஆய்வு மனுவை தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் கே.வினோத் சந்திரன், விபுல் எம்.பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு (புதன்கிழமை) விசாரிக்க உள்ளது.

# ஈரான் கச்சா எண்ணெய்யுடன் இந்தியா வந்த 2 கப்பல்கள்

புதுடெல்லி, ஏப்.15:



*ஈரானில் இருந்து கச்சா எண்ணெய் ஏற்றிக் கொண்டு 2 கப்பல்கள் இந்தியா வந்துள்ளன. கடந்த 7 ஆண்டுகளில் இந்தியாவுக்கு ஈரானில் இருந்து கச்சா எண்ணெய் வருவது இதுவே முதல்முறையாகும்.*

*அமெரிக்கா விதித்த தடை காரணமாக ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா கடந்த 2019-ஆம் ஆண்டு மே மாதம் முதல் கடந்த 7 ஆண்டுகளாக நிறுத்தி வைத்திருந்தது. எனினும் ஈரான், அமெரிக்கா-இஸ்ரேல் இடையேயான மேற்காசிய போர் காரணமாக உலக நாடுகளில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுக்கும் நோக்கில், நடுக்கடலில் நிற்கும் ஈரான் கப்பல்களில் உள்ள 9 கோடியே 50 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய்யை வாங்க இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு 30 நாள்களுக்கு (வரும் 19-ஆம் தேதி வரை) அமெரிக்கா அனுமதி அளித்துள்ளது.*

*இதையடுத்து, ஈரானிய கச்சா எண்ணெய்யை இந்தியா மீண்டும் வாங்க ஆரம்பித்துள்ளது. நடுக்கடலில் நிற்கும் ஈரான் கப்பல்களில் உள்ள சுமார் 5 கோடியே 10 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய்யை இந்தியா வாங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. எஞ்சிய கச்சா எண்ணெய் பீப்பாய்களை சீனா, தென்கிழக்கு ஆசிய கண்டத்தில் உள்ள பிற நாடுகளுக்கு ஈரான் விற்றிருக்கலாம் என சொல்லப்படுகிறது.*

*இந்தியா வாங்கிய ஈரானிய கச்சா எண்ணெய்யில் 40 லட்சம் பீப்பாய்களுடன் 2 கப்பல்கள் இந்தியாவுக்கு வந்துள்ளன. அதில் ஒரு கப்பல் நேஷனல் ஈரானியன் டேங்கர் நிறுவனத்துக்கு சொந்தமானது. ஈரானின் கார்க் தீவில் இருந்து ஏற்கெனவே ஏற்றப்பட்ட 20 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய்யுடன், அக்கப்பல் குஜராத் மாநிலம் சிக்காவில் உள்ள துறைமுகத்துக்கு வந்துள்ளது.*

*இன்னொரு கப்பலான ஜெயா, ஒடிஸா மாநிலம் பாரதீப் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.*

# நடப்பு ஆண்டில் தென்மேற்கு பருவமழை இயல்புக்கு குறைவாக இருக்கும்: இந்திய வானிலை ஆய்வு மையம்



புதுடெல்லி, ஏப்.15:

நாட்டில் தென்மேற்கு பருவமழை ஜூன் மாதம் 2-வது வாரத்தில் தொடங்கி செப்டம்பர் வரை பெய்யும். அப்போது, இந்தியாவின் வட பகுதிகள் அதிக மழைப்பொழிவை பெறும். தமிழகத்திற்கு வடகிழக்கு பருவமழை காலத்தில் அதிக மழை கிடைக்கும்.

இந்த நிலையில், இந்திய வானிலை ஆய்வு மையம் இன்று வெளியிட்டு உள்ள செய்தியில், நடப்பு ஆண்டில் நாட்டில் தென்மேற்கு பருவமழை (ஜூன் முதல் செப்டம்பர் வரை) இயல்பை விட குறைவாக இருக்க கூடும் என்று கணித்துள்ளது. இது நீண்ட கால சராசரியில் 92 சதவீதம் (5 சதவீதம் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருக்க கூடும்) என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 1971 முதல் 2020 ஆண்டு காலகட்டத்திற்கான பருவ மழையின் நீண்ட கால சராசரி 87 செ.மீ. என்ற அளவில் உள்ளது. இந்நிலையில், நடப்பு 2026-ம் ஆண்டில் மழை பொழிவுக்கான சாத்தியம், இயல்புக்கு குறைவாக (நீண்ட கால சராசரியில் 90-95 சதவீதம்) அல்லது பற்றாக்குறை (90 சதவீதத்திற்கும் குறைவாக) என்ற பிரிவுகளில் இருக்க கூடும் என கணிக்கப்பட்டு உள்ளது. எனினும், மே மாதம் இறுதி வாரத்தில் பருவமழைக்கான புதுப்பிக்கப்பட்ட முன்னறிவிப்பு வெளியிடப்படும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

# நொய்டா கலவரம்: குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்திய உ.பி. அரசு!

புதுடெல்லி, ஏப்.15:



உத்தரப் பிரதேசத்தின் நொய்டா-காசியாபாத்பகுதியின் பல்வேறு தொழிற்பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள ஊதிய திருத்தக் கோரிக்கைகளுக்காகப் போராட்டம் நடத்தினர்.

1,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பெரும் குழுக்களாகக் கூடி பல இடங்களில் முழக்கங்களை எழுப்பிபோராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்தப் போராட்டம் நொய்டாவின் ஃபேஸ்-2 மற்றும் செக்டர் 60 போன்ற பகுதிகளில் நேற்று கலவரமாக மாறியது. சில பகுதிகளில் மிகவும் மோசமடைந்து கல் எறிதல், பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்துதல் மற்றும் தீவைப்பு போன்ற சம்பவங்கள் நடைபெற்றன. இதில் ஒரு வாகனம் எரிக்கப்பட்டது. பல வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன. இதனால், அங்கு பெரும் பதற்றம் நிலவியது. இதனால், அந்தப் பகுதி முழுவதும் காவல்துறையினர் குவிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, "ஊதிய உயர்வு வழங்க உயர்நிலை அதிகாரக் குழு முடிவு செய்துள்ளது. இந்த முடிவுக்கு உத்தரப் பிரதேச முதல்வர் நேற்று இரவு ஒப்புதல் அளித்துள்ளார்" என கௌதம் புத்த நகர் மாவட்ட ஆட்சியர் மேதா ரூபம் தெரிவித்தார்.

இதன்படி, கௌதம் புத்த நகர் மற்றும் காசியாபாத் பகுதியில் உள்ள திறனற்ற தொழிலாளர்கள் ஊதியம் முன்பு ரூ.11313 ஆக இருந்ததை ரூ.13,690 ஆகவும், ஓரளவு திறனுள்ள தொழிலாளர்கள் ஊதியம் ரூ.15,059 ஆகவும், திறனுள்ள தொழிலாளர்கள் ஊதியம் ரூ.16,868 ஆகவும் உயர்த்திப்பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மற்ற மாநகராட்சிப் பகுதிகளில் திருத்தப்பட்ட மாத ஊதியமானது திறனற்ற தொழிலாளர்களுக்கு ரூ.13,006, ஓரளவு திறனுள்ள தொழிலாளர்களுக்கு ரூ.14,306 மற்றும் திறனுள்ள தொழிலாளர்களுக்கு ரூ.16,025 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# சி.பி.எஸ்.இ. 9ம் வகுப்பு பாடப் புத்தகங்கள்: என்.சி.இ.ஆர்.டி. வெளியீடு

புதுடெல்லி, ஏப்.15:

மத்திய இடைநிலை கல்வி வாரியமான சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு, புதிய கல்விக் கொள்கையின்படி இந்த ஆண்டு, 9-ம் வகுப்பு பாடப்புத்தகங்கள் மாற்றப்பட்டுள்ளன.

கடந்த 1ம் தேதி முதல் புதிய கல்வியாண்டு துவங்கி உள்ள நிலையில், 9-ம் வகுப்பு பாட புத்தகங்கள் கிடைக்காதது சர்ச்சையானது. இதனையடுத்து பாட புத்தகங்கள் தயாரிப்பு பணி விறுவிறுப்பாக நடப்பதால், வரும் 15-ம் தேதிக்குள் விற்பனைக்கு வெளியிடப்படும் என என்.சி.இ.ஆர்.டி. தெரிவித்தது.

இதனையடுத்து தற்போது ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகளுடன் அறிவியல் பாடத்துக்கான புத்தகங்களை என்.சி.இ.ஆர்.டி. டில்லியில் வெளியிட்டுள்ளது.

# அமெரிக்க நீர்வீழ்ச்சியில் விழுந்து இந்தியர் உயிரிழப்பு

வாஷிங்டன், ஏப்.15:

ஆந்திர மாநிலம், விஜயநகரம் மாவட்டம், பொப்பிலி பகுதியை சேர்ந்தவர் சிங்கிரெட்டி சாய் ஸ்ரீஹரிகிருஷ்ணா (26). இவர் அமெரிக்காவின் மிசோரி அருகே செயிண்ட் லூயிஸ் பகுதியில் உள்ள வெஸ்ட் மின்ஸ்டர் எனும் இடத்தில் தனது நண்பர்களுடன் வசித்து வந்தார். பொறியியல் பட்ட மேற்படிப்பு (எம்எஸ்) முடித்து அங்குள்ள ஒரு நிறுவனத்தில் பணியாற்றி வந்தார்.

இவருக்கு சிறு வயது முதலே நீச்சலில் ஆர்வம் மிக அதிகம். இவர் அமெரிக்காவில் நீச்சல் பயிற்சியாளராக கூட பணியாற்றி உள்ளார். இந்நிலையில், கடந்த 12ம் தேதி ஞாயிற்றுக்கிழமை தனது பிறந்த நாளை கொண்டாட சாய் ஸ்ரீஹரிகிருஷ்ணா மற்றும் அவரது 4 நண்பர்கள் கலிஃபோர்னியாவில் உள்ள மெராமெக் ஸ்டேட் பார்க் பகுதிக்கு சென்றனர். அங்கு உள்ள ஒரு நீர்வீழ்ச்சிக்கு சென்று அனைவரும் நீச்சலடித்து உற்சாகமாக கொண்டாடி மகிழ்ந்தனர். அப்போது, திடீரென வெள்ளத்தில் சாய் ஸ்ரீஹரிகிருஷ்ணா அடித்துச் செல்லப்பட்டார். இதனை கண்டு, சக நண்பர்கள் அவரை காப்பாற்ற முயற்சித்தும் பலன் இல்லை. அதற்குள் சாய் கிருஷ்ணா முழுமையாக தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டார். உடனே இது குறித்து போலீஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மீட்பு படையினரும் 15 நிமிடத்திற்குள் சம்பவ இடத்திற்கு சென்று சாய் ஸ்ரீஹரிகிருஷ்ணாவை தேடினர். பின்னர், நதிக்கரையில் சாய் ஸ்ரீஹரிகிருஷ்ணாவின் சடலம் இருப்பதை கண்டு மீட்டெடுத்தனர். இது குறித்து ஆந்திராவில் உள்ள அவரின் பெற்றோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை அறிந்து பெற்றோர், உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் தான் சாய் ஸ்ரீஹரிகிருஷ்ணாவுக்கு பல முயற்சிகளுக்கு பின்னர் அமெரிக்காவில் வேலை கிடைத்தது. அதற்குள், அவர் பிறந்த நாளிலேயே இறந்து விட்டாரே என அவரது பெற்றோர்கள் கதறி அழுகின்றனர். சடலத்தை சொந்த ஊருக்கு கொண்டு வரும் முயற்சிகளும் நடைபெற்று வருவதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

# நாட்டின் சில்லறை பணவீக்கம் 3.4 சதவீதமாக அதிகரிப்பு

புதுடெல்லி, ஏப்.15:



நாட்டின் சில்லறை பணவீக்கம் மார்ச் மாதத்தில் 3.4 சதவீதமாக அதிகரித்துள்ளது.

2024-ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட புதிய கணக்கீட்டு முறையின்கீழ், மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள 3-ஆம் மாத தரவு இதுவாகும். அதன்படி, கடந்த ஜனவரியின் 2.75 சதவீதம், பிப்ரவரியின் 3.21 சதவீதத்திலிருந்து தொடர்ந்து 3-ஆவது மாதமாக பணவீக்கம் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், இது ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ள 4 சதவீத இலக்கிற்குள்ளேயே இருப்பதால், வரும் மாதங்களில் ரிசர்வ் வங்கி நிதிக் கொள்கையில் (வட்டி விகிதங்கள்) மாற்றம் இருக்குமா என்ற எதிர்பார்ப்பு குறைந்துள்ளது. மார்ச் மாத பணவீக்கம் உயர்வுக்கு, உணவுப் பொருள்களின் விலையேற்றம் முக்கியக் காரணியாகப் பார்க்கப்படுகிறது. ஜனவரியில் 2.13 சதவீதமாகவும், பிப்ரவரியில் 3.47 சதவீதமாகவும் இருந்த உணவுப் பணவீக்கம், மார்ச்சில் 3.87 சதவீதமாக அதிகரித்துள்ளது.மதிப்பீட்டு மாதத்தில் தேங்காய் (கொப்பரை), தக்காளி, காலிஃப்ளவர் போன்றவற்றின் விலை அதிகரித்துள்ளது. வெங்காயம், உருளைக்கிழங்கு, பூண்டு, துவரம் பருப்பு, கொண்டைக்கடலை ஆகியவற்றின் விலை குறைந்துள்ளது.

எரிசக்தி துறை: மின்சாரம் மற்றும் எரிவாயு பிரிவில் பணவீக்கம் 1.52 சதவீதத்திலிருந்து 1.65 சதவீதமாக மட்டுமே உயர்ந்துள்ளது. 'மத்திய கிழக்கு போர்ச்சூழலால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்த போதிலும், பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தாமல் மத்திய அரசு கட்டுப்படுத்தியுள்ளது பாராட்டுக்குரியது' என இந்திய வர்த்தக, தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு (அசோசெம்) தலைவர் நிர்மல் கே.மிண்டா தெரிவித்துள்ளார்.

நகரம், கிராமப்புற நிலை: கடந்த மாதம் போன்றே நகர்ப்புறங்களைவிட கிராமப்புறங்களில் பணவீக்கத்தின் தாக்கம் அதிகமாக உணரப்பட்டுள்ளது. நகர்ப்புற பணவீக்கம் 3.02 சதவீதத்திலிருந்து 3.11 சதவீதமாக உயர்ந்த நிலையில், கிராமப்புறங்களில் 3.37 சதவீதத்திலிருந்து 3.63 சதவீதமாக கணிசமாக அதிகரித்துள்ளது.

பணவீக்க விகிதத்தில் மாநிலங்களுக்கு இடையே பெரும் வேறுபாடு காணப்படுகிறது. தெலங்கானா மாநிலம் 5.83 சதவீதத்துடன் முதலிடத்தில் உள்ளது. அதேநேரம், வடகிழக்கு மாநிலமான மிசோரமில் பணவீக்கம் மிகக் குறைவாக 0.66 சதவீதம் பதிவாகியுள்ளது.

# ஈரான் துறைமுகத்தை அமெரிக்கா முற்றுகையிட்டால் பதற்றம் அதிகரிக்கும்: சீனா

**பெய்ஜிங், ஏப்.15:**

ஈரான் துறைமுகத்தை அமெரிக்கா முற்றுகையிடுவது பதற்றத்தை அதிகரிக்கும் என சீனா தெரிவித்துள்ளது.



மேற்காசியப் போரில் ஏற்கனவே பலவீனமாக உள்ள போர்நிறுத்த ஒப்பந்தத்தை சீர்குலைக்கும் விதமாக ஈரான் துறைமுகத்தை அமெரிக்கா முற்றுகையிடுவது பதற்றத்தை அதிகரிக்கும் என சீனா தெரிவித்துள்ளது.

சீன வெளியுறத்துறை செய்தித் தொடர்பாளார் குவோ ஜியாகுன் இதுபற்றி பேசுகையில், ”ஹோர்முஸ் நீரிணையில் கப்பல்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த அமெரிக்கா எடுக்கும் நடவடிக்கைகள் பதற்றத்தைத் தணிக்காமல் அதை மேலும் அதிகரிக்கும்.

அமெரிக்கா ராணுவம் ஈரான் துறைமுகத்தை முற்றுகையிடுவது ஏற்கனவே பலவீனமாக உள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தை மேலும் சீர்குலைக்கும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேற்கு ஆசியாவில் அமைதி மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்த நான்கு அம்ச கட்டமைப்பு நடவடிக்கைகளை சீன அதிபர் ஷி ஜின்பிங் முன்மொழிந்துள்ளதாக செய்தி வெளியானது. இந்த முன்மொழிவில் அமைதியான சகவாழ்வுக்கான மரியாதை, தேசிய இறையாண்மை, சர்வதேச சட்டம், வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு முன்னுரிமைகளுக்கிடையே சிறந்த ஒருங்கிணைப்பு ஆகியவை வலியுறுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்தின் இளவரசருடன் பெய்ஜிங்கில் நடந்த சந்திப்பின்போது சீன பிரதமர் இந்த முன்மொழிவு பற்றி விவரித்துள்ளார்.

ஹோர்முஸ் நீரிணைப்பகுதியில் அமெரிக்கக் கடற்படையின் யுஎஸ்எஸ் ஆபிரகாம் லிங்கன் என்ற விமானம் தாங்கி கப்பல் உள்பட சுமார் 15 கப்பல்கள் ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், இந்தக் கப்பல்கள் எங்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்பது பற்றி சரியான விவரங்கள் வெளியாகவில்லை. சில நாள்களுக்கு முன் பாகிஸ்தானில் நடைபெற்ற அமைதி பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையில் ஈரான் துறைமுகங்களை முற்றுகையிட அமெரிக்க அதிபர் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

# ஹார்மூஸ் பிரச்சனையை தீர்க்க பிரான்ஸ், பிரிட்டன் புதிய முன்னெடுப்பு

**நியூயார்க், ஏப்.15:**

ஈரான்-அமெரிக்கா இடையே பாகிஸ்தானில் நடைபெற்ற அமைதி பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது. 21 மணி நேர ஆலோசனைக்கு பிறகு எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை.ஈரான் தரப்பில் 10 அம்ச திட்டம் முன்வைக்கப்பட்ட நிலையில், அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபடக்கூடாது, ஹோர்முஸ் ஜலசந்தியை முழுமையாக கட்டுப்படுத்தக்கூடாது என அமெரிக்கா சில நிபந்தனைகளை விதித்தது. இதில் இரு நாடுகளுக்கு இடையேயும் உடன்பாடு ஏற்படவில்லை.இதனைத் தொடர்ந்து, ஹார்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் அனைத்து கப்பல்களும் முற்றுகையிடப்படும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

ஈரான் - அமெரிக்கா பேச்சுவார்த்தைக்குப் பிறகு, எரிபொருள் வர்த்தகம் சீராகும் என உலக நாடுகளின் தலைவர்கள் எதிர்பார்த்து வந்த நிலையில், பேச்சுவார்த்தை தோல்வி ஏமாற்றத்தை கொடுத்துள்ளது. இந்த நிலையில், ஹார்மூஸ் பிரச்சனையை தீர்க்க பிரான்ஸ், பிரிட்டன் புதிய முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளன. இது தொடர்பாக பிரான்ஸ் அதிபர் மேக்ரான் கூறுகையில், ஹோர்முஸ் நீரிணையில் பாதுகாப்பான மற்றும் தடையற்ற கப்பல் போக்குவரத்தை மீட்டெடுக்க உலக நாடுகளை ஒன்றிணைக்க முயற்சி மேற்கொள்ளப்பட உள்ளது. மத்திய கிழக்கில் பதட்டங்களைக் கையாள்வதற்கான முயற்சியின் ஒரு பகுதியே இந்த நடவடிக்கையாகும். பிரான்சும், இங்கிலாந்தும் வரும் நாட்களில் ஒரு மாநாட்டை நடத்தும்.பன்னாட்டு அளவிலான முன்னெடுப்பிற்கு பிரான்சும், இங்கிலாந்தும் கூட்டாகத் தலைமை தாங்கும்” என்று தெரிவித்துள்ளார்.

# “நாங்கள் முயன்றோம்; இப்போது முடிவு ஈரான் வசம்” - ஜே.டி.வான்ஸ்

**வாஷிங்டன், ஏப்.15:**

கடந்த வாரம் அமெரிக்கா-ஈரான் இடையே இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டது. இதையடுத்து கடந்த சனிக்கிழமை அன்று பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கியது. சுமார் 21 மணி நேரம் இந்த பேச்சுவார்த்தை நீடித்தது. இருப்பினும் இதில் சுமூக முடிவு எட்டப்படவில்லை. பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. இந்த சூழலில் ஜே.டி.வான்ஸ், “அமைதிப் பேச்சுவார்த்தையின் இறுதியில் அதில் முடிவு எதுவும் எட்டப்படவில்லை என்றாலும் நல்ல முன்னேற்றம் கண்டோம். இரண்டு தரப்பும் ஒற்றை புள்ளியை நோக்கி நகர்ந்தோம். இருப்பினும் அதில் ஈரானின் நகர்வு போதுமானதாக இல்லை. இப்போது முடிவு ஈரான் வசம் உள்ளது. ஈரானின் அணுசக்தி செயல்பாடு சார்ந்து அமெரிக்காவின் முன்மொழிவை பூர்த்தி செய்வது இரு நாடுகளுக்கும் சிறந்ததொரு ஒப்பந்தத்துக்கு வழிவகுக்கக்கூடும்” என்று தெரிவித்துள்ளார்.

# தன்னை இயேசுவாக சித்தரிக்கும் ஏஐ படத்தை பதிவிட்ட ட்ரம்ப்


**வாஷிங்டன், ஏப்.15:**



போப் மிகவும் தாராளவாதி என்றும் தீவிர இடதுசாரிகள் என்று அழைப்பவர்கள் மீது அதிக அனுதாபம் கொண்டவர் என்றும் குற்றம் சாட்டினார். குறிப்பாக அமெரிக்கா மற்றும் வெளியுறவுக் கொள்கை தொடர்பான பிரச்சினைகளில் அரசியல் வர்ணனை செய்வதை விடுத்து, போப் தனது ஆன்மிகக் கடமைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் ட்ரம்ப் தெரிவித்தார். இந்த விமர்சனம் வெளிவந்த சில மணி நேரங்களுக்குப் பிறகு, செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மூலம் உருவாக்கப்பட்ட தனது படத்தை சமூக வலைதளத்தில் ட்ரம்ப் பதிவிட்டார். அதில் இயேசுவைப் போன்ற தோற்றத்தில் உள்ள அவர், விவிலிய காலத்து அற்புதத்தைச் செய்வது போல சித்தரிக்கப்பட்டிருந்தார். அந்த படத்தில், அவர் நீண்ட அங்கிகளை அணிந்து, நோய்வாய்ப்பட்ட ஒரு மனிதன் மீது தனது கையை வைத்திருப்பது போலவும், பார்வையாளர்கள் மரியாதையுடன் பார்த்துக் கொண்டிருக்க அவரது விரல்களிலிருந்து ஒளி வீசுவது போலவும் காட்டப்பட்டிருந்தது. இந்தத் தோற்றம், லாசரஸை இயேசு உயிர்த்தெழுப்பிய விவிலியக் கதையை எதிரொலித்தது. அப்படத்தைச் சுற்றியுள்ள படங்களில் அமெரிக்கக் கொடிகள், ராணுவ விமானங்கள், பறக்கும் கழுகுகள் மற்றும் வானத்தில் தேவதூதர்களின் உருவங்கள் இடம்பெற்றிருந்தன. போப் பற்றிய விமர்சனத்துக்குப் பிறகு இந்தப் படம் வெளியானதால், இது விரைவாக மக்களின் கவனத்தை ஈர்த்தது.

# ஹார்முஸ் நீரிணையை திறக்க ஆசியான் அமைப்பு வலியுறுத்தல்

**ஜகார்த்தா, ஏப்.15:**




ஈரான்-அமெரிக்கா இடையே நடந்த அமைதி பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது உலக நாடுகளிடம் பெரும் கவலையை ஏற்படுத்தி இருக்கிறது. இரு தரப்பும் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தவும், ஹார்முஸ் நீரிணையை திறக்கவும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பான ஆசியான் வலியுறுத்தி இருக்கிறது.

இந்த நாடுகளின் வெளியுறவு மந்திரிகள் காணொலி மூலம் நடத்திய அவசர மாநாட்டில் இந்த கோரிக்கை வெளியிடப்பட்டது. அதன்படி, ‘அனைத்து நாடுகளும் தங்கள் கருத்து வேறுபாடுகளை அமைதியான முறையில் தீர்க்கவும். அனைத்து நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை மதிக்கவும். பொதுமக்கள் மற்றும் உள்கட்டமைப்புகளை பாதுகாக்கவும் வேண்டும்’ என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், துன்பங்களையும் உயிர் இழப்புகளையும் தடுத்தல், கடல்சார் பாதுகாப்பு, கப்பல் மற்றும் வான்வழிப் போக்குவரத்தின் சுதந்திரத்தை உறுதி செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட போர் நிறுத்தத்தை முழுமையாகவும் திறம்படவும் செயல்படுத்துமாறும் அழைப்பு விடுக்கப்பட்டது. மத்திய கிழக்கில் நடந்து வரும் போரின் தாக்கத்தை ஆய்வு செய்வதற்காக சமீபத்திய வாரங்களில் நடத்தப்பட்ட 2-வது மாநாடு இதுவாகும்.

# அமெரிக்கா - ஈரான் போர் எதிரொலி: காண்டம் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

**தெஹ்ரான், ஏப்.15:**

ஈரான் - அமெரிக்கா போரால் சர்வதேச அளவில் எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. அமெரிக்காவின் தாக்குதலுக்கு பதிலடியாக ஈரான் ஹார்முஸ் ஜலசந்தியை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இந்த வழியாக கச்சா எண்ணெய் ஏற்றி செல்லும் கப்பல்களால் கடக்க முடியாத நிலை உள்ளது.

நட்பு நாடுகளின் கப்பல்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும் என்று கூறி ஈரான் ஹார்மூஸ் ஜல்சந்தியை உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. இதனால், சர்வதேச அளவில் எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டு பல்வேறு நாடுகளும் எரிபொருளுக்கு திண்டாடி வருகின்றன.

இந்தநிலையில், ஈரான் - அமெரிக்கா போரால் காண்டம் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் ஆண்டுக்கு 860 மில்லியன் டாலர் புழங்கும் துறையாக காண்டம் உற்பத்தி தொழில்கள் உள்ளன.

ஈரான் போர் காரணமாக பெட்ரோ கெமிக்கல்ஸ் மற்றும் லூப்ரிகண்ட்ஸ் விநியோகம் பாதிப்பட்டுள்ளது. இது காண்டம் தயாரிக்க பயன்படும் முக்கியமான மூலக்கூறுகளில் ஒன்றாக பார்க்கப்படுகிறது. ஆண்டுக்கு 400 கோடி காண்டம்கள் தயாரிக்கும் துறையாக இது உள்ள நிலையில் மூலப்பொருள் பற்றாக்குறையால் உற்பத்தி செலவு அதிகரிக்க உள்ளது. காண்டம் உற்பத்தி இரண்டு முக்கிய மூலப்பொருட்களான சிலிகான் எண்ணெய் மற்றும் அமோனியாவை அதிகமாக சார்ந்துள்ளது.

காண்டம் உற்பத்தி பாதிக்கப்பட்டு உற்பத்தி குறைந்தால் சமூகத்தில் கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# 125 ஆண்டுகளில் முதல் முறை: ஆஸ்திரேலிய ராணுவத்திற்கு பெண் தலைமை

**கான்பெர்ரா, ஏப்.15:**

ஆஸ்திரேலிய வரலாற்றில் 125 ஆண்டுகளில் முதல் முறையாக பெண் ஒருவர் ராணுவத்திற்கு தலைமை தாங்க உள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

அதன்படி லெப்டினன்ட் ஜெனரல் சூசன் கோய்ல் இந்தாண்டு ஜூலை முதல் அந்நாட்டின் ராணுவ தளபதியாகப் பொறுப்பேற்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது ராணுவத் தளபதியாக இருக்கும் லெப்டினன்ட் ஜெனரல் சைமன் ஸ்டூவர்ட்டுக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

2030ம் ஆண்டுக்குள் ராணுவத்தில் பெண்களில் பங்கு 25 சதவீதம் இருக்கவேண்டும் என்று அந்நாட்டு ராணுவம் இலக்கு நிர்ணயித்துள்ளது. அதன் ஒருபகுதியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது ஆஸ்திரேலிய ராணுவத்தில் பெண்களில் பங்கு 21 சதவீதமாகவும், தலைமைப் பொறுப்புகளில் 18.5 சதவீதமும் உள்ளனர். 55 வயதான சூசன் 1987-ல் இராணுவத்தில் சேர்ந்தார். தற்போது ‘கூட்டுத் திறன்களுக்கான’ தலைவராக பணியாற்றி வருகிறார்.

# “அமெரிக்கா-ஈரான் இடையே விரைவில் அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தை”: பாக். அமைச்சர் நம்பிக்கை

**இஸ்லாமாபாத், ஏப்.15:**

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தை மீண்டும் நடைபெறும் என பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான போர் கடந்த வாரம் இடைக்காலமாக நிறுத்தப்பட்டது. இதற்கு இரண்டு தரப்பும் சம்மதம் தெரிவித்தது முக்கிய காரணமாக அமைந்தது. இதைத்தொடர்ந்து கடந்த சனிக்கிழமை பாகிஸ்தானில் அமெரிக்கா, ஈரான் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இது தோல்வியடைந்தது. இதையடுத்து ஹார்முஸ் ஜலசந்தியை முடக்குவதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். இதனால் மேற்காசியாவில் மீண்டும் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த சூழலில் அண்மையில் பாகிஸ்தான் அமைச்சர் கவாஜா ஆசிப் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், “பேச்சுவார்த்தையில் நேர்மறையான முன்னேற்றம் காண்கிறோம். தற்போது இந்த முயற்சி சரியான திசையை நோக்கியுள்ளதாக கருதுகிறோம். விரைவில் அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தையை எதிர்நோக்குகிறோம். மேலும், இது எல்லாம் இறைவனிடம் இருக்கிறது” என தெரிவித்தார்.

அமெரிக்கா முன்வைத்த சில நிபந்தனைகளை ஈரான் ஏற்கவில்லை என்பதால் பேச்சுவார்த்தையில் சுமூக முடிவு எட்டப்படவில்லை என அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் தெரிவித்தார். பேச்சுவார்த்தை தோல்வி அடைய அமெரிக்கா தான் காரணம் என ஈரான் குற்றச்சாட்டு வைத்திருந்தது. கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து தாக்குதல் நடத்தின. இதற்கு பதிலடி தரும் வகையில் வளைகுடாவில் உள்ள அமெரிக்காவின் நட்பு நாடுகள் மற்றும் இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இந்த நிலையில் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே போர் நிறுத்தம் சார்ந்து பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்தது. இதனால் இடைக்கால போர் நிறுத்தம் அமலானது.

# மத்திய கிழக்கு துறைமுகங்களை தாக்குவோம்: ஈரான் ராணுவ மூத்த தளபதி இப்ராகிம் பகிரங்க எச்சரிக்கை



**தெஹ்ரான், ஏப்.15:**

ஈரான் ராணுவ மூத்த தளபதி லெப்டினென்ட் கர்னல் இப்ராகிம் ஸோல்பகாரி டெஹ்ரானில் நேற்று கூறியதாவது: எங்கள் எதிரிகளின் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க அனுமதி வழங்கமாட்டோம். இந்த ஜலசந்தி தொடர்ந்து எங்களின் கட்டுப்பாட்டில் மட்டுமே இருக்கும். சர்வதேச சட்ட விதிகளுக்கு எதிராக அமெரிக்க ராணுவம் செயல்பட்டு வருகிறது. ஹார்முஸ் ஜலசந்தியை மூடுவோம் என்று அமெரிக்கா அறிவித்திருப்பது, கடல் கொள்ளைக்கு சமம் ஆகும்.

ஈரான் துறைமுகங்கள் தாக்கப்பட்டால் பெர்சிய வளைகுடா, ஓமன் கடல் பகுதியில் உள்ள அனைத்து துறைமுகங்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகும். எங்கள் துறைமுகங்கள் குறிவைக்கப்பட்டால், மத்திய கிழக்கு நாடுகளின் துறைமுகங்களை மிகக் கடுமையாக தாக்குவோம். இவ்வாறு இப்ராகிம் தெரிவித்தார்.

போர் மூளும் அபாயம்: இதுதொடர்பாக சர்வதேச பாதுகாப்பு நிபுணர்கள் கூறியதாவது: ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் அமெரிக்க போர்க்கப்பல்கள் நுழைந்தால் மோசமான விளைவுகள் ஏற்படும். அமெரிக்கா, ஈரான் இடையேயான போர் நிறுத்தம் முடிவுக்கு வந்து மீண்டும் மிகப்பெரிய அளவில் போர் மூளும். ஈரான் ராணுவத்திடம் மிகப்பெரிய போர்க்கப்பல்கள் இல்லை. ஆனால் 5,000-க்கும் மேற்பட்ட அதிவிரைவு போர் படகுகள் உள்ளன. இந்த படகுகள் மூலம் ஈரான் ராணுவம் கொரில்லா தாக்குதல்களை மேற்கொள்ளும்.

மேலும் கடல் கண்ணி வெடிகள், ட்ரோன்கள், ஏவுகணைகள் மூலமும் அமெரிக்க போர்க்கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படக்கூடும். ஈரான் எல்லையில் இருந்து 10 மைல் தொலைவு வரையிலான பகுதிக்குள் நுழையும் போர்க்கப்பல்கள், எதிரிகளின் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்த அந்த நாட்டு ராணுவ தலைமை ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்து உள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஓபன்ஏஐ நிறுவனர் சாம் ஆல்ட்மேன் வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீச்சு!

**வாஷிங்டன், ஏப்.15:**



அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாகாணத்திலுள்ள ஓபன்ஏஐ நிறுவனர் சாம் ஆல்ட்மேனின் ஆடம்பர இல்லத்தின் மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.ஆல்ட்மேனைக் கொல்ல இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் நிலையில் இதில் யாருக்கு காயம் ஏற்படவில்லை.

பெட்ரோல் குண்டு வீசிய 20 வயதான டேனியல் மோரேனோ-காமா என்ற நபர் கைது செய்யப்பட்டு அவர்மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. அவரிடம் ஏஐ (செயற்கை நுண்ணறிவு)-க்கு எதிரான ஆவணங்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

“அரசியல், தொழில்நுட்பம் அல்லது வேறு எந்த விஷயமாக இருந்தாலும் கருத்து வேறுபாட்டை வெளிப்படுத்த வன்முறை ஒரு வழியாகாது. சொத்துக்களை சேதப்படுத்தியது, உயிருக்கு அச்சுறுத்தல் தரக்கூடிய இந்தக் குற்றச்சாட்டு மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்” என்று தலைமை வழக்குரைஞர் டோட் பிளாங்க் தெரிவித்துள்ளார்.

சாம் ஆல்ட்மேன் வீட்டில் பெட்ரோல் குண்டை வீசிய குற்றவாளி பின்னர் அங்கிருந்து ஓபன்ஏஐ நிறுவனத்தின் தலைமையகத்திற்குச் சென்று அங்குள்ள கண்ணாடி கதவுகளை உடைக்க முயன்றுள்ளார்.

அவர் கைதுசெய்யப்பட்டபோது பறிமுதல் செய்யப்பட்ட ஆவணத்தில் செயற்கை நுண்ணறிவு நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள் மற்றும் முதலீட்டாளர்களைக் கொல்வது பற்றியும் அவர்கள் மீது தாக்குதல் நடத்துவது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

செல்வாக்கு மிக்க நபர்களுக்கு எதிராக அமெரிக்காவில் சமீபகாலத்தில் நடைபெற்ற முக்கியத்துவம் வாய்ந்த தாக்குதல் இதுவாகும்.

ஏஐ தொழில்நுட்பத்துக்கு எதிராக அமெரிக்காவில் தொடர்ந்து போராட்டம் நடந்து வருகின்றது. இந்தத் தொழில்நுட்பத்தால் ஆயிரக்கணக்கானோர் வேலை இழந்து வருவதால் இது சமூகத்துக்கு அச்சுறுத்தல் என போராட்டக்காரர்கள் கூறுகின்றனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பிறகு தன்னுடைய வாழ்க்கைத் துணை மற்றும் குழந்தையுடன் இருக்கும் புகைப்படத்தை சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்த சாம் ஆல்ட்மேன், “அடுத்தமுறை எங்கள் வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீசுபவரை இது தடுக்கும் என்ற நம்பிக்கையில் இதனைப் பகிர்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

”தொழில்நுட்பத்துக்கு எதிரான உணர்வுகளை நான் புரிந்துகொள்கிறேன். எல்லா நேரத்திலும் ஒருவருக்கு தொழில்நுட்பம் நல்ல விதத்தில் இருப்பதில்லை.

ஆனால் தொழில்நுட்ப வளர்ச்சி உங்கள் குடும்பம் மற்றும் என் குடும்பத்தின் எதிர்காலத்தை நம்பமுடியாத அளவிற்குச் சிறந்ததாக மாற்றும் என நான் நம்புகிறேன்” என்றும் பதிவிட்டுள்ளார்.

ஓபன்ஏஐ நிறுவனத்தின் மதிப்பு கடந்த மாதம் 71 லட்சம் கோடியாக (இந்திய மதிப்பில்) கணக்கிடப்பட்டுள்ளது

# “தொகுதி வரையறையால் தமிழ்நாடு பாதிக்கப்பட்டால்” இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துவிடுவோம்





# மகளிர் இடஒதுக்கீடு: “இனியும் தாமதம் கூடாது”: பிரதமர் மோடி

# “மகளிருக்கான 33% இடஒதுக்கீட்டை ஸ்டாலினால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை”



# ஈரான் கச்சா எண்ணெய்யுடன் இந்தியா வந்த 2 கப்பல்கள்

## தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் பாதுகாப்பு பணியில் 295 கம்பெனி துணை ராணுவப் படையினர்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 15.04.2026 புதன்கிழமை இலவச இ-பேப்பர்